
கொலம்பியா
ரிகார்டுகளில்
மாடர்ன் தியேட்டர்ஸ்
ராஜ-ராஜேஸ்வரி
டாக்கி பாட்டுகள்
K. L. V. வசந்தா
பாடிய
GE. 6220 { தினமே
பூரண நிலவினிலே
GE. 6221 { குக்கு கூ கூ
என்றெனதன்பர்
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.





லைப்பாய் பழக்கத்தையும் அவன் அறிந்திருக்கிறான்!

இப்பொழுது அவன் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பீடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப் பளித்திருக்கிறதென்பதாக அவன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.



லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.

அது ஒரு நல்ல பழக்கம்.

L. 77-33 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி
பொருளடக்கம்

கலை 4 } இதழ் 30 }

1945 மார்ச் 4

{ தாரண ௵ மாசி 21

பெர்லினுக்கு யார் முதலில் போய்ச் சேர்வது என்ற போட்டி ஒரு பக்கத்தில் அமெரிக்க-பிரிட்டிஷ் சைன்யத்துக்கும், மற்றொரு பக்கத்தில் ருஷ்ய சைன்யத்துக்கும் கொஞ்ச காலமாக நடந்து வருகிறது.

ருஷ்ய சைன்யத்துக்குள்ளேயே மார்ஷல் ஜுகாவ், மார்ஷல் கோனீவ் என்னும் இரண்டு ருஷ்ய சேனைத் தலைவர்களுக்குள் பேர்ப்படி போட்டி பலமாக நடக்கிறது. ஜுகாவும், கோனீவும் பெர்லினுக்காகப் போட்டி போடுவதுடன் நிற்காமல் நமது கல்கி அட்டையில் இடம் பெறுவதற்கும் போட்டி இட்டார்கள். அந்தப் போட்டியில் மார்ஷல் ஜுகாவ்தான் ஜயித்தார்.

ஜெர்மன் சேனைகளை நிர்மூலம் செய்வதோடு, பரம்பரை தர்மம், தனிமுறைத் தத்துவம் முதலிய பழங்காலக் கொள்கைகளையும் ருஷ்ய சேனாதிபதிகள் நாசம் செய்து வருகின்றனர்.

சாதாரண ஆலைத் தொழிலாளி ஒருவரின் புதல்வர் ஜுகாவ். அவருக்கு இப்போது வயது 49. மாஸ்கோவின் அருகில் நாஜிப் படையைத் தடுத்து நிறுத்தியவரும், உலகமே அதிசயிக்கும்படியாக ஸ்டாலின்கிராட் கோட்டையை விடாமல் பாதுகாத்தவரும் இவர்தான். ருஷ்ய சேனாபதி மார்ஷல் ஸ்டாலினுக்கு அடுத்தபடியாக உதவி சேனாபதி என்னும் மகத்தான பதவியை மார்ஷல் ஜுகாவ் தற்சமயம் வகித்து வருகிறார்.



கட்டுப்பாட்டு விலையினால்

உற்பத்தியாளருக்கு நியாயமான விலை கிடைக்கும். சில்லறை வியாபாரிகளுக்கு நியாயமான இலாபங்கிடைக்கும். நீங்களும் எந்தப் பொருளையும் நியாயமான விலைக்கு வாங்கலாம்.

பாதரட்சையின் விலைகள்


இப்போது கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன

ரூ. 2 முதல் ரூ. 18க்கு மிஞ்சி விலை கிடையாது

1944-ம் வருஷத்திய, பாதரட்சைகளின் கட்டுப்பாட்டுக் கட்டளையின்படி, இறக்குமதி செய்யப்பட்டவை, ஆர்டர் கொடுத்து அளவுப்படி செய்யப்பட்டவை தவிர, மற்றெல்லா வகைப் பாதரட்சைகளும் 1944ஆம் ஜூலை 29ம் முதல் கட்டுப்பாட்டு விலைகளுக்கு உட்பட்டவை.

முக்கியமான வகைப் பாதரட்சைகள் எல்லாவற்றிற்கும் உச்ச விலைகள் நிர்ணயிக்கப்பட்டுவிட்டன. "ப்ளெக்ஸ்" "பாட்டா" ஆகிய செருப்பு வகைகள் ஒவ்வொன்றிற்கும் விலைகள் குறிப்பாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. முழு விலைப் பட்டியல், டில்லி, சிவில் ஸப்ளை, டைரக்டரிடமிருந்தாவது, அரசாங்க வெளியீடுகளை விற்க அனுமதிக்கப்பட்டிருக்கும் ஏஜெண்டுகளிடமிருந்தாவது 1 அணா விலைக்குத் தபாற் செலவின்றிக் கிடைக்கும். வியாபாரிகள் இந்த விலைப் பட்டியலை கடையில் முக்கியமான இடத்தில் கட்டித் தொங்கவிட்டிருக்க வேண்டும். ரகம், பெயர், அளவு, இனம், விலை ஆகியவை, ஒவ்வொரு பாதரட்சையிலும் முத்திரை இடப்பட்டிருக்க வேண்டும்.

உண்மையை உணர்ந்து உங்கள் உரிமையைக் கேளுங்கள்



அதிக விலை கொடுக்காதிருங்கள். அதிக விலை நியாய விரோதமாக வசூலிக்கப்பட்டால், ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்குத் தெரிவியுங்கள். இறக்குமதி செய்யப்பட்டவையும், அளவுகொடுத்துச் செய்யப்பட்டவையும் தவிர, மற்ற பாதரட்சை எதுவும் ரூ. 18-க்கு அதிகமில்லை.

நியூ டில்லி கைத்தொழில் சிவில் சப்ளை இலாகா வெளியிட்டது.

AAA—1212—A—TM.

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 30

என்ன சேதி?

மந்திரக் கோல்

புது வருஷத்துக்கு இந்திய சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தை இந்திய சட்ட சபையில் ஸர் ஜெரிமி ரெயிஸ்மான் சமர்ப்பித்தார்.

ஆறு வருஷத்திற்கு முன்பு, இந்திய சர்க்காரின் வருஷ வருமானமும் வருஷாந்திரச் செலவும் ஏறக்குறைய 100 கோடி ரூபாயாக இருந்தது. செலவை விட வருமானம் ஒரு கோடி அல்லது இரண்டு கோடி குறைவாக இருந்தால் 'போச்சு, போச்சு! இந்தியாவின் பொருளாதாரமே போச்சு!' என்று அலறிவிட்டு, அதை ஈடு செய்யப் புதிய வரிகள் போடுவார்கள்.

சென்ற வருஷத்தில் இந்தியாவின் வருஷ வருமானம் 356 கோடி ரூபாய். இந்த வருஷத்தில் எதிர் பார்க்கப்படும் வருமானம் 361 கோடி ரூபாய். இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் எப்படிப் பெருகிற்று? இந்திய சர்க்காரின் பொக்கிஷ அங்கத்தினரிடம் ஏதோ ஒரு மாய மந்திரக்கோல் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறதல்லவா? உண்மைதான்; அந்த மாய மந்திரக் கோல் வேறொன்றுமில்லை. நோட்டுக்களை அச்சடிக்கும் சர்க்கார் யந்திரந்தான். மேற்படி அச்சு யந்திரங்களைக் கொண்டு ஏராளமான நோட்டுக்களை அச்சடித்துப் புழக்கத்துக்கு விடுகிறார்கள். திரும்பவும் அவற்றை வரியாகப் பெற்றுக் கொள்கிறார்கள். யுத்த காலத்தை முன்னிட்டு இந்த அசாதாரண முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.


சமாதான காலத்தில்

சமாதான காலத்திலும் மேற்கண்ட முறையை அனுசரித்துத் தேசத்தில் தாராளமாகப் பணம் புழங்கும்படி செய்யக் கூடாதா? செய்யலாம். தேசிய சர்க்கார் இருந்தால் செய்யலாம். இம்மாதிரி தாராளமாய்ப் பணம் புழங்கச் செய்து, சர்க்கார் வருமானத்தை அதிகம் செய்து கொள்ளலாம்; கள்ளுக் கடைகளை மூடலாம்; நிலவரியைத் தள்ளலாம்; கைத்தொழில்களையும் வர்த்தகத்தையும் வளர்க்கலாம். பொருளாதாரத்தில் மிகப் பின்வாங்கியிருந்த ருஷ்யா முதலிய தேசங்களில் மேற்படி முறையைக் கையாண்டுதான், தேசத்தில் சுபிட்சம் பெருகச் செய்தார்கள். கைத்தொழில்களை வளர்த்தார்கள்.


யுத்தத்திற்குப் பின்

யுத்தத்திற்குப் பிறகு, இந்தியாவில் ஏதோ ஒரு விதமாகச் சுயாட்சி ஏற்பட்டு விட்டால் ஒரு வேளை மேற்படி முறையைக் கையாண்டு தேசத்தில் தொழில்களையும் சுபிட்சத்தையும் பெருக்கி விடலாமல்லவா? அப்படி யெல்லாம் அதிகமாக நடந்து விடாதபடி சில ஏற்பாடுகளை இப்பொழுதே முன் ஜாக்கிரதையாக இந்தியாவை ஆளும் அதிகாரவர்க்க சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறார்கள். 1942-44ல் வரவை விட அதிகச் செலவு 190 கோடி ரூபாய். 1944-45ல் அதிகப்படி செலவு 156 கோடி ரூபாய். வரப்போகும் வருஷத்தில் எதிர்பார்க்கப்படும் அதிகப்படி செலவு 163 கோடி ரூபாய். கடைசியில், கணக்குப் பார்க்கும் போது, சென்ற வருஷமும் இந்த வருஷமும் துண்டு விழும் தொகை அதிகமாகவும் ஆகும். மொத்தத்தில் பல நூறு கோடி ரூபாய் கடனை இந்தியாவின் தலையில் யுத்தம் முடிவதற்குள் ஏற்றிவைத்து விடுவார்கள்! யுத்த காலத்தில் நமது உண்மையான தேசத்தலைவர்கள் இந்திய சர்க்கார் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளாததினால் ஏற்படும் விபரீதம் எங்கே தான் போய் முடியப் போகிறதோ, கடவுளுக்குத்தான் தெரியும்.

நிகழ்ச்சிச் சித்திரம் - உம்மன்




சிந்து மாகாணத்தில், பிரதம மந்திரி ஜனாப் ஹிதயத்துல்லாவும், லீக் கட்சித் தலைவரான ஜனாப் சையத்தும் ஒத்துழைத்தபோது ஜனாப் ஜின்னாவின் பாடு கன குஷியாக இருந்தது....


....ஆனால், இந்த இருவரும் சண்டைபோட்டுக் கொண்டிருக்கும் இப்பொழுது அவர் பாடு வெகு திண்டாட்டமாகி விட்டது.

நியாயந்தானோ? நீர் சொல்லும்!

நியாயம் எங்கே? நீதி எங்கே? நியாயமும் நீதியும் எங்கே போய் விட்டன? — என்று இவ்விதம் உலகில் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் நாம் ஒரு சந்தோஷச் செய்தியைத் தெரியப்படுத்துகிறோம். நியாயமும் நீதியும் தற்சமயம் எங்கே யிருக்கின்றன என்னும் பரம இரகசியத்தை நாம் கண்டு பிடித்து விட்டோம். நியாய தேவதையை இனிமேல் யாரும் வானுலகில் தேட வேண்டாம்! நீதி தெய்வத்தைத் தேடி இனிமேல் கோர்ட்டுகளில் போய் அலைய வேண்டாம்! சட்டப் புத்தகங்களில் பார்க்க வேண்டாம். "உலகிலே நீதி இல்லையா? நியாயம் இல்லையா!" என்று முறையிட வேண்டாம்!

நியாயம் இருக்கிறது; நீதி இருக்கிறது. இரண்டும் இந்த உலகிலேதான் இருக்கின்றன. நமது அன்பார்ந்த பிரதம மந்திரி கனம் வின்ஸ்டன் சர்ச்சில் அவர்களிடம் நீதியும் நியாயமும் இந்தக் கலியுகத்திலே அடைக்கலம் புகுந்திருக்கின்றன!

யமலோகத்துக்கு வரும் உயிர்களுக்கெல்லாம் யமதர்ம ராஜா எப்படி நீதியும் நியாயமும் அணுவளவும் பிறழாது வழங்குகிறாரோ, அந்தப்படியே இந்த உலகத்தில் வாழும் மாந்தர்களுக்கெல்லாம் நீதியும் நியாயமும் வழங்க நமது வின்ஸ்டன் சர்ச்சில் இருக்கிறார்! இனி என்ன கவலை? இனிமேல் என்ன பயம்?

• • •

நியாயமும் நீதியும் வின்ஸ்டன் சர்ச்சிலாக உருவெடுத்திருக்கின்றன என்னும் இரகசியத்தை நாம் எப்படிக் கண்டு பிடித்தோமென்றால், பிப்ரவரி 27உ பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் (பார்லிமெண்டு சபையில்) கனம் வின்ஸ்டன் சர்ச்சில் பேசிய பேச்சிலிருந்துதான். இத்தனை நாளும் மேற்படி செய்தியை சர்வ ஜாக்கிரதையாக நம்மிடமிருந்தெல்லாம் ஒளித்து வைத்துக் கொண்டிருந்த மனுஷர் எப்படியோ மெய்மறந்து போய் பிப்ரவரி 27உ புண்ணிய தினத்தில் இரகசியத்தை வெளிப்படுத்தி விட்டார். கிரிமியாத் தீவில் 'யால்ட்டா' நகரில் பெரிய மூவர் மகாநாடு கூடியதைப் பற்றிச் சர்ச்சில் பேசினார். அம் மகாநாட்டிலும் அதற்குப் பிறகும், உலகத்திலே நியாயத்தை நிலை நாட்டுவதற்காகத் தாம் படும் பாட்டை விஸ்தரித்து, அதன் மூலம் 'நியாய தேவதையின் அவதாரம் நானே!' என்பதைக் குறிப்பாக வெளிப்படுத்தி விட்டார்.

உலகத்துக்கு நியாயம்

கலியுக மும்மூர்த்திகளான சர்ச்சிலும், ஸ்டாலினும், ரூஸ்வெல்ட்டும் சேர்ந்து அவர்கள் இஷ்டப்படி வைத்ததே சட்டமாய், உலகத்தை ஆளப் போகிறார்கள் என்று யாரும் பயப்பட வேண்டியதில்லையாம்! உலக விவகாரங்களையெல்லாம் வெகு வெகு நியாயமாக நடத்தி வைப்பதற்காக அமெரிக்காவிலுள்ள ஸான் பிரான்ஸிஸ்கோ நகரில் ஒரு சர்வதேச மகாநாடு கூட்டப் போகிறார்களாம். நேசக் கட்சியை நேற்று பிப்ரவரி 28உக்குள் சேர்ந்த தேசங்களெல்லாம் மேற்படி மகாநாட்டுக்கு அழைக்கப்படுமாம். எல்லாம் சர்வ நியாயமாக நீதி முறை தவறாது நடத்தி வைக்கப்படுமாம்!

போலந்துக்கு நியாயம்

சர்ச்சில் துரை நியாயத்தை நிலை நாட்டி யிருப்பது முக்கியமாகப் போலந்து விஷயத்திலே என்று அவருடைய பேச்சிலிருந்து தெரிய வருகிறது. அந்த நியாயமான ஏற்பாடு என்னவென்பதைக் கேளுங்கள்:

இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் போலந்து நாட்டின் எவ்வளவு பிரதேசம் சேர்ந்திருந்ததோ அதில் பாதி ருஷ்யாவுக்குப் போய் விடும். போலந்தின் ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு ருஷ்யாவுக்குப் போய்விடும். போலந்தின் எண்ணெய் உற்பத்தியில் 100-க்கு 85 விதம் ருஷ்யாவுக்குப் போய்விடும்.

மேற்படி ஏற்பாடு கேட்பதற்கு ஏதோ ஒரு மாதிரியா யிருக்கிறதல்லவா? அவ்வளவு நியாயம் இல்லைபோல் தோன்றுகிறதல்லவா? ஆனால் கொஞ்சம்

பொறுங்கள். சர்ச்சில் பேசுகிறார், கேளுங்கள் :—

“பணக்காரத்துக்குத் தலை வணங்கியோ, ஸ்டாலினுக்குப் பயந்து கொண்டோ மேற்படி ஏற்பாட்டை நான் ஒப்புக் கொள்ளவில்லை. நியாயத்துக்கும் நீதிக்கும் கட்டுப்பட்டே ஒப்புக் கொண்டேன். இதைவிட நியாயமான ஏற்பாடு வேறு இருக்கவே முடியாது. நியாயம் வாழ்க! நீதி வெல்க!” என்று சர்ச்சில் துரை பார்லிமெண்டில் கோஷித்தார்.

ரொம்ப ரொம்ப சந்தோஷம். நியாயத்தையும் நீதியையும் இப்படியல்லவா நிலைநாட்ட வேண்டும்! ஆஹா, நமது அன்பார்ந்த பிரதம மந்திரி சர்ச்சில் துரைக்கு ஏதாவது காலைத் தலையை வலித்து விட்டால் நீதியும் நியாயமும் என்ன கதியை அடையும் என்பதை நினைக்கும்போது நமக்குக் கண்ணீர் பொங்குகிறது!

ஆனால், ருஷிய சைன்யம் மட்டும் இவ்வளவு மகத்தான வெற்றிகளை அடைந்திரா விட்டால், மேற்படி நியாயம் சர்ச்சிலுக்குப் புலப்பட்டிருக்குமா என்பது வேறு விஷயம். அதை நாம் இப்போது ஊறிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

பிரான்ஸுக்கு நியாயம்

இன்றைய தினம் உலகில் வாயுள்ள பிள்ளைக்கு உதாரணமாக விளங்கும் தளபதி டிகால் ‘யால்ட்டா’ மகாநாட்டிக்குத் தம்மை அழையாதது பற்றிக் கோபித்துக் கொண்டிருந்தார் அல்லவா? அந்தக் கோபம் காரணமாக, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டைச் சந்திக்கக் கூட மறுத்து விட்டார் அல்லவா? “அப்படியெல்லாம் கோபித்துக் கொள்ள வேண்டாம். பிரான்ஸுக்கும் நாங்கள் நியாயம் வழங்குகிறோம். மேற்கு ஐரோப்பாவில் பிரான்ஸை மிகமிக பலம் பொருந்திய தேசமாக வைத்திருப்பதே எங்கள் மனோரதம்” என்று சர்ச்சில் தெரியப்படுத்தியிருக்கிறார்.

துருக்கிக்கும் நியாயம்

இந்த யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து, துருக்கியானது நேசக் கட்சியாரிடமே அனுதாபம் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு, யுத்தத்தில் மாத்திரம் சேராமல் ‘டிமிக்கி’ கொடுத்துக் கொண்டு வந்தது. யுத்தம் ஆரம்பித்த ஐந்தரை வருஷத்திற்குப் பிறகு, சென்ற வாரத்தில் துருக்கி நேசக் கட்சியின் சார்பில் யுத்தத்தில் சேர்ந்திருக்கிறது.

“ஏதோ இவ்வளவு நாள் கழித்தாவது சேர்ந்ததே, அந்த வரையில் சந்தோஷம். துருக்கிக்கும் நியாயம் செய்வோம். சான் பிரான்ஸிஸ்கோவில் கூடப் போகும் நேசக் கட்சி மகாநாட்டில் துருக்கிக்கும் இடம் உண்டு” என்று சர்ச்சில் தெரிவித்திருக்கிறார்.

துருக்கியோடு சேர்ந்து எகிப்தும் இத்தனை நாளைக்குப் பிறகு ஜெர்மனி மீதும் ஜப்பான்மீதும் போர் தொடுத்திருக்கிறது. எனவே எகிப்திற்கும் மேற்படி நேசக் கட்சி மகாநாட்டில் கௌரவமான இடம் உண்டாம். ஆஹா! நியாயம் என்றால் இதுவல்லவா நியாயம்!

இதாலிக்குக் கூடவாம்!

பாதக முசோலினியின் தலைமையில் அகாரணமாய் யுத்தத்தில் குதித்து, நேசக் கட்சியை முதுகிலே தாக்கிய இதாலிக்குக் கூட சர்ச்சில் நியாயம் வழங்கப் போகிறார் என்பதை அறிந்து நாம் திடுக்கிட்டுப் போனோம். மூர்ச்சையடைந்து விழுந்து விடாமல் மெதுவாகச் சமாளித்துக் கொண்டு பத்திரிகையை உற்றுப் பார்த்து கவனமாகப் படித்தோம். ஆம், வாஸ்தவந்தான்.

“இதாலிய ஸ்திரீ புருஷர்களாகப் பட்டவர்கள், கடலிலும் தரையிலும் எதிரிகளுக்குப் பின்புறத்திலும் செய்து வந்திருக்கும் விலை மதிப்பில்லாத ஊழியங்களைப் பற்றி நான் குறிப்பிடாமல் விட்டால் அது நியாயம் செய்வதாகாது” என்பது சர்ச்சில் வாக்கு.

இன்னும் சிரியா என்ன, லெபானன் என்ன, எதியோப்பியா என்ன, அரேபியாவிலுள்ள பல நாடுகள் என்ன, எல்லாவற்றுக்கும் நியாயம் வழங்கப் போவதாகவும் சர்ச்சில் தெரிவித்திருக்கிறார். இதையெல்லாம் பத்திரிகைகளில் படிக்கப் படிக்க ஆனந்தமாயிருக்கிறது.

இந்தியாவுக்கு....?

உலகத்துக்கும், உலகிலுள்ள சிறிய பெரிய தேசங்கள் எல்லாவற்றுக்கும் நியாயம் வழங்க முன் வந்திருக்கும் சர்ச்சில் இந்தியாவைப் பற்றி ஏன் வாய் திறக்கவில்லை? எல்லோருக்கும் நியாயம் வழங்கிவிட்டு இந்தியாவுக்கு

அருகில் வரும் போது, சர்ச்சிலின் அக்ஷய பாத்திரம் காலியாகி விடுகிறதா?

அல்லது, இந்தியா பெருந் தவறு ஏதாவது செய்து நியாயம் பெறுவதற்கு லாயக்கில்லாமல் போய்விட்டதா?

இத்தாலியைப்போல் இந்தியா நேசக் கட்சியை நெருக்கடியான காலத்தில் பின்னாலிருந்து முதுகில் குத்தவில்லை.

பிரான்ஸைப்போல் எதிரிகளுடைய படை யெடுப்புக்குப் பின் வாங்கி, சரணாகதி யடைந்து, பகைவர்களுடன் ஒத்துழைக்கவில்லை. துருக்கியையும் எகிப்தையும் போல் ஐந்து வருஷம் காத்திருந்து, கடைசியில் ஜெயிக்கிற கட்சியில் குதிக்கவில்லை.

யுத்தத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே இந்தியா எல்லா வகைகளிலும் நேசக் கட்சிக்கு உதவி செய்து வந்திருக்கிறது.

கோடானு கோடி ரூபாய் பெறுமான யுத்த சாமக் கிரியைகளையும் உணவுப் பொருள்களையும் நேசப் படைகளுக்குக் கொடுத்து உதவி வந்திருக்கிறது.

இருபத்தைந்து லட்சம் இந்திய வீரர்கள் சைன்யத்தில் சேர்ந்து நேசக் கட்சிக்காக உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருந்து வருகிறார்கள்.

இந்தியாவுக்கு நேரிடையான சம்பந்தம் எதுவும் இல்லாத யுத்தத்திற்காக, இந்தியா இவ்வளவும் செய்து வருகிறது!

ஆனாலும், இந்தியாவுக்கு நீதி வழங்க வேண்டுமென்ற உணர்ச்சி சர்ச்சிலுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தியா மட்டும் அப்படி என்ன பாவத்தைச் செய்தது?

சென்ற நாற்றைம்பது வருஷங்களாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து பிரிட்டனுக்கு அளவற்ற செல்வத்தையும் செல்வாக்கையும் அளித்து வருவதைத் தவிர வேறு என்ன பாவம் செய்தது?

சர்ச்சிலைப் பார்த்துக் கேட்கிறோம்:

“நியாயந்தானோ நீர் சொல்லும் -
ஓய் சர்ச்சிலே உமது
நீதிக்கு அடுக்குமோ?”

அயல் நாட்டுப் பிரமுகர்கள் —1.

ரகளைக்கார ட்ரூ பியர்ஸன்

பத்திரிகை உலகத்தில் திடீர், திடீரென்று வெடி குண்டுகளைத் தூக்கிப் போட்டு, பெரிய பெரிய அரசியல் வாதிகளையும் ராஜ தந்திரிகளையும் கதிகலங்க அடிப்பவர்களில், அமெரிக்காவின் ட்ரூ பியர்ஸன் இன்று முதன்மை ஸ்தானம் வகித்து வருகிறார்.


அமெரிக்காவின் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டும், பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும் இவரைக் கண்டு நடுங்குவதைப் போல் வேறு யாருக்கும் பயப்படுவதில்லை. இந்தியாவுக்கு அமெரிக்காவின் தூதராக வந்திருந்த பிலிப்ஸின் அந்தரங்கக் கடிதத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்தவர் இவர்தான். அமெரிக்கா இந்தியாவுக்கு அனுப்பிய தானியக் கப்பலை பிரிட்டிஷார் தடுத்து விட்டார்கள் என்ற செய்தியை வெளியிட்டு நாகரிக உலகத்தைப் பயங்கரத்துக்குள் ஆழ்த்தியவரும் இந்த ட்ரூ பியர்ஸன்தான்!



இவருடைய கட்டுரைகளை அமெரிக்காவில் எத்தனையோ பத்திரிகைகள் ஏராளமாய்ப் பணம் கொடுத்து வாங்கிப் பிரசுரிக்கின்றன.

ரகசிய அரசாங்க தஸ்தாவேஜுகளைக் கண்டு பிடித்துக் கொண்டு வருவதற்காக இவர் கீழ் ஒரு பெரிய ஒற்றர் படை வேலை செய்கிறதாம்.

மிஸ்டர் ட்ரூ பியர்ஸன் கூறும் அரசியல் ஜோஸியங்கள் நூற்றுக்கு அறுபது வீதம் பலித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.



வெறுப்பை உற்சாகமாக மாற்றுக!

யுத்த சமயம் வாழ்க்கை மிகவும் கஷ்டமுள்ளதாக
இருக்கிறது. உணவுப்பொருள்கள் ரொக்கியமாக
இருக்கின்றன. வேலைக்காரர்களை வைத்திருப்பது கஷ்டம்.
எரி இரும்பு, துணிமணி அதிக விலையுள்ள
தாயும் கிடைப்பது கஷ்டமாயும் இருக்கின்றன.
ஓய்வென்பதோ—அது எங்கு கிடைக்கிறது?
இருந்தபோதிலும் நீங்கள் டீ அருந்தலாம். இன்னமும்
டீ நிறையவும் மலிவாகவும் கிடைக்கிறது. புதிதாக
தயாரித்த நல்ல ஒரு கோப்பை டீ மன அமைதியை கொடுத்து
தளர்ந்த நரம்புகளுக்கும் பலம் உண்டாக்குகிறது. அது
களைத்து விடுதே தவிர கெடுதல் செய்வதில்லை.
அது ஒருபொழுதும் நமக்கு கெடுதல்
அளிக்காத நமது சொந்த இந்திய விளைவு.



இந்தியன் டீ

ஓய்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK 233TM

வட்ட மேஜை

ஆசிரியரவர்கட்கு,

முகப்பிலேயே நான் இன்னுனென்று தெரியப்படுத்திக் கொள்கின்றேன். உம் பத்திரிகையை ஆரம்பித்த கால முதல் கொண்டு வாங்கி வந்தவன்; தற்சமயம் உம்முடைய கண்மூடித்தனமான அரசியல் கொள்கையையும் நோக்கத்தையும் கண்டு, உம் பத்திரிகையை வாங்காமலிருக்கின்ற மாணவர்கள் பலரில் ஒருவன்.

தாங்கள் பொதுவுடைமைக் காரர்களைப் பிரமாதமாகப் புகழ்வதையும், ரஷ்யாவைப் பற்றி வான் அளாவ எழுதுவதைப் பற்றியும் நான் ஆட்சேபிக்கவில்லை. பொதுவுடைமைக் காரர்களோ கூலிக்கு மாரடிக்கும் கும்பல். ஆனால், தாங்கள் ஒரு சிறந்த தேசியவாதி. பிரபல பத்திரிகைக்காரர். கூலியில்லாமல் அவர்களுக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு, அவர்களின் சார்பாக எழுதுவது மிகவும் விசித்திரமே. உம் பத்திரிகையில், உம் அரசியல் கொள்கையையும், உம் நோக்கத்தையும் எழுத உமக்கு உரிமை உண்டு. பத்திரிகை சுதந்திரம் உண்டு. ஆனால் உம் பத்திரிகையை வாங்கும் மக்கள் எல்லாம் உம்முடைய கொள்கையையும், உம்முடைய நோக்கத்தையும், முற்றிலும் வரவேற்கிறார்கள் என்றோ, அல்லது ஆமோதிக்கிறார்கள் என்றோ, நீர் கருதும் பட்சத்தில், நீர் உம்முடைய வாசகர்களை அறியவில்லை என்றே கூறுவேன். மாறுபட்ட கொள்கையையும், நோக்கத்தையும் உடையவர்கள் அநேகர் உளர். மாணவர்களைப் பொறுத்த அளவில் நான் கூறுகின்றேன்.

பொதுவுடைமைக்காரர்களின் குட்டுகளெல்லாம் வெளி வந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்குப் பண உதவி எங்கிருந்து வருகிறதென்பதையும் நாங்கள் அறிவோம். நீர் அறியமாட்டீர். அறிய உமக்குச் சந்தர்ப்பம் உண்டு. உண்மையை மறைக்க முடியாது. துவேஷம் கொண்டு எழுதுவதாகக் கருத வேண்டாம். கண்மூடித்தனமாக ஒரே நபரின் கொள்கையையோ, அல்லது ஒரு கட்சியினரைச் சேர்ந்திருப்பதோ, எங்கள் மாணவர்களின் இயல்புக்கு முற்றிலும் வேறுபட்டது. ஆனால் உம் பத்திரிகையை நீரே அறிவீர். கண்ணிருந்தும் காணுதவர்கள் யாரென்று மாணவர்கள் அறிவார்கள்.

வீணுக மாணவர்களின் எதிர்ப்பை ஏன் தேடிக் கொள்கின்றீர்? இன்றைய உலகில் மாணவர்களால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை என்பதை அறியவில்லை போலும். நாங்கள் சாதாரண ஒரு கும்பலல்ல. அகில இந்தியா முழுவதும் ஸ்தாபனம் அமைத்துள்ளோம். மற்றொரு ஸ்தாபனத்தை விட மும்மடங்கு எண்ணிக்கையில் அதிகமுள்ள ஸ்தாபனம் என்று தெரியப் படுத்துகின்றேன். வீண் பெருமையோ, அல்லது தற்புகழ்ச்சியோ என்று நினைக்க வேண்டாம். மறுமுறையும் உம்மை எச்சரிக்க விரும்புகின்றேன். மாணவர்களின் எதிர்ப்பைத் தேடிக் கொள்ள வேண்டாம்.

எஸ். கனகசபாபதி.

[நமது மாணக்கர்களிடையில் எத்தகைய கட்சித் துவேஷ மனப்பான்மை பரவி அவர்களுடைய தூய உள்ளத்தைக் கெடுத்திருக்கிறது என்பதை மேற்படி கடிதத்திலிருந்து அறியலாம்.

பொது உடைமைக்காரர்களுக்கு வெளியிலிருந்து பணம் வருவதாக இந்த மாணக்கர் மர்மமாகக் குறிப்பிட்டிருக்கிறார். பொது உடைமைக்காரர்கள் சிலர் எவ்வளவு கடினமான வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதை நேரில் நாம் பார்த்திருக்கிறோம்.

இந்த மாணக்கர் பொது உடைமைக் காரரைப் பற்றிச் சொல்வதுபோல், பொது உடைமைக்காரர்கள் தங்களை எதிர்ப்பவர்கள் எல்லாரும் முதலாளிகளிடம் லஞ்சம் பெற்று மாரடிக்கும் கூலிகள் என்று சுலபமாகப் பதிலுக்குச் சொல்லலாம். இதனாலெல்லாம் என்ன பிரயோஜனம்?

நம்மைப் பொறுத்த வரையில், தேசம் விடுதலை அடைய வேண்டியதுதான் முக்கிய இலட்சியம். யார் மூலமாகத் தேச விடுதலை கிடைத்தாலும் நமக்குச் சந்தோஷம்தான். காங்கிரஸ் சங்கத் தலைவர்களோ, பொது உடைமை வாதிகளோ, சோஷலிஸ்டுகளோ, மாணக்கர்களோ, அல்லது ஸப்ரூ கமிட்டியார்தானோ, — யார் சுயராஜ்யம் கொண்டு வந்தாலும் அவர்களைப் போற்றிப் பாராட்டச் சித்தமாயிருக்கிறோம்.

ஆனால் இந்த மாதிரி பிரிவினைகளாலும் துவேஷங்களினாலும் அவதூறுகளினாலும் தேசவிடுதலை கிடைக்காது. — நிச்சயமாய்த் தடைப்படும் என்று நம்புகிறோம்.

நாம் யாருடைய விரோதத்துக்கும் எதிர்ப்புக்கும் ஆளாக விரும்பவில்லை. மாணவர்கள் உள்பட, தமிழ் மக்கள் எல்லாருடைய அபிமானமும் நமக்கு வேண்டும்.

ஆனால், முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகளும் எதிர்த்த போதிலும், நமக்கு உண்மையென்று பட்டதைக் "கல்கி"யில் எழுதாமலிருக்க முடியாது. —ஆசிரியர்]

ஆடல் பாடல்

கர்நாடகம்

சாதாரணமாய் எல்லோருக்கும் ஒரு வருஷம் பூர்த்தியானால், ஒரு வயசு கூடுவது வழக்கம். நமது சங்கீத சம்ராட் செம்பை வைத்தியநாத பாகவதருக்கோ வருஷா வருஷம் ஒரு வயசு குறைந்து வருவதாகக் காணப்படுகிறது. அவருடைய சாரீரத்தைப் பற்றிய வரையில் இதை நிச்சயமாகச் சொல்லலாம்.

நானறிந்த சங்கீத மேடையில் பிரபலமான சங்கீத வித்வான்கள் சிலருடைய குரலுக்கு, என் கண் முன்னாலேயே ஆபத்து வந்து விட்டதைக் கண்டு வருத்தப்பட்டிருக்கிறேன். ஆனால் 1910-ம் வருஷத்தில் கச்சேரி செய்யத் தொடங்கி, இன்று வரை சங்கீத மேடையில் பிரபலமா யிருந்து வரும் செம்பையின் திவ்ய சாரீரம் மாசு மறுவின்றி இன்றைக்கும் கம்பீரமாய் ஒலித்து வருகிறது. மூன்றரைக் கட்டை சுருதியில் மேல் பஞ்சமத்தில் சர்வ சாதாரணமாய் நின்று வட்டமிடுகிறது.

இந்த சிரஞ்சீவிக் குரலின் ரகசியம் என்ன? செம்பையின் தாராள மனசுதான் காரணமென்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். பக்க வாத்தியக் காரர்களை அடக்கி ஒடுக்கப் பார்க்காமல், அவர்களுக்குத் தாராளமாக இடம் கொடுத்து உற்சாகப் படுத்தி ஆனந்திக்கும் அவருடைய பெரிய மனதை முக்கியமாக அவர்கள் குறிப்பிடுவார்கள்.

சில காலத்துக்கு முன்னால் நான் வேடிக்கையாக ஒரு காரணத்தைக் குறிப்பிட்டிருந்தேன். "திருவாங்கூர் சமஸ்தான வித்வானாகப் போகாதவர் செம்பை ஒருவர்தான்; சாரீரமும் அவர் ஒருவருக்குத்தான் நீடித்து நின்றுயிருக்கிறது" என்று தமாஷாக நான் எழுதி யிருந்ததைச் சிலர் நிஜமாகவே எடுத்துக் கொண்டு என்னிடம் சண்டைக்கு வந்து விட்டார்கள். அப்படிச் சண்டைக்கு வந்தவர்களில் ஒருவர், "அதெப்படி நீர் சொல்லலாம்? பழனி சுப்ரமண்யப் பிள்ளை திருவாங்கூர் சமஸ்தான வித்வானாக வில்லையா? அவருடைய மிருதங்கத்துக்குத் தொண்டை கட்டிப் போயிருக்கிறதா?" என்று கன கடுமையாக என்னைக் கேட்டார்.


காயன கந்தர்வர்

வேடிக்கை ஒருபுறம் இருக்க, செம்பை வைத்தியநாத பாகவதரின் சாரீரம் இவ்வளவு நன்றாயிருப்பதன் உண்மைக் காரணம் சமீபத்திலேதான் எனக்கு நிச்சயமாய்த் தெரிய வந்தது. அது, தமிழிசை இயக்கத்தின் அதிர்ஷ்டத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. மலையாளத்தில் பிறந்து வளர்ந்த மகாவித்வான் ஒருவரால் தமிழிசை இயக்கம் பலம் பெற வேண்டும் என்று ஏற்பட்டிருக்கும் போது, அவருடைய சாரீரம் வருஷத்திற்கு வருஷம் யௌவனம் பெற்று வந்திருப்பதில் வியப்பு என்ன?

சென்ற டிசம்பர் 25-ம் தேதி சென்னைத் தமிழிசை விழாவில் செம்பை கச்சேரியைக் கேட்ட பிறகு, என் மனதிற்குள் ஒரு பயம் இருந்துகொண்டுதான் இருந்தது. "இந்தக் கச்சேரி இவ்வளவு அபாரமாய் அமைந்து விட்டதே; [illegible] இப்படி யிருக்குமா? அசூயைக் காரர்களின் கண் திருஷ்டி படாமல் இருக்க வேண்டுமே!" என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்தக் கவலை யெல்லாம், பிப்ரவரி மாதம் 24-ம் தேதி திருநெல்வேலியில் நடந்த செம்பையின்

கச்சேரியைக் கேட்ட பிறகு பறந்தேபோய் விட்டது. முக்கியமாக, "தாயே யசோதா" என்ற கீர்த்தனையில்,

"காலினில் சிலம்பு கொஞ்ச
கைவளை குலுங்க முத்து
மாலைகள் அசையத் தெரு
வாசலில் வந்தான்!"

என்னும் இடத்தில் பாகவதர் அற்புதமாய் நிரவல் செய்து அமுத கானத்தைப் பொழிந்தபோது, எனக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. பாகவதர் அந்த இடத்தில் கையாண்ட தான நடையின் துள்ளலும், ஸ்ரீ சௌடய்யாவின் கையிலே கொஞ்சிய வயலின் ஒலியும், பழனி சுப்புடுவின் விரல்கள் மிருதங்கத்தில் நடனமாடிய நாதமும், ஆலங்குடி ராமச்சந்திரனின் கடவாத்தியத்தில் உதித்த சதங்கைச் சத்தமும் சேர்ந்து மாயக் கண்ணனின் மோஹன உருவம் அந்த மேடைமீது நடனமாடுவது போன்ற பிரமையைச் சபையோர்களுக்கு உண்டாக்கி விட்டது.

காயன கந்தர்வர் அன்று ஆரம்ப வர்ணம் முதல் மங்கள கீதம் வரையில் எல்லாம் தமிழாகவே பாடினர். அவ்வளவும் தமிழிலே பாடித் திருநெல்வேலியில் நல்ல பெயரும் வாங்கினர். பலமுறை சபையோரிடம் கரகோஷம் பெற்றார். பாட்டுக்களில் தமிழ்ச் சொற்களை இவ்வளவு சுத்தமாக உச்சரித்து வேறு எந்த வித்வானும் பாடியதில்லை என்று சபையோர் ஒரு முகமாக அபிப்பிராயப்படும்படி செய்து விட்டார்.

தமிழ் மொழியின் நயத்தையும் உயிர்த் தத்துவத்தையும் பூரணமாக உணர்ந்தவரைப்போல், நீட்டவேண்டிய இடத்தில் நீட்டியும் வேகம் கொடுக்கவேண்டிய இடத்தில் வேகம் கொடுத்தும் பிரிக்கவேண்டிய இடத்தில் பிரித்தும் சேர்க்கவேண்டிய இடத்தில் சேர்த்தும் அந்த மலையானத்து மகா வித்வான் பாடியது ஒரு அற்புதமாகவே தோன்றியது.



சங்கீத ரத்னம்

என்னும் ராகமாலிகைப் பாடலும், "பாருக்குள்ளே நல்ல நாடு", "ஆசை முகம்" என்ற பாரதியார் பாடல்களும் புரோகிராமில் அதிகமாய்ச் சேர்க்கப் பட்டிருந்தன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் சிறந்து விளங்கின.

ராகம்-தானம் - பல்லவிக்குச் சங்கராபரண ராகத்தை எடுத்துக் கொண்டது, கச்சேரிக்குத் தனி மேன்மை யளித்ததோடு ஸ்ரீ சௌடய்யா பிடிலில் தம்முடைய பூரண சாமர்த்தியத்தையும் காட்டுவதற்கு இடம் தந்தது. நாத சுகத்தில் மெய்மறந்து லயித்து ஆவேசம் வந்தவர்போல் ஸ்ரீ சௌடய்யா அன்று பிடில் வாசித்தார். சில சமயம், ஆயர்ப்பாடியை மயக்கிய கண்ணன் வேய்ங் குழலின் நாதமும், சில சமயம் அர்ஜுனன் தேர்முனையில் அமர்ந்து கிருஷ்ண பகவான் ஊதிய பாஞ்ச ஜன்யத்தின் நாதமும், இன்னும் சில சமயம் கலைமகளின் திருக்கரங்களிலுள்ள வீணை நரம்புகளி லிருந்து எழும் இன்னிசை ஒலியும் ஸ்ரீ சௌடய்யாவின் பிடிலில் அன்று கேட்டுச் சபையோர் பரவசமடைந்தனர்.

பழனி சுப்ரமண்யப் பிள்ளையின் மிருதங்க வாத்தியம், சில சமயம் குற்றாலச் சாரல் மழையைப்போல் மிருதுவாக இழைந்து செவிக்கு இன்பமளித்தது. இன்னும் சில சமயம் இடியும் மின்னலுமாக வரும் பெரு மழையைப் போல் முழங்கி அபரிமிதமான உற்சாக மூட்டியது. ஆலங்குடி இராமச் சந்திரனின் கட வாத்தியத்திற்குள் அவ்வளவு நாதசுகம் எப்படித்தான் ஒளிந்திருக்குமோ என்று சபையோர் அதிசயித்தார்கள்.

இப்படியாக, மாலை 7-15 க்கு ஆரம்பித்த கச்சேரியானது இரவு 11-45 க்கு ஆனந்த கோலாகலத்துடன் முடிவுற்றது.

திருநெல்வேலியில் செய்யை செய்த கச்சேரி, சென்னைத் தமிழிசை விழாவில் அவர் செய்த கச்சேரியைக் காட்டிலும் ஒருபடி மேலோங்கியே இருந்தது. "தாயே யசோதா" என்ற கீர்த்தனமும், "ஒருமையுடன்"



ஆஸ்தான வித்வான்

தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் நடந்த மேற்படி கச்சேரியின் மிச்சமாகும் தொகையைப் பாரதி நிதிக்கு அளிக்க மேற்படி சங்கீத வித்வான்கள் ஒப்புக்கொண்டிருந்தார்கள். இதன் காரணமாக, வெளியூர்களிலிருந்துகூடச் சில அன்பர்கள் கச்சேரிக்கு வந்திருந்தார்கள். தூத்துக் குடியிலிருந்து

ஸ்ரீ எம். வி. வீரபாகுப் பிள்ளை முதலியோரும், குற்றாலத்திலிருந்து ஸ்ரீ சோமயாஜுலு முதலியோர்களும், சங்கரன் கோவிலிலிருந்து ஸ்ரீ அம்பலவாணப் பிள்ளை முதலியோர்களும் வந்திருந்தோம். எட்டயபுரத்திலிருந்து பாரதி இலக்கிய மன்றத்தார் ஒரு பெரிய ஜமாவாக வந்திருந்தார்கள்.



ஆலங்குடி ராமச்சந்திரன்

கச்சேரியின் நடுவில், பல்லவி முடிந்ததும், எட்டயபுரத்துக் கோஷ்டியார் மேடை மீது வந்து பாரதி இலக்கிய மன்றத்தின் சார்பாக பாகவதருக்குப் பூமாலை போட்டதுடன், "சங்கீத உலகின் சம்ராட் அவர்களே!" என்று ஆரம்பித்து அழகாக எழுதப்பட்டிருந்த ஓர் உபசாரப் பத்திரத்தையும் வாசித்துக் கொடுத்தார்கள்.

மொத்தத்தில் இந்தக் கச்சேரி ஒரு சாதாரணக் கச்சேரியாக நடக்கவில்லை. திருவிழா மாதிரியே நடந்தது. இந்தத் திருவிழாவின் சிறப்பை இன்னும் கொஞ்சம் உயர்த்துமாறு, ஸ்ரீ என். கே. ராமநாதன் என்னும் தமிழன்பர் இச் சந்தர்ப்பத்தில் பாரதியார் ஞாபகார்த்த நிதிக்கு ரூ 501—0—0 நன்கொடை அளித்தார். இவ் விஷயம் சபையில் அறிவிக்கப்பட்டபோது ஏற்பட்ட குதூகல கரகோஷமானது, பாரதியார் ஞாபகார்த்த நிதி விஷயத்தில் திருநெல்வேலி ஜில்லா வாசிகளின் உற்சாகத்தை நன்றாக எடுத்துக் காட்டுவதாயிருந்தது.

முதலில் பிப்ரவரி 3உ போட்டிருந்த இந்தக் கச்சேரியைச் சில காரணங்களால் தள்ளிப் போடுவது அவசியமாயிற்று. இதனால் சங்கத்தின் காரியதரிசிகளுக்கு எவ்வளவோ சங்கடங்கள். அவற்றைப் பொருட்படுத்தாமல் கச்சேரிக்கு மிகச் சிறந்த ஏற்பாடுகள் செய்து வெற்றிகரமாக நடத்தி வைத்த தமிழிசைச் சங்கத்தின் காரியதரிசிகள் ஸ்ரீ கே. ராமசுப்புவையும் ஸ்ரீ ஏ. சிதம்பரத்தையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

புதிய கலைக் கழகம்

தேசம் உருப்பட வேண்டுமானால், சாதாரண கலை முன்னேற்றம் வந்தால் மட்டும் போதாது, கலையானது வெள்ளமாக வந்து மோதினால்தான் 'பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர்களுக்கும் விழிப்பு உண்டாகும்' என்று பாடினார் பாரதியார். ஆனால், காலக்கிரமத்தில் சிறிது சிறிதாகத் தமிழ் நாட்டில் கரை புரண்டோடும் கலை வெள்ளத்தைப் பார்க்கும்போது, பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடர்கள் விழித்துக் கொள்வதுடன், விழி விழி என்று விழித்துத் திக்கு முக்காடியும் போய் விடுவார்கள். அவ்வளவு புதிய புதிய சங்கீத சபைகள், நாட்டிய சாலைகள், கலைச் சங்கங்கள் ஏற்பட்டு வருகின்றன: இவ்விதம் தமிழ் நாட்டில் தோன்றியுள்ள இளம் சபைகளுடன், இப்பொழுது எழும்பூரில் ஏற்பட்டிருக்கும் இந்திய லலித கலைக் கழகம் (Indian Institute of Fine Arts) என்னும் சபையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

சென்ற புதன்கிழமை மாலை சுபயோக சுப வேளையில் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் இக் கலைக் கழகத்தை எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் ஆரம்பித்து வைத்தார். கழகத்தின் காரியதரிசி ஸ்ரீ சாரங்கபாணி ஐயங்கார் வரவேற்புப் பிரசங்கம் செய்த பிறகு, ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் கலையின் தத்துவத்தைப் பற்றி ஒரு மணி நேரம் பிரசங்கமாரி பொழிந்தார்.

பேச்சுக் கச்சேரிகள் முடிந்ததும், கழகத்தின் மாணவிகளால் நாட்டியக் கச்சேரி நடந்தது. 'ராதையின் பிரார்த்தனை' என்ற நிகழ்ச்சியும், 'முகத்தைக் காட்டி' என்ற பதத்திற்கு ஒரு சிறுமி அபிநயம் பிடித்ததும் நன்றாயிருந்தது.

மேற்படி நடனம் நிகழ்ச்சியின் வெற்றிக்குக் காரணமான பந்தநல்லூர் நாட்டிய கலா விசாரத ஸ்ரீ சொக்கலிங்கம் பிள்ளை சபையோர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

இவ்வளவு அழகாக ஆரம்பமாகியிருக்கும் இந்திய லலித கலைக்கழகம், இந்தக் குழந்தைகளுக்கும், இந்தக் குழந்தைகளின் குழந்தைகளுக்கும் நாட்டியம் சங்கீதம் முதலிய லலித கலைகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு சிரஞ்சீவியாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

வான சஞ்சாரம்

இசைத் தேன்

சங்கீத மேடையாயினும்சரி, ரேடியோவாயினும் சரி, பந்துவராளி இல்லாது கச்சேரி இடையாது. அப்பப்பா! அந்த ராகம் அடிபடுகிற மாதிரி வேறு எதுவுமில்லை. களஞ்சியமாம் கர்நாடக சங்கீதத்தில் அது தவிர வேறு ராகங்களில்லையா என்ன? இப்படிச் சலித்திருக்கும் என் காதில், பிப்ரவரி 19உ சென்னை நிலையத்தில், வராளியைப் பல்லவி ராகமாக எடுத்து, அழகாய்ப் பரிமளித்து அதில் தானம் பல்லவியும் பாடி, போதாக் குறைக்கு ஸ்வரத்தை ராகமாலிகையாக ஒருவர் வழங்கினார் என்றால் எனக்கேன் பூரிப்பு வராது? பாடியவர் சங்கீத பூஷணம் டி.கே. ரங்காசாரி என்று அறிந்தவுடன் அச் சந்தோஷம் அதிகரித்தது. பேருக்கு மாத்திரம் வராளியை எடுத்துக் கொண்டு பந்துவராளியாகவே பாடிவிடாமலிருந்தது ரொம்பப் புண்ணியம்! அதற்குமுன் கேட்ட தோடி, பைரவி ராகங்களும், அவைகளின் உருப்படிகளும் எடுப்பாயிருந்தன.

அன்று காலை அதே நிலையத்தில் ஏ. பட்டம்மாள் பிர்க்கா மிகைப்பட்ட குரலில் வழங்கிய கானத்தில் சங்கராபரணம் குறிப்பிடத்தக்கது. கேள்வி ஞானத்திலும், தன் தைரியத்திலும் இவர் பெரும்பாலும் சமாளிக்கிறார் என்பது எளிதில் தென்பட்டிருக்கும்.

20உ சென்னையில் பாடிய என். சோமசுந்தரத்துக்கு நினைத்தபடி உதவும் சாரீரம். அசாத்திய சாதகம். மத்யம காலத்துக்கு மேலான நடை. கேட்க வேண்டுமா? ஒரே பிர்க்கா மழை. உருட்டல் புரட்டல்களுக்கு அளவே யில்லை. ஆனால் தோஷமில்லாத தெளிவும் கண்டது. இந்த வைபவங்களோடு அன்று சங்கராபரணம், கரஹரப்ரியா ராகங்களைச் சக்கைப் போடு போட்டார். "ராமா ரமணராரா"வின் கண்ட நிரவல் ஸ்வரம் எல்லாவற்றையும் தூக்கியடித்தது. அன்று இவருக்குப் பக்க வாத்தியம் வாசித்த கோவிந்தசாமி நாயக்கரின் வயலினும் போட்டி போடுவதுபோல் பிரமாயிருந்தது.

காலஞ் சென்ற பிட்டப்பாவின் பெயரைக் கேட்டவுடனேயே, குஷி கொள்ளும் ரசிகர்கள் ஏராளம். அவரது சாக்ஷாத் மருமகன் செங்கோட்டை கங்காதரன் சென்னையில் 21உ பாடினார் என்றால் அவர்களது உத்ஸாகத்தைப் பற்றிக் கேட்பானேன்? முதல் பாகத்தில் கேட்ட ஸ்ரீரஞ்சனியும் சுமத்யூதியும், இரண்டாம் பாகத்தில் கீரவாணியும் சிறப்பாயிருந்தன. சுமத்யூதி என்பது ஸிம்மேந்திரமத்யமத்துக்கு வேறு பெயர் போலும். உருப்படிகளின் சங்கதிகளைக் கொஞ்சம் கூடச் சிட்டை செய்து கொண்டால் நலம்.

அன்று மாலை சென்னையில் பாடிய ஏ. ஆர். சுந்தரத்தையும், இரவு திருச்சியில் கச்சேரி செய்த என். ராமநாதனையும் குறிப்பிடாமலிருக்க முடியாது. இருவரிடத்திலும் கமகப் பிடிகள் ஜோருசாயிருந்தன. முன்னவரிடம் சங்கராபரணமும், மோஹனமும் பின்னவரிடம் சாவேரியும் அழகாய் விளங்கின.

22உ திருச்சியில் சிதம்பரம் ஜயராம் பிள்ளை 1½ மணி நேரம் கச்சேரி செய்தார். பாடியதெல்லாம் அழகிய 'பிளான்.' ராகங்களிலும் சாஹித்யத்திலும் எவ்வளவு நிதானமோ, அழுத்தமோ அவ்வளவு பிரஸ்வரத்தில் கண்டது. ஜீவ ஸ்வரங்களைத் தெளிவாய்ப் பிடித்துக் காட்டியதோடு, கமகம், பிர்க்கா, தானங்களுக்கு இவை நிறைந்திருந்தன. வஸந்த பைரவி, கரஹர ப்ரியா, பேகடா, தோடி ராகங்கள் அசாதாரணமாகவே இலங்கின. 'வாயாரப் பாடினேன்', 'அவசரப்படாதே' என்ற உருப்படிகளின் வார்த்தைகளுக்குப் பொருத்தமாக அவசரமே படாமல் வாயார வழங்கினார்.

23உ திருச்சி புரோக்ரேம்படி அங்கப்பப் பிள்ளை வராது ஏமாற்றிவிட்ட போதிலும், அதற்குப் பதிலாக சமயபுரம் சுந்தரேசப் பிள்ளை குளிர்ச்சியாகத் தமது நாதஸ்வரத்தில் பந்துவராளி, காம்போதி ராகங்களையும், பல்லவி ராகமாலிகைகளையும் வழங்கியது சமாதானத்தைக் கொடுத்தது.

24உ சென்னையில் டி. ஆர். மஹாலிங்கத்தின் வேணுகானம், வழக்கம்போல் உயர்ந்த ரகமாயிருந்ததென்று சொல்லத் தேவையில்லை. அன்று அவர் வாசித்தவைகளில் பிலஹரியும், தன்யாசியில் ராகதானம் பல்லவியும் சிறந்து விளங்கின. 'இந்தக்கன்றுநந்த' உருப்படியில் ஸ்வரம் வெகு ஜோர்.

கலகலப்பான கானத்தால் காதை நிரப்ப வேண்டுமானால் துறையூர் ராஜகோபால சர்மாவைத்தான் கேட்கவேண்டும். அடாணாவில் 'ஏலா தயராது' உருப்படியுடன் எடுப்பாய் ஆரம்பித்து சாவேரி மோஹன ராகங்களையும், கடைசியில் ஒரு ராகமாலிகையையும் வண்ணமாய் வழங்கினார். உருப்படிகளில் கண்ட நிரவல் ஸ்வரங்கள் விமரிசையாயிருந்தன. சாவேரி உருப்படியில் மாத்திரம் லயவிந்யாச வேலைப்பாடுகளில் கொஞ்சம் அதிகமாகவே ஈடுபட்டு விட்டார்.

நானும் பிறருக்குச் சளைத்தவனில்லை என்று மாயவரம் என். ராஜமய்யர் திருச்சியில் அன்று ரொம்ப உத்ஸாகமாய் ஹரிகாம்போதி, தோடி, சங்கராபரணமென்று ராகங்களை விளாசினதோடு, தோடி உருப்படியில் நிரவல் ஸ்வரங்களையும் வாரி யள்ளினார். பிரமை தட்டும்படி பிர்க்கா மழையாகப் பொழிந்தார்.

அதேமாதிரியான பிர்க்கா வகை சங்கீதமே 27உ சென்னையில் விஞ்சமூரி வரதராஜய்யங்கார் கச்சேரியில் கேட்டது. பைரவி சிறப்பாய் இலங்கியது. இவர் பாட்டை உற்றுக் கேட்டால் எந்தெந்த இடங்களில் எந்தெந்தப் பிரபல வித்வான்களின் பாணியைப் பின்பற்றுகிறார் என்று சொல்லிவிடலாம்.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: என். டி. சுசீலா, 320, விட்டல்வாடி, நாராயணகுடா, ஹைதராபாத்.

சிவகாமியி

மூன்றாம் பாகம்

முதல் அத்தியாயம்

அழியா மதில்

வாதாபி சளுக்க சக்கரவர்த்தி புலிகேசியின் படைகள், மகேந்திர பல்லவரின் காலத்தில் காஞ்சிக் கோட்டையை முற்றுகை யிட்ட சம்பவம், தென்னாட்டின் சரித்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

ஏறக்குறைய எட்டு மாத காலம் அந்த முற்றுகை நீடித்திருந்தது. எனினும், காஞ்சிக் கோட்டையின் மதில்கள் கன்னியழியா மதில்களாகவே கம்பீரமாகத் தலைதூக்கி நின்றன. வாதாபிப் படையைச் சேர்ந்த வீரன் ஒருவன் கூடக் காஞ்சிக் கோட்டைக்குள்ளே கால் வைக்கவும் முடியவில்லை.

புலிகேசியின் படைகள் காஞ்சிக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டவுடனே, வைஜயந்தி பட்டணத்தில் செய்தது போலவே ஒரே மூர்க்கமாய்க் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்ற யத்தனித்தார்கள். காலாட் படையைச் சேர்ந்த கணக்கற்ற வீரர்கள் ஏககாலத்தில் கோட்டையின் நாலா புறத்திலும் அகழிகளை நீந்திக் கடக்க முயன்றார்கள். கோட்டை மதில்களின் மேல் மறைவான இடங்களிலிருந்து மழைபோல் பொழிந்த அம்புகளும், அகழி நீரில் இருந்த முதலைகளும் அவ் வீரர்களையெல்லாம் எமலோகத்துக்கு அனுப்பின. தப்பித் தவறிக் கரையேறிய வீரர்கள் கோட்டை மதிலோரமாகக் கண்ணுக்குத் தெரியாமல் அமைத்திருந்த பொறிகளில் அகப்பட்டுத் திண்டாடினார்கள். ஆங்காங்கு அகழிகளில் இறங்கிய யானைகளுக்கும் அகழியிலிருந்த முதலைகளுக்கும் பயங்கரமான போராட்டம் நடந்ததில், அகழியில் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்த தண்ணீரெல்லாம் செந்நீராக மாறியது.

இதன் பிறகு, கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழியைத் தூர்த்துக் கோட்டைக் கதவுகள் மேல் யானைகளை மோதச் செய்து திறப்பதற்கு முயன்றார்கள். காஞ்சியைச் சுற்றியிருந்த பெரிய பெரிய விருக்ஷங்களையெல்லாம் மத்தகஜங்கள் வேரோடு பெயர்த்துக் கொண்டு வந்து அகழியில் போட்டுத் தூர்த்தன. ஆனால் இந்த வேலை அவ்வளவு எளிதாக நடக்கவில்லை. கோட்டை வாசலின் மேல் மாடங்களில் மறைவான இடங்களிலிருந்து பல்லவ வீரர்கள் வேகமாய் எறிந்த வேல்கள் யானைகளின் கண்களிலும் இன்னும் மர்மஸ்தானங்களிலும் தாக்க, அவை வீறிட்டுக் கொண்டு திரும்பி ஓடிச் சளுக்கர் படைகளுக்குச் சேதமுண்டாக்கின.

பெரும் பிரயத்தனத்தின் பேரில் கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழிகள் தூர்க்கப்பட்டு யானைகள் கோட்டை வாசல் கதவுகளை முட்டிய போது, வெளிக் கதவுகள் தகர்ந்தன. ஆனால் உள்ளே பெரிய அதிசயம் யானைகளுக்குக் காத்திருந்தது. வெளிக் கதவுக்கு அப்பால் புதிதாய் அமைக்கப்பட்டிருந்த உள் கதவுகளில், நூற்றுக் கணக்கான வேல் முனைகள் பொருத்தப்பட்டிருந்தன. எதிர்பாராதபடி இந்த வேல் முனைகளால் தாக்கப்பட்ட வாதாபி யானைகள், பயங்கரமாகப் பிளிறிக்கொண்டு திரும்பி, தங்களுக்குப் பின்னாலிருந்த காலாட் படை வீரர்களையெல்லாம் துவம்சம் செய்து கொண்டு ஓடின. பெரிய பெரிய மரக் கட்டைகளைக் கொண்டு வந்து அந்த வேல் முனை

மணியம்

பிக்ஷுவின் காதல்

பொருத்திய கதவுகளையும் தகர்த்து விட்டுப் பார்த்தால், அக்கதவுகளுக்குப் பின்னால் கோட்டை வாசலை அடியோடு அடைத்துக் கொண்டு கருங்கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட கெட்டிச் சுவர் காணப்பட்டது.

இவ்விதமாக, ஏறக்குறைய ஒரு மாச காலம் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றுவதற்கு முயன்று தோல்வியடைந்த பிறகு, நீடித்து முற்றுகையை நடத்திக் கோட்டையிலுள்ளவர்களைப் பட்டினி போட்டுப் பணியச் செய்வதென்று புலிகேசி தீர்மானித்தான். வாதாபிப் படைகள் காஞ்சியைச் சுற்றிலும் நெடுந்தூரம் வரை கூடாரம் அடித்துக் கொண்டு தண்டு இறங்கின.

முற்றுகையை ஆரம்பித்து ஆறு மாச காலம் ஆனபோது, கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு என்ன ஆபத்து நேரிடுமென்று புலிகேசி எதிர்பார்த்தானோ அந்த ஆபத்து வாதாபிப் படைகளுக்கே நேரலாயிற்று. அதாவது, உணவுப் பஞ்சம் நேர்ந்தது. லட்சக் கணக்கான வீரர்கள், ஆயிரக் கணக்கான போர் யானைகள், வண்டிகளை இழுப்பதற்கு உபயோகப்பட்ட ஆயிரக்கணக்கான மாடுகள் எல்லாவற்றுக்கும் ஒரே இடத்திலிருந்து கொண்டு எவ்வளவு காலத்துக்கு உணவு அளிக்க முடியும்? வடபெண்ணைக் கரையிலிருந்து காஞ்சி வரையில் உள்ள வழியில், புலிகேசியின் படைகளுக்கு யாதொரு உணவுப் பொருளும் கிடைக்கவில்லை. வடபெண்ணையிலிருந்து மெள்ள மெள்ளப் பின்வாங்கிவந்த பல்லவ சைன்யம், வாதாபிப் படைக்கு உணவுப் பொருள் ஒன்றும் கிடைக்காதபடி செய்து கொண்டே பின்வாங்கியது.

அவ்வாறே, காஞ்சியைச் சுற்றிலும் நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் உள்ள கிராமங்களையெல்லாம் சூனியமாக விட்டுவிட்டு ஜனங்கள் போய் விட்டபடியால், வாதாபிப் படைகளுக்கு உணவுப் பொருள் கிடைப்பது அருமையாயிருந்தது.

இரண்டு மூன்று மாச காலத்திற்குள் காஞ்சியைச் சுற்றியிருந்த காடுகள், தோட்டங்கள் எல்லாவற்றையும் வாதாபியின் யானைகள் அழித்துத் தின்று விட்டன. அப்புறம் அவற்றுக்கு ஆகாரம் தேடுவதற்காகப் பல காத தூரம் போக வேண்டியிருந்தது. அப்படிப் போனாலும் அந்த வருஷத்துக் கடுங் கோடையில பசுமையைக் கண்ணால் பார்ப்பதே கடினமாயிருந்தது.

இதையெல்லாம் காட்டிலும் மிகப் பயங்கரமான இன்னொரு அபாயம் அந்த வருஷத்துச் சித்திரையில் வாதாபிப் படைகளுக்கு ஏற்பட்டது. அதாவது, குடி தண்ணீருக்கே பஞ்சம் உண்டாகி விட்டது.

கல்கி

அந்த வருஷத்தில் காஞ்சியைச் சுற்றிலும் ஏழெட்டுக் காத தூரம் பரவிய பிரதேசங்களில் சில அதிசயங்கள் நடந்து வந்தன. கார்த்திகை-மார்கழியில் தண்ணீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்த விசாலமான ஏரிகளெல்லாம், தை மாசி மாசத்தில் எப்படியோ திடீர் திடீரென்று கரையை உடைத்

துக் கொண்டு சுற்றுப் பிரதேசங்களை வெள்ளத்தில் மூழ்கடித்தன. இது காரணமாக, சித்திரை மாசத்தில் ஏரிகளில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமற் போய்விட்டது.

ஆங்காங்கு இருந்த கிணறுகளும் குளங்களும் ஏரிகள் உடைத்துக் கொண்டு வெள்ளம் வந்தபோது தூர்ந்து போய்விட்டன. எங்கேயாவது கொஞ்சம் தண்ணீர் கண்டால் குடிப்பதற்குப் பயனில்லாதபடி அழுகி நாற்றமெடுத்துக் கிடந்தது.



அந்த நாளில் காஞ்சி நகரைச் சேர்ந்தாற்போலிருந்த பாலாற்றில் கோடை காலத்தில் கூடத் தண்ணீர் போவது உண்டு. எப்படியென்றால், நதியின் மேல் பிரதேசங்களில் மூன்று இடங்களில் அணைக் கட்டுக் கட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்திருப்பார்கள். வேனிற்காலத்தில் சிறிது சிறிதாக விடுவார்கள். இந்த வருஷத்தில் அந்தத் தேக்கங்களை முன்னமே உடைத்து விட்டிருந்தபடியால் கோடை காலத்தில் பாலாறும் வறண்டு விட்டது. பாலாறு வறண்ட காரணத்தினால் காஞ்சியையும் கடலையும் சேர்த்த கால்வாயிலும் தண்ணீர் வற்றிப் போய் விட்டது. கோட்டையைச் சுற்றியிருந்த அகழித் தண்ணீரோ, ரத்தமும் நிணமும் சேர்ந்த சேற்றுக் குட்டையாக மாறியிருந்தது.

எனவே, வாதாபியின் லட்சக் கணக்கான வீரர்கள், யானைகள், குதிரைகள் மாடுகள் எல்லாவற்றுக்கும் பாலாற்றில் ஊற்றெடுத்தே குடி தண்ணீர் கிடைக்க வேண்டியிருந்தது.

பசி தாகங்களின் கொடுமையினால் போர் யானைகள் அவ்வப்போது வெறி பிடித்துச் சிதறியோட, அவற்றின் கால்களில் மிதிபட்டு வீரர்கள் பலர் எமலோகம் சென்றார்கள்.

• • •

ஆனி மாதத்திலே ஒரு நாள் வராகக் கொடி வானளாவப் பறந்த கூடாரத்தில் புலிகேசியின் யுத்த மந்திராலோசனை சபை கூடிற்று. முன்னே வடபெண்ணை நதிக்கரையில் நாம் பார்த்த அதே படைத் தலைவர்கள் ஏழெட்டுப் பேர், எதிரில்

விரித்திருந்த ரத்தினக் கம்பளத்தில் உட்கார்ந்திருக்க, வாதாபியின் வீர மன்னன் தந்தச் சிங்காதனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

முன்னைக் காட்டிலும் புலிகேசியின் முகத்தில் கடூரமும் கோபமும் அதிகமாகக் கொதித்துக்கொண்டிருந்தன. புலிகேசி சொன்னான்: "இந்த மகேந்திர வர்மனுக்குத் தகப்பன் பெயர் சிம்ம விஷ்ணு. மகன் பெயர் நரசிம்மன். ஆனால் மகேந்திரனோ வெறும் நரியாக இருக்கிறான். வளையில் நரி புகுந்து கொள்வது போல, இவன் கோட்டைக்குள் புகுந்து கொண்டிருக்கிறான். நரி வளையிலிருந்து வெளியே வருமென்று எத்தனை நாளைக்குத்தான் காத்துக் கொண்டிருப்பது? உங்களில் யாருக்காவது ஏதாவது யோசனை தோன்றினால் சொல்லுங்கள்."



படைத் தலைவர்கள் மௌனமாயிருந்தார்கள். ஒருவராவது வாய் திறந்து பேசத் துணியவில்லை.

"ஏன் எல்லாரும் மௌனம் சாதிக்கிறீர்கள்? வெற்றி மேல் வெற்றியாக அடைந்து கொண்டிருக்கும்போது, நான், நீ என்று எல்லோரும் யோசனை சொல்ல முன் வருகிறீர்கள். யோசனை தேவையாயிருக்கும்போது வாயை மூடிக்கொண்டிருக்கிறீர்கள். ஆஹா! நமது பிக்ஷு மட்டும் இப்போது இங்கு இருந்தால்......" என்று சொல்லிப் புலிகேசி பெருமூச்சு விட்டான். சபையில் ஒருவர், "சத்தியாஸ்ரயா, பிக்ஷுவிடமிருந்து எந்த விதமான தகவலும் வரவில்லையா?" என்று கேட்டார்.

"பிக்ஷுவிடமிருந்து சேதி வந்து ஒன்றரை வருஷமாகிறது. வடபெண்ணைக் கரையில் வஜ்ரபாஹு என்னும் கடைப்பாளைத் தலைவனிடம் அனுப்பிய ஓலைக்குப் பிறகு அவரிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. மதுரைப் பாண்டியனைப் பார்ப்பதற்கு அவர் போயிருக்க வேண்டும். அங்கே ஏதேனும் நேர்ந்து விட்டதோ, என்னவோ? ஆஹா! பிக்ஷு மட்டும் இப்போதிருந்தால் உங்களைப்போல் விழித்துக் கொண்டு இருக்க மாட்டார் அல்லவா? ஒற்றர் தலைவரே, புத்த பிக்ஷு என்ன ஆகியிருப்பார் என்று கண்டு பிடிக்கும்படியாக எட்டு மாதத்திற்கு முன்னாலேயே சொன்னேனே, இது வரை ஏதாவது தகவல் கிடைத்ததா?" என்று கேட்க, ஒற்றர் படைத் தலைவன் தலை குனிந்து கொண்டான்.

பிறகு புலிகேசி, அங்கே எல்லாருக்கும் முதலில் இருந்தவனைப் பார்த்து, "சேனாபதி, உமக்கு என்ன தோன்றுகிறது? முற்றுகையைத் தொடர்ந்து நடத்த வேண்டியது தானே? மகேந்திர பல்லவனைப் பணியச் செய்ய இன்னும் எத்தனை காலம் பிடிக்கும் என்று நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அதற்கு வாதாபி சேனாபதி, "மதில் மேல் காணப்படும் பல்லவ வீரர்கள் கொஞ்சங்கூட வாட்டமின்றிக் கொழுத்தே காணப்படுகிறார்கள். குறைந்தது இன்னும் ஆறு மாசத்துக்கு அவர்களால் முற்றுகையைத் தாங்க முடியுமென்று தோன்றுகிறது. ஆனால் நம்முடைய வீரர்களுக்கு இப்போது அரை வயிறு உணவுதான் கொடுக்கிறோம். இன்னும் ஒரு மாதம் போனால் அதுவும் கொடுக்க முடியாது. சுற்றுப் புறத்தில் பத்துக் காத தூரத்திற்கு ஒரு தானிய விதை கூடக் கிடையாது" என்றார்.

புலிகேசியின் முகத்தில் கோபம் கொதித்தது. "ஆமாம், ஆமாம், எப்போது பார்த்தாலும் இந்தப் பஞ்சப் பாட்டுதான். 'சாப்பாடு இல்லை!' 'சாப்பாடு இல்லை!' இம்மாதிரி மூக்கால் அழுவதைத் தவிர, வேறு ஏதாவது யோசனை சொல்லுவதற்கு இங்கு யாரும் இல்லையா?" என்று கோபக் குரலில் புலிகேசி கேட்க, படைத்தலைவர்களில் ஒருவன், "பிரபு! காவேரிக் கரையில் ஆறு மாச காலமாகப் பாண்டிய ராஜா தங்களுடைய சித்தத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார். சோழ வள நாட்டில் சென்ற வருஷம் நன்றாக விளைந்து தானியம் ஏராளமாக இருக்கிறது. ஜயந்தவர்ம பாண்டியருக்கு ஓலையனுப்பினால், ஒரு வேளை அவர் உணவு அனுப்பக் கூடும்" என்றான்.

இதைக் கேட்ட சக்கரவர்த்தி சற்று நேரம் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். பிறகு திடீரென்று துள்ளிக் குதித்து எழுந்து, எல்லாரையும் ஒரு தடவை சுற்றிப் பார்த்து விட்டு, "என்ன செய்வதென்று தீர்மானித்து விட்டேன். இனிமேல் நான் இங்கேயே சும்மா உட்கார்ந்திருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும். சேனாபதி, நீர் இங்கேயே நமது சைன்யத்தின் பெரும் பகுதியுடன் முற்றுகையை நடத்திக் கொண்டிரும். ஒரு லட்சம் வீரர்களுடன் நான் தெற்கே புறப்பட்டுச் சென்று பாண்டிய மன்னனை நேரில் பார்த்து விட்டு வருகிறேன். யானைப் படை என்னுடன் வரட்டும். ஆஹா! வாதாபியிலிருந்து கிளம்பியபோது கொழு கொழுவென்றிருந்த நமது யானைகள் உணவில்லாமல் எப்படி மெலிந்து போய் விட்டன! காவேரிக் கரையில் நமது யானைகளுக்கு நிறைய உணவு கிடைக்குமல்லவா?" என்றார்.

அப்போது ஒற்றர் படைத் தலைவன், "பிரபு! தாங்கள் அப்படிச் சிறு

படையுடன் போவது உசிதமா? பாண்டியனுடைய நோக்கம் எவ்விதம் இருக்குமோ?" என்று கூறியதற்குச் சக்கரவர்த்தி, "பாண்டியன் நோக்கம் என்ன இருந்தாலும் என்ன! அவன் நம்மோடு போர் செய்யத் துணிய மாட்டான். நமது சிநேகத்தைக் கோரி ஓயாமல் தூது அனுப்பிக் கொண்டிருக்கிறானே! அப்படியே அவன் மோசக் கருத்துள்ளவனாயிருந்தாலும் என்ன செய்துவிட முடியும்? காவேரிக் கரையில் ஒளிந்து கொள்வதற்குக் கோட்டை ஒன்றும் அவனுக்கு இல்லை. எதிரி போர்க்களத்தில் நிற்கும் வரையில் எனக்குப் பயமும் இல்லை" என்றார்.

இரண்டாம் அத்தியாயம்

யானைப் பாலம்

அந்த வருஷத்தில் ஆனி மாதக் கடைசியிலேயே காவேரியிலும் கொள்ளிடத்திலும் வெள்ளம் வந்து விட்டது. வாதாபி சக்கரவர்த்தியும் அவருடைய சைன்யமும் இரண்டு வாரம் பிரயாணம் செய்து கொள்ளிடக் கரைக்கு வந்து சேர்ந்தபோது அந்த நதியில் இரு கரையையும் தொட்டுக் கொண்டு தண்ணீர்ப் பிரவாகம் போய்க் கொண்டிருந்தது.

ஒன்றரை வருஷத்திற்கு முன்னால் பாண்டிய சிம்மாசனத்தில் புதிதாக ஏறியிருந்த சேந்தன் ஜயந்த வர்ம பாண்டியன், கொள்ளிடத்துக்கு அக்கரையில் தன்னுடைய சைன்யத்துடன் தண்டு இறங்கியிருந்தான். அவனோடு கொடும்பாளூர் மாதவக் களப்பாளனும் சேரநாட்டுச் சிற்றரசன் இளஞ்சேரலாதனும் தங்கியிருந்தார்கள்.

இரு சாராரும் நேரில் சந்திக்க முடியாதபடி நடுவில் கொள்ளிடத்து வெள்ளம் குறுக்கிட்டது.

முன் அத்தியாயத்தில் வாதாபி சேனாபதியிடம் புலிகேசி கூறியதென்னவோ உண்மைதான். ஜயந்த வர்ம பாண்டியன், தன் சகோதரியை மாமல்லன் கல்யாணம் செய்து கொள்ள மறுத்ததன் காரணமாகப் பல்லவர் மீது பெரிதும் கோபம் கொண்டிருந்தான். காஞ்சி முற்றுகை ஆரம்பித்த சில தினங்களுக்கெல்லாம் பாண்டிய சைன்யம் காவேரிக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவிலிருந்த பகுதியை அடைந்து விட்டது. பாண்டியனுக்கு அக்காலத்தில் கப்பம் கட்டிக் கொண்டிருந்த கொடும்பாளூர் மாதவக் களப்பாளனும் சேரன் இளஞ்சேரலாதனும் ஜயந்த வர்மன் விருப்பத்தின்படி தாங்களும் தங்கள் சிறு சைன்யங்களுடன் வந்திருந்தார்கள். அக்காலத்தில் கொள்ளிடத்திற்குத் தெற்கேயிருந்த தமிழ் மன்னர்கள் அனைவரும் பல்லவர்களிடம் விரோத பாவம் கொண்டிருந்தார்கள். எனவே, ஜயந்த வர்மனும் மற்ற இரு குறுநில மன்னர்களும் இச்சமயம் வாதாபிச் சக்கரவர்த்தியுடன் சேர்ந்துகொண்டு பல்லவ வம்சத்தாரிடம் தங்களுக்கிருந்த வர்மத்தைத் தீர்த்துக் கொள்ளச் சித்தமாயிருந்தார்கள். இவர்களுடன், சமீபத்திலேதான் உறையூர்ச் சிம்மாசனம் ஏறியிருந்த பார்த்திப சோழன் மாத்திரம் சேர்ந்து கொள்ளவில்லை. பல்லவ சக்கரவர்த்திக்கு அப்போது கப்பம் செலுத்தும் சிற்றரசனாயிருந்த பார்த்திப சோழனும் பல்லவர்களை வெறுத்தானாயினும் வட நாட்டிலிருந்து படையெடுத்து வந்தவர்களுடன் சேர்ந்து கொள்ளவோ, அவர்களுடைய தயவை நாடவோ அவனுக்கு மனம் வரவில்லை.

மகேந்திர பல்லவரின் தந்தை காலத்திலிருந்து கீழைச் சோழ நாடு பல்லவரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை முன்னமே தெரிவித்திருந்தோம். மற்றப்படி எது எப்படிப் போனாலும், இந்தச் சந்தர்ப்பத்தில் கீழைச் சோழ நாட்டைத் தான் கைப்பற்றிக் கொண்டு பாண்டிய ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ளுவதென்று ஜயந்த வர்மன் தீர்மானித்திருந்தான். அந்தக் காரியத்தைத் தான் செய்து முடித்து விட்டதாகவே எண்ணி ஜயந்தவர்மன் இப்போது இறுமாந்திருந்தான்.

ஆனால், ஏழைச் சோழ நாட்டு மக்கள் இதைச் சிறிதும் விரும்பவில்லை. அவர்கள் தலைமுறை தலைமுறையாக ஆழ்ந்த சைவ சமயப் பற்றுள்ளவர்கள். சமீப காலத்தில் திருநாவுக்கரசருடைய மகிமையினால் மகேந்திர பல்லவர் சைவ சமயத்தைத் தழுவியது முதல், சோழ நாட்டு மக்கள் பல்லவ சக்கரவர்த்தியிடம் விசேஷ பக்தி கொண்டிருந்தார்கள். எனவே, ஜயந்த வர்ம பாண்டியன் எதிர்பார்த்தபடி சோழ நாட்டார் அவனை உற்சாகமாக வரவேற்கவில்லை. இதனாலும், பல மாச காலம் கொள்ளிடக் கரையிலேயே காத்துக் கொண்டிருக்க நேர்ந்ததாலும், ஜயந்த வர்மன் எரிச்சல் கொண்டிருந்தான். காஞ்சி நகர் முற்றுகை நெடுங்காலம் நீடித்ததில் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் அவனுக்கு முன்னிருந்த மரியாதை குறைந்து போயிருந்தது. எனவே, கொள்ளிடத்துக்கு அக்கரையில் புலிகேசி வந்து விட்டது தெரிந்த பிறகும் அவனைப் போய்ப் பார்க்கப் பாண்டியன் எவ்விதப் பிரயத்தனமும் செய்யவில்லை. கொள்ளிடத்தில் பிரவாகம் அதிகமாயிருந்ததைச் சாக்காக வைத்துக் கொண்டு, பரிவாரங்களுடன் அக்கரை வருவதற்குத் தன்னிடம் போதிய படகுகள் இல்லையென்றும், வெள்ளம் வடிந்த பிறகுதான் அக்கரைக்கு வந்து வாதாபி சக்கரவர்த்தியைச் சந்திக்க முடியுமென்றும் செய்தி யனுப்பினான்.

புலிகேசியோ, அவ்வளவு காலம் வரையில் அங்கே காத்திருக்கச் சம்மதப் படவில்லை. கொள்ளிடத்துக்குப் பாலம் கட்டி, தானே நதியின் தென்கரைக்கு வந்து பாண்டியனைச் சந்திப்பதாகச் சொல்லி யனுப்பினான். இதைக் கேட்டபோது, பாண்டியனுக்கு முதலில் வேடிக்கையாகத் தோன்றியது. "கொள்ளிடத்துக்காவது, பாலம் கட்டுவதாவது! — இதென்ன பைத்தியம்!" என்று சொல்லிச் சிரித்தான்.

ஆனால், மறு நாள் பாண்டியன் தான் தண்டு இறங்கிய இடத்திலிருந்து கொள்ளிட நதியை நோக்கிய போது, ஒரு அதிசயக் காட்சி தென்பட்டது. கொள்ளிடத்துக்கு உண்மையாகவே பாலம் போட்டிருந்தது. சாதாரண பாலம் அல்ல; நதியில் யானைகளை வரிசையாக நிறுத்தி வைத்து, அவற்றின் முதுகின் மேல் பலகைகளைக் கோத்து அதிசயமான பாலம் அமைத்துக் கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சியானது பாண்டியனுக்கு வாதாபிச் சக்கரவர்த்தியின் மேல் மறுபடியும் மரியாதையை உண்டாக்கிற்று.

அந்த யானைப் பாலத்தின் வழியாகப் புலிகேசி தன்னுடைய முக்கிய பரிவாரங்களுடன் ஆற்றைக் கடந்து வரவும், பாண்டியனும் மற்ற இரு குறுநில மன்னர்களும் அவனுக்குத் தக்க மரியாதை செய்து இராஜோபசாரத்துடன் வரவேற்றார்கள்.

பேரரசர்கள் இருவரும் மூன்று தினங்கள் பரஸ்பரம் அளவளாவி மகிழ்ந்தார்கள். பல்லவர்களுடைய கொட்டத்தை அடக்க வேண்டும் என்பதில் இருவருக்கும் பூரண மன ஒற்றுமை இருந்தது. எனவே, பல்லவ வம்சத்தை அடியோடு அழித்து விட வேண்டும் என்றும், காஞ்சி நகரம் வரையில் பாண்டிய ராஜ்யத்துடன் சேர்த்துவிட வேண்டுமென்றும் காஞ்சிக்கு வடக்கேயுள்ள பகுதியை சளுக்க சாம்ராஜ்யத்துடன் சேர்த்து விட வேண்டுமென்றும் அவர்கள் ஒருமுகமாய் முடிவு செய்தார்கள்.

ஜயந்தவர்ம பாண்டியன் தானும் தன் சைன்யத்துடன் காஞ்சிக்கு அப்போதே கிளம்பி வருவதாகச் சொன்னபோது, காஞ்சியைக் கைப்பற்றும் கௌரவத்தைத் தனக்கே விட்டுவிட வேண்டுமென்று வாதாபிச் சக்கரவர்த்தி ரொம்பவும் கேட்டுக் கொண்டான். காஞ்சிக் கோட்டை விழுந்ததாகக் கேள்விப்பட்டவுடனே, பாண்டியன் அங்கிருந்து கிளம்பி காஞ்சிக்கு வரலாமென்றும், இப்போதைக்கு வாதாபி சைன்யத்துக்கு உணவுப் பொருள் மாத்திரம் கொடுத்து உதவும்படியாகவும் புலிகேசி கூற, பாண்டியனும் அதற்கிணங்கி, தன்னுடைய சைன்யத்துக்காகச் சேகரித்து வைத்திருந்த உணவுப் பொருள் அவ்வளவையும் கொடுத்து உதவினான்.



நஹுஷன்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பிரம்மஹத்தி தோஷத்தால் பிடிக்கப்பட்டுப் பதவியை விட்டு நீங்கின இந்திரன் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டான். அந்தக் காலத்தில் நஹுஷன் தேவராஜ பதவியில் அமர்ந்தான். அவன் முதலில் நன்கு மதிக்கப்பட்டு வந்தான். பூலோகத்தில் அரசனாக இருந்தபோது அவன் சம்பாதித்த புகழும் புண்ணியமும் சில நாட்கள் வரையில் அவனைக் காப்பாற்றி வந்தன. பிறகு கெட்ட காலம் ஆரம்பித்தது. தேவராஜ பதவியை அடைந்துவிட்ட கர்வம் அவன் அடக்கத்தையும் சீலத்தையும் கெடுத்து விட்டது. சுவர்க்க லோகமும் சுகானுபவ உலகமானபடியால் நஹுஷன் தன் மனத்தை அந்த அனுபவங்களில் செலுத்தினான். காமசித்தனாகி விட்டான். ஒரு நாள் இந்திராணியாகிய சசிதேவியைப் பார்த்தவன் அவள் மேல் மோகங் கொண்டான். துஷ்டபுத்தி யடைந்த நஹுஷன் சபையில் கூடினவர்களைக் கேட்கலானான் :

"தேவராஜனுடைய மனைவியான சசிதேவி என்னை ஏன் அடையவில்லை? நானல்லவோ இப்போது இந்திரன்? சீக்கிரம் அவளை என் கிருகத்திற்கு அனுப்புவீர்களாக" என்று உத்தர விட்டான்.

இந்த விஷயம் இந்திராணிக்குத் தெரிந்து துக்கமும் கோபமும் அடைந்தாள். தேவ புரோகிதரிடம் சென்று, "குருவே! என்னை இந்தக் கொடியவனிடமிருந்து காப்பாற்ற வேண்டும்!" என்று புலம்பினாள்.

பிருகஸ்பதி, "பயப்பட வேண்டாம், இந்திரன் சீக்கிரம் வந்து விடுவான். அவனை நீ மறுபடி அடைவாய்" என்று அபயதானம் செய்தார்.

சசிதேவி தன்னுடைய விருப்பத்துக்கு இணங்கவில்லை என்றும் பிருகஸ்பதியிடம் சரணம் புகுந்து அவருடைய கிருகத்தில் இருக்கிறாள் என்றும் அறிந்து நஹுஷன் மிகுந்த கோபம் அடைந்தான்.

நஹுஷனுடைய சினத்தைக் கண்டு அஞ்சி தேவர்கள், "தேவராஜனே! கோபித்துக் கொள்ளாதீர். நீர் சினம் கொண்டால் உலகமே வருந்தும். சசிதேவி பிறனுடைய மனைவி. அவளை நீர் விரும்பலாகாது. தருமத்தைக் காப்பாற்றும்" என்றார்கள்.

காம மயக்கம் கொண்ட நஹுஷன் தேவர்களுடைய சொல்லைக் கேட்கவில்லை. கோபங் கொண்டு அவர்களுடைய பேச்சைத் தடுத்து, "முன்னர் இந்த இந்திரன் அகலிகையைத் தீண்டிய காலத்தில் உங்களுடைய தருமம் எங்கே மறைந்திருந்தது? அப்போது ஏன் நீங்கள் அவனைத் தடுக்கவில்லை? என்னை மாத்திரம் ஏன் இப்போது தடுக்கிறீர்கள்? தவத்திலிருந்த விசுவரூபனை அவன் கொன்றபோது நீங்கள் என்ன செய்தீர்கள்? விருத்திரனை வஞ்சித்துக் கொன்றவனை நீங்கள் ஏன் பொறுத்தீர்கள்? சசிதேவி என்னை வந்து அடைவதே அவளுக்கு நலம். அவளைச் சமாதானப்படுத்தி என்னிடம் ஒப்புவிப்பதே உங்களுக்கும் க்ஷேமம்" என்று கட்டளை யிட்டான்.

தேவர்கள் நஹுஷனுடைய கோபத்துக்குப் பயந்து பிருகஸ்பதியிடம் சமாதானம் சொல்லி இந்திராணியை எப்படியாவது நஹுஷனிடம் சேர்த்து விடுவது என்று நிச்சயித்தார்கள். எல்லாரும் சேர்ந்து அவரிடம் போனார்கள். போய் நஹுஷனுடைய பிரதாபத்தைச் சொல்லி இந்திராணியை நஹுஷனுடைய விருப்பத்துக்கு இசைய வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். சசிதேவி நடுங்கினாள்.

"ஐயோ! என்னால் முடியாது! பிராம்மணரே! உம்மைச் சரணம் அடைந்தேன். என்னைக் காப்பாற்றும்" என்று பிருகஸ்பதியிடம் அலறினாள்.

பிருகஸ்பதி அவளைத் தேற்றி, "சரணமடைந்தவனைச் சத்துருவினிடம் காட்டிக் கொடுக்கிறவன் நசித்துப்போவான். பூமியில் அவன் நட்ட விதையுங்கூட முளைக்காமல் நசித்துப் போகும். உன்னை நான் கைவிட மாட்டேன். நஹுஷனுக்கு விநாசகாலம் நெருங்கி விட்டது. நீ பயப்படாதே. கால விசேஷத்தால் உண்டான சங்கடம் கால விளம்பத்தால் தீர்த்துக் கொள்ளப்படும்" என்று பொருள் செறிந்த சொல்லைச் சொல்லிக் கஷ்டத்தினின்று தப்புவதற்கு வழியைக் குறித்தார். மகா புத்திசாலியான சசிதேவியும் அதைத் தெரிந்து கொண்டு தைரியமடைந்து நஹுஷனிடம் போனாள்.

சசிதேவியைக் கண்டதும் கர்வத்தினாலும் காமத்தினாலும் மதி யிழந்து விட்ட நஹுஷன், இந்திராணி தன்னிடம் வந்து விட்டாள் என்று தாங்காத களிப்பு அடைந்து "ஹே! அழகியே! மூன்று உலகங்களுக்கும் நான் அதிபதி. நீ பயப்பட வேண்டாம். என்னைப் பதியாக அடைவாயாக!" என்றான்.

துஷ்டனுடைய சொல்லைக் கேட்டுப் பதிவிரதையான இந்திராணி முதலில் நடுங்கினாள். பிறகு மனதை ஸ்திரப்படுத்திக்கொண்டு "தேவராஜனே! நான் உம்மை அடையவேண்டியவளே. ஆயினும் ஒரு விண்ணப்பம். இந்திரன் இருக்கிறானா? இல்லை, மாண்டானா? இருந்தால் அவன் இருப்பிட மெங்கே? இதை நான் விசாரித்துப் பார்த்துவிட்டு, அவனைத் தேடியும் அகப்படாமல் போனால் பிறகு என்மேல் தோஷம் இருக்காது. உம்மைச் சேருவேன்" என்றாள்.

நஹுஷனுக்குத் திருப்தியாயிற்று. "நீ சொல்லுவது சரியே. தேடிவிட்டு அவசியம் வந்துவிடு. வாக்குதத்தத்தைத் தவறாதே!" என்றான்.

இவ்வாறு ஒப்புக் கொண்டு சசிதேவி பிருகஸ்பதியின் வீட்டுக்குத் திரும்பினாள்.

தேவர்களும் மகா விஷ்ணுவிடம் சென்று நஹுஷனைப் பற்றிச் சொல்லி "நாதனே! விருத்திராசுரனைச் சம்ஹாரித்த வீரியம் உம்முடையது. ஆனால் இந்திரன் பிரும்மஹத்தி தோஷமடைந்து பீடிக்கப்பட்டு உலகத்தாரின் அபவாதத்துக்குப் பயந்து மறைந்து கிடக்கிறான். அவனுக்கு விமோசனம் சொல்லும்" என்று பகவானை வேண்டினார்கள்.

"என்னை ஆராதிக்கட்டும். அவன் பரிசுத்தனாவான். துஷ்ட புத்தி யடைந்த நஹுஷன் நாசமடைவான்" என்றான் நாராயணன்.

இந்திராணி கற்புக் கடவுளை வேண்டிக் கொண்டு அந்த தேவதையின் அருளால் இந்திரனுடைய இருப்பிடத்தை அடைந்தாள். அவன் மானஸஸரோவரத்தில் ஒரு தாமரைக் கொடியின் தண்டினுக்குள் ஒரு நூலில் தன் தேகத்தை அணு மாத்திரமாகச் செய்து கொண்டு வாசம் செய்து கொண்டிருந்தான். எப்போது பாவம் தீர்ந்து நல்ல நாள் வரும் என்று தவம் செய்து கொண்டு காத்திருந்த தன் பதியைப் பார்த்த சசிதேவி துக்கம் பொறுக்க முடியாமல் அழுதாள். தனக்கு உண்டான கஷ்டங்களை இந்திரனிடம் தெரியப்படுத்தினாள்.

இந்திரன் அவளுக்குத் தைரியம் சொல்லி "பாபம் செய்யத் துணிந்த நஹுஷனுடைய காலம் வெகுவாக நெருங்கி விட்டது. நீ ஏகாந்தமாக நஹுஷனிடம் சென்று அவனுடைய விருப்பத்துக்கு இணங்கியதாகவே அவனிடம் சொல்லு. ரிஷிகள் தூக்கிய பல்லக்கில் அவனை உன்னுடைய இருப்பிடத்துக்கு வரச்சொல்லு. நஹுஷன் அழிவான்" என்று சொல்லி அனுப்பினான்.

அவளும் இந்திரன் சொன்னவாறு நஹுஷனிடம் சென்றாள்.

சொன்னபடி தவறாமல் வந்துவிட்டாள் என்று நஹுஷன் மிக்க மகிழ்ந்து "ஹே! கல்யாணி! நீ என்ன விரும்புகிறாய்? அதைச் செய்ய நான் காத்திருக்கிறேன். சத்தியப் பிரதிக்ஞை தவறாமல் நீ வந்திருக்கிறாய்" என்றான் மூடன்.

"ஆம், வந்துவிட்டேன். நீரே எனக்குப் பதியாகப் போகிறீர். ஜகத்துக்கு நீர் அதிபதியல்லவா? எனக்குப் பிரியமான ஒரு காரியம் செய்ய வேண்டும். மகாவிஷ்ணுவுக்கும், ருத்திரனுக்கும், தேவாசுரர்களுக்கு மில்லாத ஒரு வாகனத்தை அமைத்துக் கொண்டு நீர் கம்பீரமாக என் இருப்பிடம் வரவேண்டும். பிரபுவே! சப்தரிஷிகள் உம்மைப் பல்லக்கில் தூக்கி வரவேண்டும்; நான் எதிர் கொண்டு அழைத்துக் கொள்ள வேண்டும்" என்றாள்.

"கற்பனா சக்தியில் சிறந்த அழகியே! நல்ல யோசனை சொன்னாய். நீ விரும்பும் வாகனம் மிகவும் அபூர்வ வாகனமாகும். எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. யாரைப் பார்க்கிறேனோ அவனு

டைய தேஜுக என்னை வந்து சேரும் என்கிற வரத்தை அடைந்திருக்கும் என்னை மகரிஷிகள் தூக்கிச் செல்லுவது நன்றாகப் பொருந்தும். நீ சொன்னவாறே செய்கிறேன்" என்று சொல்லி அவனை அனுப்பி விட்டு, மதோன்மத்தனான நஹுஷன் மகரிஷிகளை அழைத்துத் தன் பல்லக்கைச் சுமக்கச் சொன்னான். இந்தப் பாபச் செயலைக் கண்டு மூன்று உலகங்களும் பயந்து நடுங்கின.

பல்லக்கில் ஏறிச் செல்லச் செல்லப் பாபத்தின் வேகம் அதிகரித்தது. சசிதேவியின் அழகிய தோற்றத்தை மனதில் சிந்தனை செய்து கொண்டு அவளைச் சீக்கிரம் அடைய வேண்டும் என்று நஹுஷன் அவசரப்பட்டான். பல்லக்கைத் தூக்கிய முனிவர்களை வேகமாக நடக்கும்படி அடிக்கடி சொன்னான். தூக்கிச் சென்ற ரிஷிகளில் ஒருவரான அகஸ்தியரைக் காலால் உதைத்து "ஸர்ப்ப! ஸர்ப்ப!!" என்று அதட்டினான்.

"ஸர்ப்ப! ஸர்ப்ப!!" என்றால் "நட! நட!" என்று பொருள்படும்படியான வேகக் குறிப்பு; ரிக்ஷா ஓட்டுபவர்களை, "போ, போ" என்று சிலர் சொல்லுவது போல். அப்போது நஹுஷனுடைய பாப பாரம் பூரணம் ஆயிற்று. "அதமனே! நீ சுவர்க்கத்திலிருந்து விழ்வாய்! 'சர்ப்ப சர்ப்ப' என்று முனிவர்களை அதட்டிய நீ ஒரு மலைச் சர்ப்பமாகி பூமியில் வாழக்கடவாய்!" என்று சபித்தார் அகஸ்தியர்.

அந்தக் கணமே நஹுஷன் தலைகீழாக விழுந்தான். மலைப் பாம்பாகப் பிறப்பெடுத்துச் சாப விமோசனத்துக்காகப் பல்லாண்டு காத்துக் கொண்டு கிடந்தான்.

இந்திரன் மறுபடி தேவராஜ பதவியில் அமர்ந்தான், சசிதேவியும் ஆறுதல் அடைந்தாள். இவ்வாறு இந்திரனும் இந்திராணியும் பட்ட கஷ்டங்களை யுதிஷ்டிரனுக்கும் திரௌபதிக்கும் மாமனான சல்லியன் உபப்பிலாவ்ய நகரத்தில் சொல்லி அவர்களுடைய துயரத்தை ஆற்றினான்.

"பொறுத்தாருக்கு வெற்றி உண்டு. செல்வப் பெருக்கினால் மதம் கொண்டவர்கள் நாசமடைவார்கள். இந்திரனும் அவனுடைய பத்தினியும் ஆக்கம் அடைந்தது போல் நீயும் திரௌபதியும் உன் சகோதரர்களும் சொல்லொணாக் கஷ்டங்கள் அடைந்தீர்கள். அவை யெல்லாம் நீங்கி ராஜ்யத்தைச் சீக்கிரத்தில் அடைவாய். துஷ்ட புத்தியுள்ள கர்ணனும் துரியோதனனும் நஹுஷனைப்போல் நாசமடைவார்கள்" என்றான் சல்லியன்.

யுத்த காலம்



தேவை

சென்னையிலுள்ள இந்தியா கவர்ண்மெண்ட் பப்ளிக் இன்பர்மேஷன் ப்யூரோவில் தாற்காலிகமான தமிழ் உதவி ஜர்னலிஸ்ட் ஸ்தானத்துக்கும் தமிழ் டைப்பிஸ்ட் ஸ்தானங்களுக்கும் ப்ரிட்டிஷ் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த ஸ்தானங்கள் யுத்த முடிவு வரை இருக்கக் கூடும்.

உதவி ஜர்னலிஸ்ட்: வயது 21-35. சம்பளம் 150-5-200. நல்ல கல்லூரிப் பயிற்சியும் பத்திரிகை அனுபவமும் அத்தியாவசியம். ஏதேனும் ஒரு தமிழ்த் தினசரிப் பத்திரிகை ஆபீஸில் குறைந்தது 12 மாத காலம் சேர்ந்தாற் போல் வேலை செய்து அனுபவப் பட்டவர்களுக்கு முதன்மை கொடுக்கப்படும். ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பதில் நல்ல திறமை அத்தியாவசியம். விண்ணப்பதாரர்கள் நற்சாக்ஷிப் பத்திரங்களின் நகல்களுடன், பிரசுரமான கட்டுரைகளின் பிரதிகளை, சாத்தியமான இடங்களில் கையெடுத்திட்டு, அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும்.

டைப்பிஸ்டுகள்: வயது 18-35. சம்பளம் ரூ. 60-2-80-3-120. விண்ணப்பதாரர்கள் மெட்ரிகுலேஷன் அல்லது அதற்குச் சமமான பரீக்ஷையில் தேறியவர்களாகவும், திருத்தமாயும் துரிதமாயும் தமிழில் டைப்படிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும் சக்தியும் நல்ல கையெழுத்தும் அத்தியாவசியம். பத்திரிகை அனுபவமுள்ளவர்களுக்கு முதன்மை கொடுக்கப்படும். விண்ணப்பதாரர்கள், நற்சாக்ஷிப் பத்திரங்களின் நகல்களுடன், பத்திரிகைப் பயிற்சியையும் இதர யோக்யதாம்சங்களையும் பற்றிய விவரங்களை அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் தமிழில் தத்தம் கையெழுத்தில் இருக்க வேண்டும்.

சென்னையில், தேர்ந்தெடுக்கும் கமிட்டியார் முன் அவரவர் செலவில் பரீக்ஷைக்கும் பேட்டிக்கும் ஹாஜராகும்படிச் சில பேர் அழைக்கப்படுவார்கள். விண்ணப்பங்கள், பிரின்சிபல் இன்பர்மேஷன் ஆபீஸர், ப்யூரோ ஆப் பப்ளிக் இன்பர்மேஷன், கவர்ண்மெண்ட் ஆப் இந்தியா, 7, வுட்ஸ் ரோட், சென்னை என்ற விலாசத்துக்கு 1945 மார்ச் 9உக்குள் வந்து சேர வேண்டும்.

சர்க்காரின் தனிப் பாதுகாப்புப் பத்திரம்



நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளின் விலை ரூ. 10/-. 12 வருஷங்களுக்குப்பிறகு அதன் மதிப்பு ரூ. 15/-. இது 4¼ சதவட்டிக்கு சமமானது. அதாவது நீங்கள் இப்பொழுது ரூ. 1000 முதல் போட்டால் ரூ. 1500 திரும்பப் பெறுவீர்கள். பணத்தை திரும்ப பெறும் வரையில், பணமும் பாதுகாப்பாய் இருக்கிறது.

3 வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் அவைகளைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

நீங்கள் அவைகளை சர்க்காரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடமோ அல்லது சேவிங்ஸ் பீரோ அல்லது தபாலாபீஸ்களிலோ வாங்கலாம்.

நேஷனல் சேவிங்ஸ்
சர்ட்டிபிகேட்டுகளை வாங்குங்கள்

AAA 1243 TM

ஏழு யுகங்கள்



வஸந்தன்

பாலசந்திரனுக்கு விடுமுறை நாளாகயிருந்தும், அவன் அன்று வெளியில் போகவில்லை. வாசற்படிக்கு எதிரில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு அருகில் ஒரு நாற்காலியில் அவன் மனைவி சாமளாவும் உட்கார்ந்து, தோட்டத்திலிருந்து பறித்து வந்திருந்த மல்லிகைப் பூக்களைத் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

சாயங்கால வேளையின் குளிர்ந்த காற்று ஜிலுஜிலு வென்று வீசிக் கொண்டிருந்தது. இத்துடன், மல்லிகை வாசனையை அக் காற்று சுமந்து சென்று எங்கும் பரிமளிக்கச் செய்தது. இவ்வளவுடன் சேர்ந்து, அடிக்கடி சாமளாவின் கடைக்கண் பார்வையும் அவன் மேல் பட்டுக் கொண்டிருந்தபடியால் பாலசந்திரனால் வாயை மூடிக்கொண்டு இருக்க முடியவில்லை. ஆனால், இளம் தம்பதிகள் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் பேசக்கூடிய இன்ப மொழிகளை அவர்கள் பேச ஆரம்பித்தபடியால், அதை இங்கே எழுதுவது மட்டும் சாத்திய மில்லாமலிருக்கிறது.

இச்சமயத்தில்தான் "ஸார், தபால்!" என்று தபால்காரனின் குரல் கேட்டது. பாலசந்திரன் எழுந்து போய், கடிதத்தை வாங்கிக் கொண்டு வந்தான்.

"எங்கேயிருந்து கடிதம் வந்திருக்கிறது? வாசியுங்கள்!" என்றாள் சாமளா.

அக்கடிதத்தைப் பிரித்ததுமே பாலசந்திரனின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"மகா-ா-ா-ஸ்ரீ மாப்பிள்ளை அவர்களுக்கு அநேக ஆசீர்வாதம்"

என்று வாசிக்கும் போதே, சாமளா "வீட்டை ரிபேர் பண்ணச் சொன்னேன்! மழை வந்து கொட்டப் போகிறது" என்றாள். பாலசந்திரன் மேற்கொண்டு கடிதத்தை வாசித்தான்:

"ரொம்ப நாளாகத் தங்களிடமிருந்து கடிதமே இல்லை. சௌ. சாமளா சௌக்கியமா? வரும் சித்திரையில் சௌ. சரோஜாவுக்குக் கல்யாணம் செய்வதாக நிச்சயம் செய்திருக்கிறது. சௌ. சாமளாவை அழைத்துக் கொண்டு வரவும். ஒரு வாரம் முன்னாலேயே வந்து முகூர்த்தத்தை நடத்தி வைத்து விட்டுப் போக வேண்டும். முகூர்த்தப் பத்திரிகையும் பின்னால் அனுப்பி வைக்கிறேன்.

புருஷோத்தம ஐயர்."

"ஐயோ, பாவம்! நாம் போய் நடத்தி வைக்க வேண்டுமாமே. இல்லா விட்டால் நடக்காதா? நாம் போகாவிட்டால் சம்பந்திப் பேர்கள் கல்யாணத்திற்கு வரமாட்டார்களா? அல்லது, மாப்பிள்ளை ஊர்வலத்தில் மோட்டார்தான் நகராதா?" என்றாள் சாமளா.

இப்படி வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் சாமளா கூறினாளே தவிர, அவள் குரலில் உற்சாகம் குறைந்திருந்ததையும், அவள் பேச்சில் வழக்கமாகத் தொனிக்கும் தீவிரம் இல்லாததையும் கண்டுகொண்டான் பாலசந்திரன்.

ஆகவே, அவள் மனதை ஆராயும் உத்தேசத்துடன், "சாமளி! நிஜமாகச் சொல்கிறேன். எனக்கும் மாமனாருக்கும் எவ்வளவு பகை இருந்தாலும் இப்பொழுது நாம் விட்டுக் கொடுக்கக் கூடாது. நாலு பேருக்கு மத்தியில் நாம் கல்யாணத்துக்குப் போகாமல் அவர்களை ரூளி பண்ணக் கூடாது" என்றான் பாலசந்திரன்.

"காரியா காரியத்தில் விட்டுக் கொடுக்கக்கூடாது என்கிறீர்களே! உங்கள் தங்கை இறந்து போனதற்கு அவர்கள் வந்தார்களா? உங்களுக்கு உடம்புக்கு வந்ததே, கண்ணை விழிக்காமல் ஒரு மாசம் படுத்துக் கொண்டு இருந்தீர்களே, அப்பொழுது வந்து எட்டிப் பார்த்தார்களா?"

"சாமளா! என்ன பைத்தியக்காரப் பேச்சுப் பேசுகிறாய்? இந்தக் கல்யாணத்

துக்கு யாரை உத்தேசித்துப் போகப் போகிறாய்? உன் அப்பாவையும் அம்மாவையும் உத்தேசித்தா? ஒரு காரணமும் இல்லை. இது ஸரோஜாவின் கல்யாணம் அல்லவா? நீ கல்யாணத்துக்குப் போகாவிட்டால் உன் தங்கை ஏங்கிப் போக மாட்டாளா? யோசித்துப் பார்" என்றான்.

"உங்கள் இஷ்டம் போலவே செய்யுங்கள்!" என்று சொல்லிவிட்டு மறுபடியும் பூவைத் தொடுக்க ஆரம்பித்தாள் சாமளா.

சாதாரணமாக இருந்திருந்தால், பாலசந்திரன் எவ்வளவோ சந்தோஷத்துடன் மைத்துனியின் கல்யாணத்துக்குக் கிளம்பியிருப்பான். ஆனால் இப்பொழுது அவன் மாமனார் வீட்டை அடியோடு வெறுத்ததற்கும், அந்தக் கடிதத்தைக் கண்டதுமே பெரிதும் ஆத்திரமடைந்ததற்கும் தகுந்த காரணங்கள் இருந்தன. சாமளாவைக் கல்யாணம் செய்து கொண்ட தினத்திலிருந்து நடந்த பல சம்பவங்கள் ஞாபகத்துக்கு வந்து அவன் உள்ளத்தில் கோபத்தீயை மூட்டின.

2

பாலசந்திரன் மிகவும் ஏழைதான். சாமளாவைக் கல்யாணம் செய்து கொடுக்கும் போதே அவன் ஏழையாகத்தான் இருந்தான். ஆனாலும், அவன் பி. ஏ. படித்தவன், சொன்னபடி கேட்கக் கூடியவன், எப்பொழுதும் தன்னருகில் பெண்ணையும் மாப்பிள்ளையையும் வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தினால் பாங்கர் புருஷோத்தம ஐயர் பாலசந்திரனை மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்தார்.

அது போலவே, பாலசந்திரன் சாமளாவைக் கல்யாணம் செய்து கொள்ளும் போது, அவள் பெரிய இடத்துப் பெண் என்று தெரிந்து கொண்டுதான் கல்யாணம் செய்து கொண்டான். அதனால் தான் முன்னுக்கு வருவதற்கு எவ்வளவோ உதவியாயிருக்கு மென்று எண்ணினான். ஆனால், கல்யாணம் ஆன சில மாதங்களுக்கெல்லாம் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது.

மாமனார் வீட்டிற்கு வந்த உடனேயே, மாமனார் பாங்காயிருக்க லாயக்கில்லை என்றும், எங்கேயாவது பள்ளிக்கூட உபாத்தியாயராக இருக்க வேண்டியவர்தானென்றும் மாப்பிள்ளைக்குத் தோன்றி விட்டது. அதே மாதிரி, மாமனாருக்குப் பையன் அதிகப் பிரசங்கி என்றும் தன் பணத்தைத் தொலைப்பதற்காக வந்திருக்கும் சத்துரு என்றும் தோன்றி விட்டது. ஆகவே நிலைமை ரஸாபாஸமாகப் போவதற்கு முன் மாமனாரிடமிருந்து கௌரவமாகவே விலகிக் கொள்ள வேண்டியதுதான் என்று பாலசந்திரன் தீர்மானித்தான்.

கணவனே கதி என்று நினைத்த சாமளாவும், மூட்டையைக் கட்டிக் கொண்டு அவனுக்கு முன்னால் புறப்பட்டு விட்டாள்.

"நீங்கள் என் உத்தரவில்லாமல் தனிக் குடித்தனம் செய்வதைப் பார்த்து விடுகிறேன்" என்று கர்ஜித்தார் மாமனார். அத்துடன் அவர் நிற்கவில்லை. மாப்பிள்ளை வேலையாயிருந்த பாங்கின் டைரக்டரிடம் சென்று தமது அபார செல்வாக்கை உபயோகித்து அவன் வேலையும் போகும்படி செய்து விட்டார்.

இந்தத் துரோகத்தைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத சாமளாவும் பாலசந்திரனும் திகில் பிடித்துப் போய்விட்டார்கள். கடைசியில் ஒரு சொந்தக்காரர் உதவியால் திருச்சினாப்பள்ளியில் ஒரு பள்ளிக்கூடத்தில் பாலசந்திரனுக்கு உபாத்தியாயர் வேலை கிடைத்தது. உயிர் போனாலும் மாமனார் முகத்தில் விழிப்பதில்லை என்று தீர்மானித்துக்கொண்டு, பாலசந்திரன் மனைவியுடன் திருச்சிக்கு வந்து சேர்ந்தான்.

வருடங்கள் மூன்று ஆகிவிட்டன. மாமனாருக்கும் மாப்பிள்ளைக்கும் கடிதப் போக்கு வரத்தே கிடையாது. சில முக்கிய சந்தர்ப்பங்களில் சாமளா கணவனுக்குத் தெரியாமல் கடிதம் எழுதிப் போட்டும், அவள் தகப்பனாரிடமிருந்து பதில் வரவில்லை. இதிலிருந்து கணவனை உதாசீனம் செய்த தந்தையை அவள் மனமார வெறுக்கத் தொடங்கினாள். பெற்றோர்களிடம் அவளுக்கு இருந்த கொஞ்ச நஞ்சப் பற்றுதலும் அடியோடு மறைந்து விட்டது.

மனைவியின் மாசற்ற அன்பில் வறுமையின் கொடுமையைக்கூட பாலசந்திரன் மறந்து விட்டான். எந்த விஷயத்திலும் தம்பதிகளுக்குள் அபிப்பிராய பேதமே கிடையாது. ஆனால் சாமளாவைப் பார்க்கும் போதெல்லாம் பாலசந்திரன் மனத்தின் அடிவாரத்தில் சந்தோஷம் கலந்த வருத்தம் குடிகொண்டிருந்தது. பெரிய தனவந்தர் வீட்டுப் பெண், எவ்வளவோ நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட வேண்டியவள், ஏழைக்கு வாழ்க்கைப்பட்டுக் கஷ்டப்படுவதை நினைத்து வருத்தப்பட்டான். அவனுக்குச் சம்பளம் ரூபா ஐம்பதுதான். அதற்

ருன் அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டும். சாமளா கட்டிக் கொள்வதோ எட்டு ரூபாயில் சாதாரணப் புடவை. இப்படியிருக்கும் ஒரு நாள் கூட, "எனக்கு அதை வாங்கிக் கொடுக்க வேண்டும்; இதைச் செய்ய வேண்டும்" என்று சாமளா வாயைத் திறந்து கேட்டதில்லை. ஒரு நாள்கூட அலுத்துச் சலித்துக் கொண்டதில்லை. யாரை உத்தேசித்துச் சாமளா இவ்வாறு தியாக வாழ்க்கை நடத்துகிறாள் என்று நினைத்தபோது பாலசந்திரனுக்கு உலகமே சுவர்க்கமாக இருந்தது.

இந்தச் சமயத்தில்தான் மாமனாரிடமிருந்து எதிர்பாராத கடிதம் வந்தது.

3

"உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள்!" என்று சாமளா கூறியதும் பாலசந்திரனுக்குச் சுருக்கென்றது. அவன் எதிர்பார்த்த பதில் வேறு. "ஸரோஜா கல்யாணமாகட்டும்; வேறு என்னவானாலும் நடக்கட்டும்; நான் பிறந்தகத்தில் அடி எடுத்து வைக்க மாட்டேன்" என்று மனப் பூர்வமான பதிலைத்தான் அவன் மனைவியிடமிருந்து எதிர்பார்த்தான். ஆகவே, அவன் மனக் குழப்பத்தை மறைத்துக் கொண்டு வெளியில் உலாவி வருவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அருகிலுள்ள பார்க்கில் உட்கார்ந்து யோசித்தான். தகப்பன் வீட்டுக்குப்போகக் கூடாது என்று இத்தனை நாளாய்ப் பிடிவாதமாயிருந்த சாமளா இப்பொழுது போக ஆசைப் படுவானேன்? அவள் வைராக்கியம் தளர்ந்து விட்டதா? தகப்பனார் செய்த அவமரியாதையை இதற்குள் மறந்து விட்டாளா? அல்லது மூன்று வருஷமாகக் குடித்தனம் செய்ததில் அலுப்பு ஏற்பட்டு, பிறந்தகம் போக வேண்டுமென்று தோன்றி விட்டதா? மூன்று வருஷ காலம் தரித்திரத்தில் கஷ்டப்பட்ட பிறகு, ஓராயாக ஒரு மாதம் பிறந்தகத்தில் இருக்க வேண்டுமென்று ஆசை உண்டாகி விட்டதா? எப்படியானாலும் என்ன? சாமளாவின் இஷ்டத்திற்கு விரோதமாக அவன் ஒன்றும் செய்ய விரும்பவில்லை. இஷ்டத்திற்கு விரோதமாக யாரைக் கட்டாயப் படுத்தி வைத்திருக்க முடியும்?—ஆகவே அவள் மனம் கோணாமல் முகூர்த்தத்துக்குக் கொண்டுபோய் விடுவதென்று நிர்மாணித்தான் பாலசந்திரன்.

முகூர்த்த நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. பாலசந்திரன் தன் மனைவியிடம் ஒரு மாறுதலைக் கவனித்தான். அவள் முகத்தில் புது சோபையும் குதூகலமும் தாண்டவமாடின. என்ன இருந்தாலும் பிறந்தகத்துக்குப் போவதென்றால் சந்தோஷமாகத் தான் இருக்கும்; இந்த சந்தோஷம் கிடைக்க வொட்டாமல் இத்தனை நாள் செய்தது அவன்தான்—அவன் ஏழ்மைதான் என்பதை நினைத்துப் பார்த்துக்கொண்டதும், அவன் மனதை என்னவோ செய்தது. அவன் ஏழையா யிருப்பதால்தானே, மாமனார் அவனை உதாசீனம் செய்யும்படியாயிற்று? அதனாலல்லவா இவ்வளவு சண்டையும் பூசலும்?

கல்யாணம் லீவு எடுத்துக்கொண்டு முகூர்த்தத்துக்கு இரண்டு நாள் முன்னால் பாலசந்திரன் மனைவியுடன் சென்னைக்கு வந்தான். மாமனார் வீட்டுக் கார் ரயிலடிக்கு வந்திருந்தது. தம்பதிகள் இருவரும் காரில் உட்கார்ந்து கொண்டார்கள்.



பாலசந்திரன் வீட்டுக்குள்ளே சென்றான். மாமியார் அப்பொழுது எதிரே வந்தவள், அவனைப் பார்த்துவிட்டு, "வாருங்கள்!" என்று அரைகுறையாகக் கூப்பிட்டுவிட்டு, பெண் கையைப் பற்றி உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

சிறிது நேரம் கழித்து வந்த மாமனாரும் அவனுடன் கலகலப்பாகப் பேசவில்லை. என் வந்தோம்

என்று அவனுக்குத் தோன்றி விட்டது. ஆனால் சாமளாவை உத்தேசித்து முகூர்த்தம் நடக்கும் வரை இருந்து விட்டுப் போவ தென்று நிர்மானித்தான்.

இதற்குப் பிறகு, அந்த இரண்டு தினங் களும் பாலசந்திரனுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோலவும் முள்ளின் மேல் இருப்பது போலவுமிருந்தது. சாமளாவுக்கு இருந்த அசாத்திய வேலையில் அடிக்கடி வந்து அவனைக் கவனித்துக் கொள்ள முடியவில்லை. அவள் உயர்ந்த பட்டுப் புடவைகளை அணிந்து கொண்டு, வைர நகைகள் ஜொலிக்க அழகே அவதரித்தது போல் காரில் ஏறிக்கொண்டு அங்கு மிங்கும் போய்க்கொண்டிருந்தாள். வருகிறவர்களை வரவேற்றுக் கொண்டும், வேலைக்காரர் களுக்கு உத்தரவிட்டுக் கொண்டு மிருந் தாள். பாலசந்திரனுக்கு அவள் யாரோ மாதிரி இருந்தது. அவளுக்கும் தனக்கும் மத்தியில் பெரிய பிளவு ஏற்பட்டு விட்டது போல் அவனுக்குத் தோன்றியது.

முகூர்த்தம் முடிந்தது. பாலசந்திரன் சாமளாவைக் கூப்பிட்டான். "உனக்கு எவ்வளவோ வேலையிருக்கலாம். ஒரு நிமிஷம் இப்படி வந்து நான் சொல்வதைக் கேட்டு விட்டுப் போ" என்று வினயமாக அழைத் தான். சாமளா அருகில் வந்ததும், "லீவு முடிந்து விட்டது. நாளைக்குப் பள்ளிக் கூடத்தில் இருக்க வேண்டும்! என்ன சொல்கிறாய்?" என்றான். சாமளா தயங்கி யதைப் பார்க்க அவனுக்கு ஆச்சரியமா யிருந்தது. "அம்மா சொல்கிறாள்!" என்று ஆரம்பித்தாள் சாமளா.

"விஷயத்தைச் சொல்லேன். என் னுடன் நீ இப்பொழுது வரப்போகிறதில்லை. அவ்வளவுதானே?"

"கோபித்துக் கொள்ளாதீர்கள். அப்பா வுக்கு உடம்பு சரியாயில்லை. கல்யாணத் துக்காக அலைந்ததில் பழைய வயிற்று வலி அவருக்கு வந்து விட்டது."

"நீ இங்கே இருந்து அப்பாவைக் கவ னித்துக் கொள்ள வேண்டியது அவசியம் தான். அப்பாவுக்கு உடம்பு சௌகரிய மானதும் வரலாம்! அவசரம் இல்லை" என்று அவன் கோபத்தை அடக்கிக் கொண்டு கூறினான்.

இதற்குள், நாலு தடவை சாமளாவைக் கூப்பிட வந்து விட்டார்கள். கணவன் மனதில் அடித்த புயலின் வேகத்தைச் சாமளா அந்தப் பரபரப்பிலும் உற்சாகத் திலும் அறிந்துகொள்ள வில்லை.

"மன்னிக்கவும்; நான் நாலு நாளைக் கொரு தடவை கடிதம் எழுதுகிறேன். ஹோட்டலில் சாப்பாடு வரவழைத்துச் சாப் பிடுங்கள். சமையல் உள்ளில் அலமாரியில் கடைசித் தட்டில் ஊறுகாய் ஜாடி வைத் திருக்கிறேன். போட்டுக் கொண்டு சாப் பிடுங்கள்" என்றெல்லாம் கூறினாள் சாமளா.

பாலசந்திரன் ஏதோ பட்டும் படாமலும் பதில் சொல்லி விட்டுக் கிளம்பினான்.

4

ஊருக்குத் திரும்பி வந்ததும் பால சந்திரனுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. அவனுக்கு வேலையே ஓட வில்லை. சாமளா இல்லாத வீடு பாழா கவே அவனுக்குத் தோன்றியது.

ஒவ்வொரு நாளும் போவது அவனுக்கு ஒவ்வொரு யுகமாக இருந்தது. இவ்வாறு ஏழு யுகங்கள் ஆகிவிட்டன. அன்று ஞாயிற்றுக்கிழமை. சாமளாவின் கடிதம் வராதா என்று அவன் உள்ளம் ஏங்கியது. வாசலையே எதிர்பார்த்த வண்ணம் இருந் தான். தபால்காரன் அன்றும் வரவே யில்லை. பாலசந்திரன் அயர்ந்து போய் நாற் காலியில் சாய்ந்தான்.

அப்பொழுது வாசலில் வண்டி நிற்கும் சத்தம் கேட்டது. பாலசந்திரன் தலை நிமிர்ந்து பார்த்தான். எதிரே சாமளாவைப் பார்த்துத் திடுக்கிட்டு எழுந்தான்.

இருவரும் ஒருகணம் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு மௌனமாக நின்றார்கள்.

"ஏன் வந்துவிட்டாய்?" என்றான் பால சந்திரன் மெதுவாக.

"என் தவறை முதலில் மன்னித்து விட்டதாகச் சொல்லுங்கள்" என்றாள் சாமளா.

"என்ன தவறு?"

"அப்பாவிடமிருந்து கடிதம் வந்ததும், ஏதோ எனக்கு மகுடாபிஷேகம் செய்து விட்டதாக நினைத்துக் கொண்டு விட்டேன். இது நான் செய்த முதல் தவறு. ஆனால், நம்மைக் கௌரவிப்பதற்காகக் கடிதம் போடவில்லை, அவர்களைக் கௌர வித்துக் கொள்வதற்காகத்தான் நம்மைக் கூப்பிட்டிருக்கிறார்கள் என்று பின்னால் தெரிந்து கொண்டேன்."

"நீ சொல்வது ரொம்ப வேடிக்கையாயிருக்கிறதே!"

"ஆமாம்; நாம் கல்யாணத்துக்குப் போகாவிட்டால் மூத்த பெண்ணும் மாப்பிள்ளையும் என் வரவில்லை என்று எல்லோரும் கேட்பார்களல்லவா? அதனால் தான் நம்மை அழைத்திருக்கிறார்கள். இன்னும், அம்மா எனக்கு நகைகளும் புடவைகளும் கொடுத்தபோது, உச்சி குளிர்ந்து போய் நான் தலைகால் தெரியாமல் கூத்தாடினேன். ஆனால், அவற்றை எனக்குக் கொடுத்தது நான் சந்தோஷப்பட வேண்டுமென்பதற்காக அல்ல. இவ்வளவு நகைகளும் புடவைகளும் வீட்டில் இருக்கின்றன என்று எல்லாரும் மெச்சிக்கொள்வதற்காகத் தான் என்று பின்னால் தெரிந்து கொண்டேன். இதுமாதிரி ஒவ்வொரு காரியமும் அவர்கள் நல்ல எண்ணத்தோடு செய்யவில்லை. ஜம்பத்துக்காகவும் சொந்த கௌரவத்துக்காகவும் செய்தார்களென்று தெரிந்து போயிற்று. கல்யாணம் முடிந்ததும் எல்லா நகைகளையும் கழற்றிக் கொடுக்கும்படி அம்மா சொல்லிவிட்டாள். அம்மாவும் அப்பாவும் பழையபடிதான் இருக்கிறார்கள். அவர்கள் மாறிவிட்டதாக நான் நினைத்தது பிசகு."

"அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னாயே? உன் கோபத்தைக் காட்ட இதுதானா சமயம்? நீ அங்கே இருந்து அவரைக் கவனித்துக் கொள்ள வேண்டாமா?"

"என், அப்பாவைக் கவனித்துக்கொள்ள டாக்டர் இருக்கிறார், நர்ஸ்கள் இருக்கிறார்கள். அப்பாவைக் கவனித்துக்கொள்ள அம்மாகூட வேண்டியதில்லை. நான் எதற்கு? தேவையில்லாத இடத்தில் ஒருவர் எதற்கு இருக்கவேண்டும்? ஆகையால் நான் தேவையான இடத்திற்கு ஓடிவந்து விட்டேன்."

பாலசந்திரன் மௌனமாக இருந்தான்.

"இந்த ஏழு நாளும் எனக்கு ஏழு யுகமாக இருந்தது. இனிமேல் நான் உங்களை விட்டுப் போக மாட்டேன்; ஒரு நாளும் போக மாட்டேன்" என்று சொல்லி வந்த சாமளா, சட்டென்று, "என் முகம் இப்படியிருக்கிறது. சரியாகச் சாப்பிடவேயில்லையா?" என்று கேட்டாள்.

பாலசந்திரன் அப்பொழுதும் பேசவில்லை. சாமளாவின் கண்களில் நீர் பொங்கிற்று. கணவன் கரங்களை வாரியெடுத்து அணைத்துக் கொண்டு, அவன் மன்னிப்பை வேண்டுகிறவள்போல் அவனைப் பார்த்தாள்.




பாலுவும் எலியும்



ராஜி







"அப்பா, பென்ஸிலைக் காணோம்" என்று அழுதான் பாலு. அதற்குப் பாலுவின் தகப்பனார் கோபத்துடன் "என்னடா இது? இன்று காலையில் வாங்கிக் கொடுத்த புதிய பென்ஸிலை அதற்குள் கெட்டுப்போக்கி விட்டாயே? நேற்றுப் புதிய ரப்பரைக் காணோம் என்றாய். அதற்கு முதல் நாள் பேனாவைத் தொலைத்துவிட்டு வந்தாய்" என்று கோபித்தார். பாலு என்ன செய்வான் பாவம்! பென்ஸிலையும் ரப்பரையும் வழக்கம்போல் அவன் மேஜையின் மீதுதான் வைத்திருந்தான். ஆனால் அவை எப்படிக் காணாமல் போயின என்று மட்டும் தெரியவில்லை.

ஒருநாள் பாலு சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பி வரும்பொழுது அறையிலுள்ள அவன் மேஜையின் உள்ளிருந்து ஒரு கொழுத்த எலி வெளியே வந்தது. "ஓஹோ! இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. காணாமற்போன பென்ஸிலுக்கும், ரப்பருக்கும் நீதான் காரணம்" என்றான் பாலு. கையில் ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டான். எலியை விடாமல் துரத்தினான். எலியும் "தப்பிப் பிழைத்தோம்" என்று தன் வளைக்குள் நுழைந்தது.

அன்று முதல், பாலுவின் கண்கள் கொழுத்த எலியின் மீதே இருந்தது. எங்கேயாவது தவறி பாலு கொழுத்த எலியைப் பார்த்து விட்டால் எலியின்பாடு திண்டாட்டம்தான். பாலு எலியை விரட்டு விரட்டு என்று விரட்டுவான்.

"பாலு! என்னுடைய சைக்கிளுக்குக் கொஞ்சம் எண்ணெய் போடு. அது கீச் கீச் என்று கத்துகிறது" என்றார் பாலுவின் தகப்பனார். உடனே பாலு தன் தகப்பனார் சொல்லிய படியே சைக்கிளுக்கு எண்ணெய் போட்டான். ஆனால் பாலுவின் தகப்பனார் ஆபீசுக்குப் போகும் பொழுதும் வரும் பொழுதும் சைக்கிள் முன்தினத்தைவிட அதிகமாகக் 'கீச் கீச்' என்று கத்திற்று. பாலுவின் தகப்பனாருக்கு பாலுவின்மீது மிகவும் கோபம் வந்தது. "சொன்னதைக் கேட்காத பிள்ளை என்ன பிள்ளை?" என்று வீடு திரும்பியதும் பாலுவைக் கடிந்து கொண்டார்.

"இல்லை அப்பா, நான் சைக்கிளுக்கு எண்ணெய் போட்டது உண்மையே" என்று சொல்லியும் அவன் தகப்பனார் கேட்கவில்லை. உடனே பாலு அப்பாவின் சைக்கிள் அருகில் சென்று பார்த்தான். பாலு வரும் சப்தத்தைக் கேட்டுச் சைக்கிளில் மறைந்து உட்கார்ந்து கொண்டிருந்த கொழுத்த எலி 'கீச் கீச்' என்று கத்திக் கொண்டு ஓடிற்று.


ஒரு நாள் "அப்பா, அப்பா, தடியை எடுத்துக் கொண்டுவா. கொழுத்த எலி உன் அறையில் உட்கார்ந்திருக்கிறது" என்று பாலு சொல்லவே தகப்பனார் கையில் தடியுடன் பாலு பின் தொடர "எங்கே கொழுத்த எலி?" என்று தம் அறைக்குள் சென்றார். ஆனால் அப்பொழுது அறையில கொழுத்த எலியைக் காணவில்லை. அதற்குப் பதிலாகப் பாலுவின் தகப்பனாரைப் பார்ப்பதற்காக ஓர் பருத்த மனிதர் அந்த அறையில் உட்கார்ந்திருந்தார். பாலுவின் தகப்பனார் "எங்கே அந்தக் கொழுத்த எலி?" என்று தடியுடன் வரும்பொழுது, வந்திருந்த பருத்த மனிதர் பாலுவின் தகப்பனார் தம்மைத்தான் குறிப்பிடுகிறார் என்று பயந்து போய் அறையை விட்டு வெளியே ஓடினார்.

அதைப்பார்த்த பாலுவின் தகப்பனார் வெட்கமடைந்து பாலு வேண்டுமென்றே குறும்பு செய்கிறான் என்று எண்ணி அவன் காதைப் பிடித்துத் திருகினார்.

அன்று பாலு கொழுத்த எலி வருவதைப் பார்த்து விட்டுத் தன் வீட்டு பக்ஷண அறையைத் தாளிட்டுச் சென்றான். கதவு தாளிடவே எலி "கதவு மூடி விட்டால் என்னால் பக்ஷண அறைக்குப் போக முடியாதா?" என்று ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது அறையின் எதிரில் ஒரு பெரிய ஜாடி கொண்டு வந்து வைக்கப்பட்டது. அதைப் பார்த்த எலி "இது தான் சரியான சமயம். இந்த ஜாடியைச் சற்று நேரத்திற்குள் உள்ளே கொண்டு போவார்கள். நான் இந்த ஜாடியில் ஒளிந்து கொண்டால் ஜாடியுடன் நானும் உள்ளே செல்வேன். பாலுவை ஏமாற்றி விட்டு நிரம்பப் பக்ஷணங்கள் தின்பேன்" என்று சொல்லிக் கொண்டே ஜாடியில் சப்தம் போடாமல் ஒளிந்து கொண்டது.


அந்த ஜாடியை வைத்தவன் பாலுதான் என்று எலிக்கு எப்படித் தெரியும்? பாலுவின் அத்தை மகாமக உற்சவத்துக்கு அன்று சாயங்காலம் ரயிலில் போகும்பொழுது ஜாடியைக் கூட எடுத்துக் கொண்டு போகப் போகிறான் என்பதை எலியினால் எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? ஜாடி ரயில்வே ஸ்டேஷனில் கொண்டு சேர்க்கப்பட்டது. ரயிலின் குப், குப் ஓசையையும் ஹீ, ஹீ என்ற சப்தத்தையும் கேட்ட எலி ஜாடிக்குள் ஏமாந்து தவித்து நின்றது. ஐந்து நிமிஷத்தில் தன் மனைவியையும் குழந்தைகளையும் விட்டு விட்டுத் தான் ரயிலில் செல்ல வேண்டும் என்று நினைக்க அதன் உடல் நடுங்கிற்று. அடிக்கடி பாலு, ஜாடிக்குள் எட்டிப் பார்த்ததிலிருந்து எல்லாம் பாலுவின் வேலைதான் என்று எலிக்குத் தெரிந்து விட்டது.

பாலு ஏமாந்த சமயம் விடரென்று எலி ஜாடியிலிருந்து கீழே குதித்து ஓடிற்று. பாலு எலி தப்பித்து ஓடுவதைப் பார்த்துச் சிரித்தான். "பாவம், போகட்டும்" என்று தனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டான். அன்று இரவு அவன் அறைக்குச் சென்ற போது, அவன் மேஜையின் மீது காணாமற்போன அவனுடைய பென்சில்கள், ரப்பர் துண்டுகள், காகிதங்கள், முதலிய யாவும் இருந்தன. அன்று முதல் கொழுத்த எலி விஷமம் செய்வதில்லை.









படித்துப் பார்!

புதிய சீனா

[ஆசிரியர்: வெ. சாமிநாத சர்மா; பிரசுரம்: சக்தி காரியாலயம், சென்னை; விலை: ரூ. 6—8—0.]

இரண்டு வருஷத்திற்கு முன்னால் ஜப்பானியர் பர்மாவை அவசர அவசரமாகப் பிடித்தார்கள். இப்போது மெள்ள மெள்ளக் காலி செய்துவிட்டுப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

மறுபடியும் பர்மா பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் முன்போலவே வந்துவிடப் போகிறது என்பதை நினைத்தால், நமக்கு ஒரு பக்கத்தில் சந்தோஷமாயிருந்தாலும், மற்றொரு பக்கத்தில் பெரிதும் கவலையாக இருக்கிறது. அதைப் பற்றி பர்மியர்கள் அல்லவா கவலையோ, சந்தோஷமோ அடைய வேண்டும், நமக்கென்ன வந்தது என்று கேட்டால், நமது வெங்கனத்தூர் சாமிநாத சர்மா அவர்கள் மறுபடியும் பர்மாவுக்குத் திரும்பிப் போய் விடப் போகிறாரே என்றுதான்.

ஸ்ரீ சாமிநாத சர்மா, பழைய தமிழ் எழுத்தாளருக்கும் புதிய மறுமலர்ச்சி எழுத்தாளருக்கும் இடைநடுவே நிற்பவர். எளிதில் பொருள் விளங்காத பண்டிதத் தமிழ்நடையும் இவரால் எழுத முடியாது; இலக்கணப் பிழை மலிந்த கொச்சைத் தமிழ்நடையும் இவருக்கு வராது. இவருடைய தமிழ்நடை பிழையற்ற எளிய நடை; சக்தி வாய்ந்த நடை.

சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டில் புத்துயிர் உண்டாவதற்குக் காரணமாயிருந்த "தேசபக்தன்" பத்திரிகையிலும், பிற்பாடு "நவசக்தி" பத்திரிகையிலும் ஸ்ரீ சாமிநாத சர்மா உதவி ஆசிரியராக இருந்து தொண்டாற்றியவர். ஸ்ரீ திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரிடத்திலும் ஸ்ரீ வ. வெ. சு. ஐயரிடத்திலும் பயிற்சி பெற்றவர். இத்தகையவருடைய இலக்கியத் தொண்டுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லாமற் போய், இவர் பர்மாவை நாட வேண்டியதாயிற்று. அங்கு "ஜோதி" என்ற பத்திரிகையைச் சிறிது காலம் திறம்பட நடத்திவந்தார்.

ஜப்பானியர் படையெடுப்பு வந்தாலும் வந்தது. அது காரணமாக பர்மாவை விட்டுத் தாய்நாட்டுக்கு வந்தவர்களில் ஸ்ரீ சாமிநாத சர்மாவும் ஒருவர். வந்தது முதல் தமிழில் மிகமிக அருமையான புத்தகங்களை எழுதி வெளியிட்டுத் தமிழிலக்கியத்திற்கு அற்புதமான தொண்டுகளைச் செய்து வருகிறார். இது காரணமாகத்தான் பர்மா மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வருவதைப் பற்றி நமது கவலையைத் தெரிவித்துக் கொண்டோம். அப்படி பர்மா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்த போதிலும், நமது சர்மா தமிழ் நாட்டிலேயே இருந்து விடுவாரென்று நம்புகிறோம்.

ஆசிரியரைப் பற்றி இவ்வளவு சொன்ன பிறகு புத்தகத்தைப் பற்றியும் கொஞ்சம் சொல்லலாம். புதிய சீனாவைப் பற்றிச் சொல்லுவதற்கு முன்னால், பழைய சீனாவைப் பற்றியும் இந்நூலாசிரியர் சொல்லியிருக்கிறார். நூறு வருஷங்களுக்கு முன்னால் ஐரோப்பிய நாட்டார் இந்தியாவுக்கு வந்தது போல் சீனாவுக்கும் வணிகராக வந்ததைப் பற்றியும் எழுதியிருக்கிறார். இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கக் கூடியவர்களான ஐரோப்பியர், எப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகச் சீனாவில் ஆதிக்கம் பெற்றார்கள் என்பதை விவரித்திருக்கிறார். 'பட்ட காலிலேயே படும்' என்பதுபோல ஐரோப்பியரின் கொடுமைக்கு ஆளான சீனாவை, எப்படி ஜப்பானும் சேர்ந்து கொடுமைப் படுத்தத் தொடங்கியது என்பதையும் கூறியிருக்கிறார்.

பின்னர், சீனாவுக்குப் புத்துயிர் வந்து புதிய சீனா ஆன வரலாற்றையும் விஸ்தாரமாய்க் கூறியிருக்கிறார். புதிய சீனாவின் பிதாவான ஸன்-யாட்-ஸென்னைப் பற்றியும் புதிய சீனாவின் சுதந்தரத்தையும் கௌரவத்தையும் நிலை நாட்டி வரும் சியாங்-கை-ஷேக்கைப் பற்றியும் ரசமான விவரங்களை எழுதி யிருக்கிறார்.

மகத்தான தியாகிகள் அடங்கிய கம்யூனிஸ்ட் கட்சியினரை சியாங்-கை-ஷேக் எவ்வளவு கேவலமாக நடத்தி வருகிறான் என்பதை இந்நூலில் படிக்கும்போது, சீனா இன்னமும் அடிமை வாழ்வில் உழன்று வருவதன் காரணம் நமக்கு ஒருவாறு புலனாகிறது.

இந்நூலில் "பொதுவுடைமையினரின் புனித யாத்திரை" என்ற அத்தியாயத்தைப் படிக்கும்போது, மயிர்க்கூச்சு உண்டாகாமலிருக்க முடியாது. இதைக் கேளுங்கள்:

"முதலாளித்வத்திற்கும் அன்னிய ஆதிக்கத்திற்கும் விரோதமாக உள்நாட்டிலேயே வளர்ந்து கொண்டு வரும் இந்த ஜனசக்தியை — பொதுவுடைமை இயக்கத்தை — அடியோடு அழித்துவிட பகீரதப் பிரயத்தனங்கள் செய்தான் சியாங். இந்தக் கைங்கரியத்தில் இவனுக்கு ஐரோப்பிய வல்லரசுகள் உதவி புரிந்தன. புதிய புதிய யுத்த தந்திரங்களைக் கற்றுக் கொடுத்தன. * * * * கியாங்ஸி செம்படைக்கு விரோதமாக சியாங்-கை-ஷேக் 1930-ம் வருஷத்திலிருந்து 1934-ம் வருஷத்திற்குள் ஏறக்குறைய ஆறு தடவை படையெடுத்திருக்கிறான். இந்தப் படையெடுப்புகளிலே ஆறு லட்சம் துருப்புகளை உபயோகித்திருக்கிறான்.

ஆனால் செம்படையினர் சரணடையவில்லை; சியாங்-கை-ஷேக் கட்டிய மனிதக் கோட்டைக் குள்ளும் அகப்பட்டுக் கொள்ளவில்லை. 1934-ம் வருஷம் நவம்பர் மாதம் கியாங்ஸி மாகாணத்திலிருந்து கால் நடையாக வெளியேறி விட்டார்கள். சுமார் நான்கு வருஷ காலம் ஒரு கட்டுக்கோப்பாக அமைந்து வந்த அரசாங்கம் — பொதுவுடைமை அரசாங்கம் — நிலை

சென்று கலந்தது. தனது பரிவாரங்களோடும், சகலவிதமான தளவாடங்களோடும் கால் நடையாகப் புறப்பட்டு விட்டதென்று சொன்னால், அப்படிப் புறப்பட்டவர்களுக்கு எவ்வளவு மன உறுதி இருக்க வேண்டும்? எதிரியின் கையில் சிக்கிக்கொள்ளக் கூடாதென்ற ஒரு சங்கல்பத்துடன் கிளம்பின இவர்களை, அந்த எதிரியின் படைகள் துரத்திக் கொண்டே வந்தன. அந்தப் படைகளுக்கு அகப்படாமல் இந்தச் செம்படையினர் சுமார் ஆறாயிரம் மைல் தூரம் நடைப் பிரயாணமாகச் சென்றனர். எந்த நிமிஷத்திலும் ஆபத்து! எந்த இடத்திலும் ஆபத்து! வழியிலே கடக்க வேண்டிய மலைகள் எத்தனை! ஆறுகள் எத்தனை! இவைகளுக்கு நடுவே உடற் சோர்வும் உள்ளச் சோர்வும் அடைந்து மடிந்தவர் எத்தனை பேர்? ஆனாலும் செம்படையினர் இந்த இடையூறுகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் சுமார் ஒரு வருஷ காலம் வரை நடந்து சென்று கடைசியில், வடமேற்கேயுள்ள ஷென்ஸி மாகாணத்தில் பிரவேசித்து, அங்கு யேனன் என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு பழைய மாதிரி பொதுவுடைமை அரசாங்கத்தை ஸ்தாபித்துக் கொண்டனர். இப்படி ஒரு வருஷ காலத்தில் சகல முஸ்தீப்புகளோடும் ஆறாயிரம் மைல் நடந்து சென்று யேனனில் மீண்டும் தங்களை ஸ்தாபித்துக் கொண்டது பெரிதல்ல; இவர்கள், நடை வழியில் கிராமங்கள் தோறும் தங்கள் பொதுவுடைமைக் கொள்கையை இடைவிடாமல் பிரசாரஞ் செய்து, ஜனங்களுடைய வாழ்க்கையிலே ஒரு புதிய ஜீவசக்தியைப் புகுத்திக் கொண்டு வந்திருக்கிறதே அதுதான் பெரிது; மகா அற்புதம்.''

''புதிய சீனா'' என்னும் இந்த நூல், பழைய சீனா - புதிய சீனா ஆகியவற்றை அறிந்து கொள்ளுவதற்கு நமக்குப் பெரிதும் துணையாக இருக்கிறது. அது மட்டுமல்ல. இந்தியாவின் சுதந்தரப் போராட்டத்தில் நாம் எந்த அளவு புதிய சீனாவைப் பின்பற்ற வேண்டும், எந்த அளவில் புதிய சீனா செய்த தவறுகளை விலக்கவேண்டும் என்று தெரிந்து கொள்வதற்கும் ஒத்தாசை செய்கிறது.

அரசியலில் கவலையுள்ளவர்கள் எல்லோரும் அவசியம் படிக்கவேண்டிய புத்தகம்; மிகவும் அழகான புத்தகம்: அருமையான புத்தகம்!

வித்துவான் தியாகராஜ செட்டியார்

[ஆசிரியர்: டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை; விலை: ரூ. 1—8—0.]

சென்ற நூற்றாண்டின் இறுதியிலே கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்தவரும் சிறந்த தமிழறிஞருமான தியாகராஜ செட்டியாரைப் பற்றி, காலஞ்சென்ற டாக்டர் சாமிநாதய்யர் எழுதிய புத்தகம். இது வெறும் வரலாற்று நூலன்று. ரசமான சம்பவக் கோவை. ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் வாழ்ந்த தமிழர்களையும் இசைவாணர்களையும் நம் கண் முன்னாலே நாம் பார்க்கிறோம். திருக்குறளைத் திருத்த முயன்ற ஐரோப்பியப் பாதிரியார் வந்த வழி தெரியாமல் மாயமாய் மறைந்ததை ஐயரவர்கள் சொல்லும்போது விழுந்து விழுந்து சிரிக்கிறோம்.



ஆனந்தக் கண்ணீர்

ஜோமால்.

மிராசுதார் சுந்தரமையர் வீட்டில் ஒரே இரைச்சல். பெருங் கூட்டம் கூடியிருந்தது. கிராமத்து ஜனங்கள் அனைவரும் சுந்தரமையர் வீட்டில் இருந்தனர். சுந்தரமையர் வாசலுக்கும் உள்ளுக்குமாக எத்தனையோ நடையை அலைந்து விட்டார். புதுப்புடவை உடுத்த ஸ்திரீகள் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருந்தனர். இதை யெல்லாம் பொருட் படுத்தாமல் நாதஸ்வரக்காரன் தன் அபஸ்வரத்தை விடாமல் வாசித்துக் கொண்டிருந்தான்.

ஆமாம்; கல்யாண வீட்டில் இந்தமாதிரி அமர்க்களமெல்லாம் இல்லாமலிருக்குமா?

மாங்கல்யதாரண சமயம். அப்பொழுது தான் அந்தப் பாழாய்ப் போன தந்தி வந்து சேர்ந்தது!

தந்திச் சேவகனைக் கண்டதும் கல்யாண வீட்டு வாசலில் இருந்தவர்களிடையே ஒரு பரபரப்பு உண்டாயிற்று. மாப்பிள்ளைக்குத் தந்தி என்றதும் சுந்தர மையர் முகத்தில் கிலி குடிகொண்டது. அவருக்குக் கைகால் ஓடவில்லை. புத்திசாலியான சுந்தரமையர் வெகுநேரம் அப்படி நிலை குலைந்து நின்று விடவில்லை. மாங்கல்யதாரண சமயத்தில் அபசகுனமாகத் தந்தி வந்தது அவர் இருதயத்தைப் பாறாங்கல் மாதிரி அழுத்தினாலும், அவர் சமாளித்துக் கொண்டு தந்தியை வாங்கிக் கொண்டார். அதற்குள் அவர் மனைவி ஓடோடியும் வந்து, "என்ன, என்னமோ தந்தி வந்ததாமே?" என்றாள்.

"ஐயோ! சத்தம் போடாதேடி! வாயை மூடிண்டு கொஞ்ச நேரம் சும்மா இருந்து தொலையேன்!" என்று சுந்தரமையர் அவள் வாயைப் பொத்திவிட்டு, கள்வன் போல் அடி மேல் அடி எடுத்து வைத்துக் கொண்டு உள்ளே சென்றார். சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே ஒருவருக்கும் தெரியாமல் தந்தியை ஒரு புத்தகத்திற்குள் மறைத்து வைத்து விட்டு வெளியே வந்தார்.

மாங்கல்ய தாரணம் ஆகும்போது எல்லோரும் அக்ஷதையை வீசி மணமக்களை ஆசீர்வதித்தனர். நல்ல சமயத்தில் அபசகுனமாக வந்த தந்தி சுந்தரமையர் மனக் கண் முன் நின்று அவரைப் பயமுறுத்தியது.

கண்கள் நீர் மல்க, கைகால்கள் நடுநடுங்க மௌனமாக நின்று கொண்டிருந்த சுந்தரமையரைப் பார்த்து, "பெண்ணைப் பெற்று வளர்த்த பாசம்! பாவம், அவ இளகிய மனத்தை வாட்டுகிறது! ஐயர்வாள், மனசைத் தளரவிடப் படாது! குழந்தையையும் மாப்பிள்ளையையும் ஆசீர்வதியுங்கள்!" என்று நாலுந் தெரிந்த சாஸ்திரியார் சுந்தரமையரைத் தேற்றினார்.

கல்யாணச் சந்தடியெல்லாம் ஒருவாறு அடங்கியபின், அன்று மாலை சுந்தரமையர் மாப்பிள்ளையைக் கிணற்றங் கரைக்கு அழைத்துச் சென்றார். மெதுவாகத் தந்தியை எடுத்து மாப்பிள்ளையிடம் கொடுத்து விட்டுத் திகில் கலந்த ஆவலுடன் நின்றார். தநுர் மாசத்தில் பிராதஸ்நானம் செய்தவனைப் போல் அவர் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

கிணற்றங் கரைக்கு மாப்பிள்ளையை அழைத்துச் சென்று அவர் தந்தியைக் கொடுத்ததற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. தந்தியில் சாவு சமாசாரம் இருந்தால், உடனே வீடு முழுவதும் தீட்டாக்காமல் ஸ்நானம் செய்துவிடலா மல்லவா?

"தந்தியா? எப்பொழுது வந்தது?" என்று கேட்டுக் கொண்டே மாப்பிள்ளை தந்தியைப் பார்த்தார்.

"காலையில் மாங்கல்ய தாரண சமயத்தில் இந்தத் தந்தி வந்தது. அப்பொழுது அபசகுனமாகச் சொல்லி வைப்பானேன் என்று நான் யாருக்கும் தெரியாமல் உடனே மறைத்து வைத்தேன்" என்றார் சுந்தரமையர் திகிலுடன்.

மாப்பிள்ளை தந்தியை வாசித்துப் பார்த்ததும் தாங்க முடியாத சிரிப்புடன், "'மணமக்கள் சகல சௌபாக்கியங்களும் அடைந்து, இன்பமாக வாழ்க்கையை நடத்த எல்லாம் வல்ல கடவுள் கிருபை செய்வாராக!' என்று டில்லியிலிருக்கும் என் நண்பன் சந்திரா அனுப்பிய வாழ்த்துத் தந்தி யல்லவா இது!" என்று சொன்னபோது, சுந்தரமையர் கண்களிலிருந்து பெருகிக் கொண்டிருந்த துக்கக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறியது!



பாரதியார் ஞாபகார்த்த நிதி

ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு, ராம்லால் & கம்பெனி, சென்னை 101 0 0

டாக்டர் அளகப்ப செட்டியார், எம். ஏ., டி. லிட்., எல்எல். டி., கிருஷ்ண விலாஸ்; வெப்பேரி, சென்னை 101 0 0

இசைச் செல்வி, ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள், கொடுமுடி. 100 0 0

எம். எம். பீரான் நாகூர் C/o நாகூர் ஆர்ட் டைரக்டர், நியூடோன் ஸ்டுடியோ, சென்னை 50 0 0

ஸ்ரீ எஸ். வி. வெங்கடராமன், மியூசிக் டைரக்டர், மாம்பலம் 25 0 0

ஸ்ரீ ஆர். டி. ராஜகோபாலன், ஐ.ஏ.எம்.எஸ்., கராச்சி 19 14 0

ஸ்ரீ வி. எஸ். செங்கபதி அன்டு ஸ்ரீ வி.கே. நந்தகோபால், பங்களூர் 15 8 0

ஸ்ரீ வி. ராமநாத், மாதுங்கா, பம்பாய் 15 0 0

ஸ்ரீ ஆர். சோமசுந்தரம், மானம்பூச்சாவடி, தஞ்சாவூர் 12 0 0

ஸ்ரீ பி. ஏ. சங்கரராஜா, ராஜா டாக்கீஸ், ராஜபாளையம் 11 0 0

மிஸ். நிர்மலா துரைசாமி, பெருந்துறை 11 0 0

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் ஜே. சுந்தரலிங்கம், இலஞ்சி, அம்பாசமுத்திரம்; ஸ்ரீபாரத் சங்கர், நியூடோன் ஸ்டுடியோ, சென்னை; ஹரிபாபு, நியூடோன் ஸ்டுடியோ, சென்னை; ஸ்ரீமதி கே. ஆர். செல்லம், சினிமா நடிகை, சென்னை; ஆ. தேசிகன், மானாமதுரை. எம். ராமலிங்க முதலியார் அன்டு சன்ஸ், அம்மாபேட்டை, சேலம் (மௌன்ஸ் புஷ்பவனம் ஸ்டோர்ஸ், மதராஸ், மூலம்); பி. ஆர். வெள்ளையன், யாழ்ப்பாணம்; ரூ. 7—0—0: ஸ்ரீ ஆர். பாலகிருஷ்ணன், அநுமந் நகர்; ரூ. 5—2—0: ஸ்ரீ ராகவன், கல்கத்தா.

ரூ. 5—0—0: டாக்டர் ஏ. முத்துசாமி ஐயர், மதுரை; ஒரு அன்பர், மயிலாப்பூர்; ஸ்ரீமான்கள் சி. ஆர். நாராயணன், கமாலியா; வெங்கடாசலம், நியூடோன் ஸ்டுடியோ, சென்னை; ஒரு அன்பர், பகல்பூர்; எஸ். கணபதி, திருப்பாண்டி, நாகப்பட்டணம்; கே. என். கிருஷ்ண ஐயர், வேலூர்; டி. ராமச்சந்திரன், கோவில்பட்டி; இளஜா, திருவாரூர்; என். லக்ஷ்மண முதலியார், கோயமுத்தூர்; வி. பி. வி. ராமநாதன் செட்டி, தாராபுரம்; ஏ. ராமமூர்த்தி ஐயர், காட்டுப்புத்தூர்; எஸ். என். ஆண்டவர் செட்டி, திருச்சி; ஸ்ரீமதிகள் எஸ். ஞானலோகாம்பிகை, வில்லிவாக்கம்; எஸ். ஞானகோகிலம், வில்லிவாக்கம்; சி. கல்யாணசுந்தர முதலியார், சிதம்பரம்; சலவைத் தொழிலாளர் சங்கம், சிதம்பரம்; ராஜபுத்திர வாசகசாலை, ராஜபாளையம்; வீணை வித்வான் ராமநாதன், சென்னை; கே. என். ராஜன்—எஸ். சுப்பையா செட்டியார், செவ்வாய்ப்பேட்டை; எம். சடையன், பேட்டை; எஸ். நடேசன், பேட்டை; ஏ. அழகர்சாமி நாயுடு, முனிசிபல், சிவகங்கை; வி. கே. மகாலிங்கம், கண்டி, சிலோன். ரூ. 4—0—0: நாங்குநேரி, போர்டு ஹைஸ்கூல், ஆறும் பார மாணாக்கரும், ஆசிரியர்களும் (ஜனாப் பக்கீர் மொஹதீன் மூலம்)

ரூ. 3—4—0: ஸ்ரீ எஸ். வெங்கடாத்ரி ஐயங்கார், ஷண்முகநாதபுரம். ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எம். ஆர். சேதுராமசாமி பிள்ளை, திருப்பத்தூர்; என். சங்கரன், சாலை, திருவனந்தபுரம்; வி. பி. சட்டைநாதன், புவனகிரி; வி. சங்கரன், பித்தாபுரம், கீழ கோதாவரி; ரூ. 2—11—0: ஸ்ரீ எஸ். வெங்கடராமன், உருந்தூர்ப் பேட்டை; ரூ. 2—8—0 ஸ்ரீ ஆர். பத்மநாபன், மாதுங்கா, பம்பாய்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் மருதாடு எஸ். சின்னதம்பி செட்டியார், கடலூர்; எஸ். பி. செந்திலம், மதுரை; கே. ஜி. முகம்மது அலி, நாரபிட்டி, இலங்கை; என். ஆர். ஜமுனா, ராம்நகர், டில்லி; கே. வி. கிருஷ்ணசாமி, [illegible]; பி. கே. துரைராஜன், சாத்தூர்; ஆர். முத்துவீரன், உப்பிலியபுரம்; வி. சீதாராமன், மன்னார்குடி; டி. என். கணபதி, கொடைக்கானல்; கே. ஆர். ராஜகோபால், கல்கத்தா; ஆர். சுப்பிரமணியம், நியூடெல்லி; என். ஆண்டவர், கராச்சி; ஏ. ஆர். சேதுமாதவன், விசாகப்பட்டணம்; டி. வி. லிங்கம், விசாகப்பட்டணம்; முதல் பார மாணவர்கள், தமிழ் நேஷனல் ஹைஸ்கூல், சென்னை (டி. டி. நரசிம்மன் மூலம்); ஏ. பழனியப்பன், மதுரை; ஸ்ரீமதிகள் எம். செல்லலக்ஷ்மி அம்மாள், மதுரை; ஆர். கிருஷ்ணம்மாள், மதுரை; எம். ஆர். லக்ஷ்மி நாராயண செட்டியார், பூர்தருடி; பி. சிவராமலிங்கம், சானிடரி இன்ஸ்பெக்டர், பழனி; ரூ. 1—10—0: ஸ்ரீ எம். என்., வலந்தூர்; ரூ. 1—8—0: ஸ்ரீ எம். அருணாசலம் பிள்ளை, கொழும்பு; ரூ. 1—2—0: ஸ்ரீ ஏ. டி. அருள்ராஜ், பாளையங்கோட்டை; ரூ. 1—1—0: ஸ்ரீமான்கள் பி. ஜெயந்திஸ்வரன், கல்கத்தா; ஆர். சுப்பராமன், பூனா.

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஜி. பாலசுப்ரமணியம், மதுரை; டி. எஸ். சுப்பிரமணிய அய்யர், அனுமந் நகர்; வி. என். ஸ்ரீனிவாசன், கிள்ளைமனூர்; வி. காசி விஸ்வநாதன், திருப்பத்தூர்; என். விசுவநாதன், அம்பாபுரம், குடியாத்தம்; கே. என். ரெங்கநாதன், அல்சூர், பங்களூர்; தமிழ் மாணவர்கள், மூரக்காட்டுப்பாளையம், திருவனந்தபுரம் ஆர். மருதநாயகம், பங்களூர்; ஆர். என். சங்கரநாராயணன், பங்களூர்; கே. ஓ. திருமலையப்பன், பங்களூர்; கே. எஸ். மணி ஐயர், தோட்டப்பாளையம்; எம். சொக்கலிங்கம் பிள்ளை, எட்டயபுரம்; வி. ச. சிவபெருமாள் பிள்ளை, எட்டயபுரம்; க. ர. நல்லசிவன், கருக்கம்பாளையம்; என். டி. சம்பந்தம், ஆரூர்; என். வெங்கடாசலம், ஆரூர்; ஆர். சம்பந்தன், திருப்பாசூர்; கே. ஓய். கிருஷ்ணமூர்த்தி, விசாகப்பட்டணம்; ஏ. ரங்கராஜன், குன்னம்; வி. ஆர். நீலகண்ட சர்மா, பசவன்குடி, பங்களூர்; ஏ. எஸ். குருசாமி, ஆம்பூர்; பூந்தமல்லி போர்டு ஹைஸ்கூல் மாணவர் (ஸ்ரீ பி. ராஜரத்தினம் மூலம்)

பம்பாய்த் தமிழ்ச் சங்கம், மாதுங்கா, ஸ்ரீ எச். சிவராம கிருஷ்ணய்யர் மூலம். 87 5 0

ஸ்ரீ ஏ. வி. ஓய். நாராயணன் மூலம் கதம்ப நிகழ்ச்சி வசூல் 60 0 0

மதராஸி ஸோல்ஜர் செகண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்கள், நியூடெல்லி. 15 0 0

ஸ்ரீ "சுந்தர"	5	0	0
சங்கீத பூஷணம் ஸ்ரீ எ. முத்தையா	5	0	0
வீரோலன், பதுவப்பிள்ளை, ஸ்ரீ என். மாணிக்கம் மூலம்	37	8	0
இலங்கை, பதுவப்ப லெகிலை, ஸ்ரீ என் மாணிக்கம் மூலம்	37	8	0
சென்ட் இண்டியன் ஸ்கூல், நாக்பூர் (ஸ்ரீ எம்.என். வெங்கடராமன் மூலம்)	31	0	0
பாரதி தமிழ்க் கழகம், என். எச் என். பழனி (ஸ்ரீ ஜி. என். ராஜன் மூலம்)	21	10	0
அம்பாலா ஆகாய விமானப் படைத் தமிழன்பர்கள் (ஜனாப் கே. இப்ராஹிம் மூலம்)	28	8	0
உயர் நிலைப்பள்ளி, பாரதி அன்பர்கள், தாராபுரம் (ஸ்ரீ என் வி. விசுவநாதன் மூலம்)	20	8	0
சிறு நாடார், குடியிருப்பு இளைஞர் ஐக்கிய சங்கம், கொழும்பு	20	0	0
ஆசிரிய, மாணவிகள் என். என். பி. பாடசாலை ஹைஹவர் எலிமெண்டரி ஸ்கூல், கொடுமுடி. (ஸ்ரீ கே. என். பெரியசாமி மூலம்)	20	0	0
திருச்செந்தூர், ஸ்ரீ எம். மகாதேவன் மூலம்	9	14	0
மாணவ மாணவிகள், ஐந்தாவது பாரம், நகராண்மை உயர்தரப் பள்ளி, சேலம்	8	8	0
இளைஞர் நன்முயற்சி பேரம்பூர் காரியதரிசி (ஸ்ரீ என். விஸ்வநாதன், மூலம்)	7	7	0
ஆம்பூர் தமிழ் ஹைஸ்கூல் மாணவர்கள்	6	0	0
கல்கத்தா, ஸ்ரீ வி. பி. எஸ். பத்மநாபன் மூலம்:	5	11	0

★

சிப்லா, ஸ்ரீ ரா. ஸ்ரீநிவாஸலு நாயுடு மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ரா. ஸ்ரீனிவாஸலு நாயுடு, ரா. நாராயணன், எ. வி. வெங்கடசுப்பன்—எ. வி. கிருஷ்ணமூர்த்தி. பி. ஸ்ரீதரமன், வி. ஆதிநாராயணன், எம். வி. டி. சாரி; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் என். ஆர். சுப்பையா, கி. வெ. சுப்பிரமணியம், கி. ஜ. ராமன், ஆர். என். அய்யங்கார், எ. விசுவநாதன், ஏ. வீராசாமி; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ரா. பஞ்சாபகேசன், வி. நடராஜன், ஜெ. பாலன், ரா. ஹரிஹரன், ரா. கிருஷ்ணன், ஏ. எஸ். வெங்கடராமன், எம். வி. நீலகண்டன், எம். எஸ். நாகேஸ்வரன், ஏ. பி. ஹரன், ஆர். ராமசேஷன், பா. வெ. சுப்பிரமணியன், பி. எஸ். சுப்பிரமணியம், என். டி. ராஜன், எம். என். பார்த்தசாரதி, ஏ. கிருஷ்ணமூர்த்தி, என். கிருஷ்ணு; ரூ. 1—8—0: ஸ்ரீமான்கள் ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம். என். மணியன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆர். ஏ. ஸ்வாமி, என். ஆர். கிருஷ்ணன், பி. வி. கிருஷ்ணன், ஸ்ரீ நாகராஜன், கே. நாராயணய்யர், ஜி. என். ராமானுஜன், ஏ. பார்த்தசாரதி, பி. ஏ. சாமி, ரா. நடராஜன், என். வெங்கடராமன், டி. டி. எதிராஜன், எம். வி. செல்லம், எம். வி. ராமமூர்த்தி, என். சேஷன், பி. தியாகராஜன், வி. ராமசாமி, வி. என். சுந்தரம், என். வெங்கடராமன், ஆர். வி. மணி, என். கோபாலய்யர், என். சுப்பிரமணியன், என். ஆர். குருசாமி, எம். கே. மூர்த்தி, கே. டி. ஸ்ரீனிவாஸன், அன்பர், ரா. ராமசாமி, ச. தம்பையா, க. உத்திரபதி, எம். எம். பிள்ளை, வி. என். கிருஷ்ணமூர்த்தி, வி. கணபதி, வி. வி. விஜயகம், பி. ராமா, ஆர். கே. லேன், அன்பர், கா. வை. நாதன், ராமச்சந்திரய்யர், எம். ராஜு, ராஜு. கே. என். எஸ். சர்மா. இ. க. விஸ்வநாதன், எம். ஆர். பால், மு. நா. ராஜு. பி. என். ராவ், பி. கே. என். ராவ், அ. வைத்தியநாதன், வி. வெங்கடேச்வரன், பி. டி. என். அய்யர், ஆர். மஹாதேவன், மே. சு. ராமன், கே. ஜி. நாயர், டி. வி. ஹரிஹரன், டி. என். ஸ்ரீனிவாஸன், ஜி ஜகன்னாதன், எம். என். வெங்கடராமன், எம். ராதாகிருஷ்ணன், ஜி. பார்த்தசாமி, எம். என். சாஸ்திரி, ஆர். என். கிருஷ்ணன், டி. கே. சுப்பிரமணியன், டி. என். சுவாமிநாதன், ஆர். கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீநிவாஸன், ஏ. நடராஜன், ஏ. நாகராஜன், என். ராதாகிருஷ்ணன், ஏ. ராமச்சந்திரன், கே. சுந்தரம், டி. என். அப்புசாமி, எம். என். நாகசுப்பிரமணியன், டி. வி. ராமசாமி, ஏ. பி. ஹரன், ஏ. சாரி, ஆர். நாராயணய்யர், என். என். மணி. ஆர். ரங்கநாதன், டி. கே. ராமச்சந்திரன், டி. ராமன், ஆர். வி. ஸ்ரீனிவாஸன், அன்பர், டி. எஸ். விச்வநாதன், ஆர். ரத்தினம், தனிகாசலம், நீலகண்டன், ஜி. நாராயணன், ஆர். ராஜகோபால், கிருஷ்ணன், என். வி. சுப்பிரமணியன், கே. ராமச்சந்திரன், வி. விச்வநாதய்யர், கே. தான், வின்சென்ட், எம். ஏ. நாராயணஸ்வாமி, டி. கே. துரை, ஆர். ஸ்ரீதரமன், மீனாக்ஷிசுந்தரம், ஏ. ஜி. ராஜு, ரங்கராஜன், வி. ஆர். நந்தகோபால், வி. ஜகன்னாதன், ஸ்ரீமதிகள் அலமேலு ராஜன், விசாலாக்ஷி வைத்தியநாதன், லாட்டி மேரி: ரூ. 14—12—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள். (தபால் செலவு நீங்கலாக)

ஆக ரூ. 200—0—0

சென்னை, மயிலாப்பூர், ஸ்ரீ அழ. சா. ஸ்ரீநிவாஸன் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ கம. ராமானுஜன்; ரூ. 3-8-0: ஸ்ரீ அழ. சா. ஸ்ரீநிவாஸன்; ரூ. 2—8—0: ஸ்ரீமான்கள் லெ. மாணிக்கம், லெ. ராமநாதன், பெ. சோமசுந்தரம்.

ஆக ரூ. 16—0—0

இலங்கை; கொழும்பு, ஸ்ரீ மு. பிரமநாயகம் மூலம்:

ரூ. 11—0—0: ஸ்ரீமான்கள் மு. பிரமநாயகம், ச. விநாயகசுந்தரம், மு. திருவடி மகாலிங்கம்; ரூ. 5—1—9: ஸ்ரீ ரு. ஆண்டியப்பன்; ரூ 5—0—0: ஸ்ரீமான்கள் ச. வெயிலுமுத்து, மா. பார்வதிநாதன், ஆ. முருகானந்தம்; ரூ 3—0—0: ஸ்ரீ இ. சர்வேசமூர்த்தி.

ஆக ரூ. 56—1—9

காரைக்குடி, கலா நிலையம், ஸ்ரீ ஜி. சிவராம் மூலம்:

ரூ. 10—0—0: ஜனாப் பி. என். எம். முகம்மது இப்ராஹிம், பியாரிலால் சேட், ஸ்ரீமதி ஏ. ஆர். சந்திரசேகர அம்மாள்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் பி. சேதுச் செட்டியார், என். திருநாவுக்கரசு, சா. நாராயணன், மாடர்ன் எலக்டிரிக் ஸ்டோர்ஸ்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எல். என். ஷண்முகம், த. துரைராஜு, பழ. அருணாசலம், என். கே. பக்கீர் முகம்மது அம்பலம், த. கணபதி, ஸ்ரீ கொண்டைராஜு, ஆர்.எம். சொக்கலிங்கம் செட்டியார்; ரூ 1—0—0: ஸ்ரீமான்கள் பி. என். ஏ. ஏ. பழநியப்பன், நடராஜ பிள்ளை, எச். வெங்கடாசலம், ஜனாப் காதர் முஹைதீன், எம். என். மெய்யப்பன். ஆக ரூ. 69—0—0

மேலூர், கல்வி ஏஜன்டு, ஸ்ரீ என். திருநாவுக்கரசு முதலியார் மூலம்:

ரூ 5—0—0: ஸ்ரீ டி. என். வெங்கட்ராமன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். கந்தசாமி பிள்ளை, கே. வெங்கடசாமி, க. பழ. சுப்பிர

மணியன் செட்டியார், வீ. மன்தாங்கனி ருஷ்த்தர், எஸ். நித்தியானந்தம், அழ. சேவுகஞ் செட்டியார், மு. ம. செவ. சுப்பிரமணியன் செட்டியார், கே. குப்புஸ்வாமி செட்டியார், எஸ். சுப்பிரமணிய அய்யர், ஜே. வி. கே. ஆதியப்ப செட்டியார் அன்டு சன்ஸ், க. ராமநாதன் செட்டியார், எஸ். கே. மகமதுமீரான், எம். வெள்ளைச்சாமி அம்பலம், வீ. மு. ஜெயராம் நாயுடு, ஏ. அரசப்பன், மஹாதேவய்யர், எம். எஸ். வாஸன், டி. தர்மக்கன், பா. பெ. ராமசாமி அம்பலம்; ரூ. 3—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 27—8—0

கொழும்பு, ஸ்ரீ எம். நாகலிங்கம் மூலம்:

ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எம். நாகலிங்கம், டி. எஸ். குருஸ்பர்னாந்து, எஸ். ஏ. வென்சலாஸ் பர்னாந்து, அன்னமரியாள் பர்னாந்து; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் சேவியர் விக்டோரியா, ஏ. பி. தம்பேமுதா, எம். எம். நூர்முகம்மது; ரூ. 1—8—0: ஸ்ரீ ச. ஞானதிக்கம் பர்னாந்து; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஜான் செல்வி சந்திரா, கே. பாலசுந்தரம், வின்சென்று பர்னாந்து, சேவியர் டிமெல், ஜே. டி. ஜெபஸ்தியான் பர்னாந்து, எம். ஜே. பர்னாந்து, ஏ. எம். கலீது, எம். பி. எம். சாஹிப்பு, வ. சுப்பிரமணியம்; ரூ. 8—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 36—8—0

கல்கத்தா, ஸ்ரீ எஸ். ஆர். வெங்கடராமன் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீ வி. ரா. செ. ராமன்; ரூ. 1-0-0: ஸ்ரீமான்கள் பாலலிங்கம், கிருஷ்ணமூர்த்தி, சுப்பிரமணியன், குப்புசாமி, கல்யாணராமன், மதுசூதனன், வரதராஜன், கிருஷ்ணன். ஆக ரூ. 10—0—0

பூனா, ஸ்ரீ ஜி. வி. எஸ். மணி மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீ பி. ஹனுமந்தராவ்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ஜி. வி. எஸ். மணி, ச. ஏகாம்பரம், ஜே. எஸ். மணி; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஆர். ஸ்ரீனிவாசன், டி. ஆர். ஸ்ரீனிவாஸன், எஸ். சம்பந்தம், பி. ஜயராம் நாயுடு, பி. ஆர். சந்தர், வீ. டி. சுந்தரா; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆர். ராமானுஜம், ஏ. சாமி, இ. எஸ். சாஸ்திரி, வி. எஸ். ராவ்; ராகவன், ஆர். ராஜகோபாலன், கே. டி. சாமி, எஸ். தண்டபாணி, பி. வீ. ஜெயராமன், எஸ். ராமசுவாமி, எஸ். பிள்ளை, வி. ஏ. சாமி, டி. ஆர். முதலியார்; ரூ. 7—8—0: இதர வசூல்.

ஆக ரூ. 57—8—0

நாக்பூர் காம்ப், ஸ்ரீ எஸ். வி. ராகவன் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ ஜி. நடராஜன்; ரூ. 3-0-0: ஸ்ரீ எஸ். ராகவன்; ரூ. 2—0—0: ஸ்ரீ எம். கே. மூர்த்தி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் டி. அரவமுதன், டி. ராஜநந்தம்.

ஆக ரூ. 12—0—0

வெளிப்பாளையம்; செந்தமிழ்க் கழகம் காரியதரிசி ஸ்ரீ ஆர். தஷிணாமூர்த்தி மூலம்:

ரூ. 3—0—0: ஸ்ரீ எஸ். பாலசுப்ரமணியம்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எஸ். திருநாவுக்கரசு, வி. கோவிந்தராஜு; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் நி. காளிமுத்து, தோ. ந. வீரராகவன், வி. ராமச்சந்திரன், கே. பாப்பையன், எம். எஸ். அலாவுதீன், த. சங்கரன், த. ப. சுந்தரன், எம். சீதாபதி, வி. பி. நடராஜன், எஸ். ஆனந்தராமன், டாக்டர் பி. எம். சொக்கலிங்கம், என். கைலாசம்; ரூ. 17-13-0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 36—13—0

திருப்பூர், அன்பு மலர் ஆபீஸ், ஸ்ரீ ஆர். ஹீராலால் சேட் மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் வி. கே. பாலசுப்ரமணியன், டி. பி. வெங்கடாசலம், ஆர். ஹீராலால் சேட், கே. எஸ். கன்னுசாமி, பி. எஸ். சோமசுந்தரம்; ரூ. 24—0—0: ஒரு ரூபாய்க் குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 29—0—0

கருங்காலக்குடி தேசிய வாலிபர் சங்கத் தலைவர் மூலம்:

ரூ. 2—0—0: தேசிய வாலிபர் சங்கம்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கே. ஆறுமுகம் பிள்ளை, சேவ. மு. ராமஞ் செட்டியார், ஆறுமுகம் பிள்ளை; ரூ. 9—10—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள். (தபால் செலவு நீங்களாக) ஆக ரூ. 14—4—0

ஈரோடு, ஸ்ரீ எஸ். கணபதி மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீ நடராஜ அய்யர்; ரூ. 1-0-0 ஸ்ரீமான்கள் ஜி. எஸ். சாமநாதன், என். நடராஜன், ஜி. ஆர். பாலகுருமூர்த்தி, டி. என். ராமச்சந்திரன், ராமஸ்வாமி முதலியார், பி. பி. சுப்பராவ், என். எஸ். நாராயண பிள்ளை, எஸ். கணபதி; ரூ. 0—12—0: ஒரு ரூபாய்க் குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 10—12—0

கும்பகோணம், ஸ்ரீ என். பி. சிவலிங்கம் மூலம்:

ரூ. 3—0—0: ஸ்ரீ எம். என். எம். முத்துக் கருப்பன் செட்டியார்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் பி. ஆர். எம். கே. ஜெயங்கொண்டான் செட்டியார், மாணிக்கம் பவர்மில் வல்லியப்பா, சாமிநாதவிலாஸ் சாமிநாதன், எம். அந்தோணிசாமி; ரூ. 4—0—0: ஒரு ரூபாய்க் குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 11—0—0

இலங்கை, கொழும்பு, ஸ்ரீ ம. ப. பிச்சையா மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீ பி. நாராயணசாமி பிள்ளை; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எம். சிவலிங்கம் ஆச்சாரி, எம். பி. பிச்சையா; ரூ. 3—0—0: ஸ்ரீ எஸ். மாடசாமி ஆச்சாரி; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ச. வெள்ளைச்சாமிப் பிள்ளை, எஸ். சாமியார், பி. பள்ளிகொண்டார், பி. ராமலிங்கம், எச். திருவேங்கடம் பிள்ளை; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆர். கே. சண்முகநாதன் பிள்ளை, டி. வி. மூர்த்தி, எஸ். மாடசாமி, டி. ஏ. ராமலிங்கம், மாணிக்கம் பிள்ளை, எஸ். வைத்திலிங்கம் பிள்ளை, பி. ஆறுமுகம் பிள்ளை, மிக்கேல் பொன்னுதோடர், கே. வேலு ஆச்சாரி, டி. கணபதி, டி. கடலைராஜ், ஏ. ராமலிங்கம், வி. அண்ணாமலையார், பி. சுப்பிரமணியம், விஸ்வநாதன் பிள்ளை, வி. பூதலிங்கம் பிள்ளை, பி. பச்சைப்பெருமாள் பிள்ளை.

ஆக ரூ. 50—0—0

சென்னை, ஆர்டிஸ்ட் ஸ்ரீ டி. வி. ஆர். சந்தர் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீ டி. வி. ஆர். சந்தர்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எம். கே. ஏ. வஹாப், ஆர். கோபாலகிருஷ்ணன், பி. எம். ஸ்ரீனிவாசன், டி. கேசவன் நாயர், ஏ. வெங்கடராமன், கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி, வீ. கே. பலராம், டி. வி. கிருஷ்ணசாமி.

ஆக ரூ. 10—0—0

திருவண்ணூர், கல்வி ஏஜண்டு ஸ்ரீ ஜி. நரசிம்மன் மூலம்:

ரூ. 5—0—0: நன்னெறிக் கழகம்; ரூ. 1-2-6: ஜி. நரசிம்மன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். முத்து செட்டி, பி. எஸ். இராதாகிருஷ்ணன். (தபால் செலவு நீங்களாக)

ஆக ரூ. 8—0—0

நாசிறுள், ஸ்ரீ என். ராமநாதன் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் என். ராமநாதன், கி. பாலகிருஷ்ண மேனன்; ரூ. 1—0—0: ஸ்ரீ வி. வெங்கிடசுப்பிரமணியன்.

ஆக ரூ. 5—0—0

* சிலோன், உக்குவிலை, & மாத்தளை பகுதி கல்கி ஏஜண்டு ஸ்ரீ எம். கருப்பையா மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீ எம். கருப்பையா, 'கல்கி' ஏஜண்டு. ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் கே. எஸ். சின்னத்துரை, எஸ். எஸ். அன்வலிங்கம், வி. குமாரசுவாமி, எஸ். முஹம்மது காசிம், எஸ். கல்யாணராமன், எஸ். செல்லையா, எம். டி. ஆப்தீன். ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எம். எஸ். அப்துல் ஸமீ; கே. எஸ். கதிர் தம்பி, அ. கச்சி முகம்மது. 2—8—0: ஸ்ரீ வி. தர்மலிங்கம், ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் சந்திரா ஸ்டோர்ஸ், ஸ்ரீ கணேச ஸ்டோர்ஸ், எம். எஸ். எம். எ. ரஸாக் சாய்பு & பிரதர்ஸ், சொர்ணஸ்டோர்ஸ், எஸ். பழநிமுத்து, வி. வைத்திலிங்கம், எ. பி. பக்கீர் முஹைய தீன் அண்டு கோ., கே. எச். எ. காதர், கே. நவரெத்னம், என். வேலு. கே. பி. ஜூ. எ. ராமஸ்வாமி, எஸ். நாகரெத்னம், எஸ். விஸ்வநாதர், எ. டி. செல்லையா, கே. பஞ்சவர்ணம், கே. எம். கிரிசேனு, கே. ஆர். சோமசுந்தரம், வி. தம்பிராஜா, கே. என் மயில்வாகனம், என். எச். எ. வஹீட், பண்டிட் கே. மயில்வாகனம், எ. அப்துல் அஸீஸ், கே. என். கே. செல்வரெத்னம், எம். எச். அஹமது. ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எம். பீர்முகம்மது? பி. வெள்ளைச்சாமி, எஸ். சோமசுந்தரம், எ. கனகசபை, வி. டி. துரைராஜ், டி. என். குமாரப் பிள்ளை, எம். எஸ். பத்மநாதன், எ. எஸ். பி. சாமிநாடார், எஸ். எம். இஸ்மாயில் அண்டு கோ.,

ஆக ரூ. 113—8—0

* சிலோன், புஸலாவ, கல்கி ஏஜண்டு ஸ்ரீ எ. பி. முத்தையா பிள்ளை மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் செ. ஆ. ரா. ம. ராமநாதன் செட்டியார், அள. அ. இ. அளகப்ப செட்டியார், ப. ள. இ. ராமசாமி அம்பலம், ஜீ. மணிராஜ், மு. அ. தேவராய பிள்ளை, த. க. கா. பாண்டியன், கா. செ. கா. செ. ச., வி. ராம. வீரப்பபிள்ளை, க. ரெங்கசாமி ஆசாரி. பெ. சி. தேவராய பிள்ளை, எஸ் கே. என். நயினா முகம்மது அண்டு கோ., எஸ். ஆர். டி. ரெங்கசாமி—பிள்ளை, மு. ராமசாமி கங்காணி. ரூ. 3— —0: ஸ்ரீமான்கள் ச. அ. ஞானப்பிரகாசம், வி. சுப்பையா பிள்ளை, எம். கே. டி. வெங்கடாசலம் பிள்ளை, மு. வை. நடேச பிள்ளை, ரூ. 2 8—0: ஸ்ரீமான்கள் இ. த. முத்துசாமி பிள்ளை, க. பொன்னுத்துரை, ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் கா. பெ. பாண்டியா பிள்ளை, சுப. மு. சுப்பையா, த. மி. முத்துக் கருப்பன், செ பெ. சுப்பிரமணிய பிள்ளை, மு. பெ. கோவிந்தசாமி, இ. த. இ. சின்னையா பிள்ளை, ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கா. கந்தையா பிள்ளை, டி. ஜீ. சபாரிங்க கா. செல்லையா பிள்ளை, மு. மருதநாயகம் பிள்ளை, எம். பி. பி. சின்னா, மு. ராமையா சேர்வை, ரா. ம. முத்தையா சேர்வை, எம். ஆர். ராமையா, பாலகிருஷ்ண அண்டு கோ., பி. எஸ். குணரத்ன, பி. ஜூ. பிரபாகரன், கே. அருணாசலம், எ. வீரப்பன் கே. பி., பி. பிச்சை, கே. பி., அழகன், வி. நல்லதம்பி பிள்ளை.

ஆக ரூ. 110—0—0

சிலோன், தெல் தோட்டை, கல்கி ஏஜண்ட்ஸ், பி. கே. பி. ஆர். பெரியண்ண பிள்ளை அண்டு கோ., மூலம்:

ரூ. 25—0—0: ஸ்ரீ பி. கே. பி. ஆர். பெரியண்ணன் பிள்ளை அண்டு கோ.; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எம். பி. ஆர். முருகையா பிள்ளை, எம். பெருமாள்; ரூ. 3—0—0: ஸ்ரீ பி. எஸ். ஆதம்; ரூ. 2—4—0: ஸ்ரீ பி. கே. கிருஷ்ண சாமி பிள்ளை; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் வி. ராஜமாணிக்கம், கே. பி. கிருஷ்ண சுவாமி, எஸ். எம். வைத்திலிங்கம், வி. பி. ஆர். பெரியண்ணன் பிள்ளை, யு. முகம்மது ஹஸன், எஸ். ரத்தினசாமி, ஜீ. ராமையா, எஸ். கருப்பையா, எஜ. ஜோதி நாயகம், எஸ். துரைசாமி: ரூ. 1—0—0: எம். பொன்னையா கே. பி., எச். பி. கருணதிலக, எ. பி. டப்ளியு. குணரத்ன எ. ஆறுமுகம், எம். வி. முத்தையா, பி. எஸ். தேவராய பிள்ளை, ஆர். சிவசாமி கே. பி., கே. ஆர். பொன்னம்பலம்.

ஆக ரூ. 68—4—0

* சிலோன், ரங்கலை, கல்கி ஏஜண்டு, ஸ்ரீ கே. இ. செல்லையா தாஸ் மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீ ஆர். கே. ராமசாமி பிள்ளை; ரூ. 6—0—0: ஸ்ரீ கே. ச. செல்லையா தாஸ்; ரூ. 5—0—0: வி. எஸ். எ. ரெங்கநாதர்; ரூ. 4—0—0: எம். கே. வரதராஜ்; ரூ. 2-0-0: ஸ்ரீமான்கள் மல்லையாச்சாரி, எஸ். சின்னையா நாயுடு, ஞானப்பிரகாசம், கந்தசாமி உபாத்தியாயர்; கதிர்வேல் கே. பி., பி. கே. பாஷா சாயபு: ரூ. 1—0—0: பெரிய கருப்பன், எஸ். இ. பிரகாசம், பி. ஜான், எம். கே. ஜான், ஜெயசிங்க, கே. பெருமாள், முத்துலிங்கம், வேலாயுதம், எம். சுப்பையா, எம். சுப்ரமண்ய சாமியார், தங்கையா மாஸ்டர், எஸ். ஆறுமுகம், எம். கே. பழனியாண்டி.

ஆக ரூ. 50—0—0

* சிலோன், மடுல்கெல்லை, கல்கி ஏஜண்டு, ஸ்ரீ பி. கஸ்தூரி பிள்ளை மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ பி. கஸ்தூரி பிள்ளை, 2—0—0: ஸ்ரீ எ. குப்புசாமி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எ. எ. ராஜூ, கே. வேலு, முனிசாமி, எம். பி. ஏகநாயக, எ. ஆர். ராஜூ ஆச்சாரி, பி. ஆர். வி. வைத்திலிங்கம் பிள்ளை, ரூ. 1—8—0: ஒரு ரூபாய்க் குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 14—8—0

* சிலோன், அம்பனாங் கொடை, கல்கி ஏஜண்டு, ஸ்ரீ பி. தர்மலிங்கம் மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீ பி. தர்மலிங்கம், ரூ. 5—0—0: ஸ்ரீ வி. வையாபுரி பிள்ளை; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் கே. நாகேந்திரம், டி. பால்ராஜ் நாடார், எஸ். வி. நடராஜா, எஸ். வி. கந்தையா, வி. லட்சுமண பிள்ளை, வி. சின்னதுரை, எஸ். அய்யாசாமி பிள்ளை.

ஆக ரூ. 29—0—0

* சிலோன், கம்பளை, கல்கி ஏஜண்டு, ஸ்ரீ சே. செல்லமுத்து பிள்ளை மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ நா. செல்லையா பிள்ளை, ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் செ. க. கு. கருப்ப பிள்ளை, க. ப. சுப்ரமண்ய பிள்ளை, இ. த. க. ப. கவுண்ட பிள்ளை, எம். எ. வி. சின்னையா, ஜெயபாரதி ஸ்டோர், கே. ராமச்சந்திரன், கனம்—நடராஜா, கு. வெ. லெட்சுமணன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கா. முத்தையா, அமு. ரா. ம. ராமநாதன் செட்டியார், வ. க. மு. க. முருகப் பிள்ளை அ மு. ரு. முத்துப் பழனியப்ப செட்டியார், த ஆ. அரு. அருணாசலம் செட்டியார், மு. நடராஜா,

---

* கொழும்பு, கல்கி ஏஜண்டு, மெஸர்ஸ் வெஸ்டன் நியூஸ் ஏஜென்ஸீஸ் மூலம் வந்த ரூ. 500-க்கு விவரம்.

சி. தம்பிராஜா, பழ. அடைக்கப்பன், பி. ஜெயவிக்ரம, எம். எம். செய்யது அகமத்.

ஆக ரூ. 31—0—0

* சிலோன், கல்முனை, 'கல்கி' ஏஜண்ட்ஸ் என். ஏ. அபூபக்கர் & பிரதர்ஸ் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் என்.என். நாதன், வி. பி. ஆறுமுகம்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் டி. செல்லத்துரை, வி. என். சூபலிங்கம், வி. கே. வேலுப்பிள்ளை.

ஆக ரூ. 7—0—0

* சிலோன், சக்கானை, 'கல்கி' ஏஜண்டு. ஸ்ரீ ஏ. வி. என். பணியம் மூலம்:

ரூ. 1—0—0; ஸ்ரீமான்கள் பி. தோமஸ், கொடைக்காவலை, கே. பழனியாண்டி, என். லிங்கம், கே. பி., எம். கருப்பையா, மா. முத்தன், ஜெ. பி. ஜெ. துரைராஜா, எம். கதிர்வேல், கே. பி., என். அருணாசல பண்டிதர், ஏ. வி. என். மணியம், எம். தங்கையா.

ஆக ரூ. 10—0—0

ரூ. 40—12—0: வெலிங்டன் நீயூஸ் ஏஜன்ஸீஸ் கொழும்பு. ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ஏ. என். சங்கரபிள்ளை & பிரதர்ஸ்., இ. கே. மூசைதீன், ஏ. என். கோமஸ், ரூ. 3—0—0: ஸ்ரீ சென்ட்ரல் ஸ்டோர், ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஆனந்தபவான், டி. என். பி. நாடார், கே. முத்தையா, ஏ. எம். என். மூசைதீன்.

ஆகமொத்தம் ரூ. 500—0—0

இலங்கை, மட்டுகாமா, கல்கி ஏஜண்டு. எம். விநாசிதம்பி மூலம்:

ரூ. 13—4—0 ஸ்ரீ எம். விநாசிதம்பி; ரூ. 12—8—0: ஸ்ரீ என். முத்தையா; ரூ. 11—0—0: ஸ்ரீ என். லக்மன்; ரூ. 5—0—0; ஸ்ரீமான்கள் வி. ஐ. ஷண்முகம் பிள்ளை, ஜி. சலமன், டி. என். ராமசாமி செட்டியார், டி.என். சின்னசாமி. ஆர்.செல்லதுரை, ரூ.2—0—0: ஸ்ரீமான்கள் கே. சரவணமுத்து; என். ரங்கசாமி நாயுடு. இ. எலிய நாடார், பி. எம். ஜேகப், டி. என். நாட்டு, என். வி. சின்னைய்யா, என். என். அந்தோனி பிள்ளை, ஜு. வி. ஜயன், எம். கப்பையா, ஏ. ஆர். பாலசுந்தரம், ஜே. ஜி. லீல்வா; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. பூலிங்கம், என். பி. ராமசாமி அன்டு பிரதர்ஸ், என். மரியம் பிள்ளை, என். மாணிக்கம், பி. சுந்தரம், எம். ஆறுமுகம், எம். அந்தோனி பிள்ளை. என். என். ஸ்வாமிநாதன், ஜே. டபிள்யூ. செல்லையா, ஆர். பெருமாள் நாயக்கர், ஏ. பெரியகருப்பன், கே.கே. கருப்பன், வி. சமூவேல் ஆச்சாரி, எம். ஆர். காதர், வி. ஐ. அம்பலவாணர். (தபால் செலவு நீங்கலாக)

ஆக ரூ. 95—8—0

யாழ்ப்பாணம் ம. செல்லையா கர்வாஸ்ய மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் சே. இன்னாசி கர்வாஸ்ய, சி. ராஜப்பா; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் என். எம். விக்டோரியா, ஜே. டி. ஜோசப். பி. ஜி. வேலாயுதம், பி. ஜே. வர்க்கீஸ், கே. ஜெனார்தனன், பி. முத்தையா, சி.வி. பாப்புக்குட்டி; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் ஏ.ஜே.என். விக்டோரியா, சி. பாஸ்கரன், பி. பி. ஜோசப், எம். டி. ஜியார்ஜ்; ரூ. 2—0—0: சி. ஏ. விக்டோரியா, என். என். செட்டி & கோ., பி. கணபதி, பி. வி. கருப்புண்ணி, கே. மாதவன், கே. ஏ. பாதன், பத்மனாபன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். என். பெர்னாந்து. என். ஆர். கர்வாஸ்ய, எக்ஸ். எம். பெர்னாந்து என். ஐ. விக்டோரியா, ஆசிர்வாதம் நல்லையா, அற்புதசாமி கர்வாஸ்ய, ம. செல்லையா கர்வாஸ்ய, எம். என். பெர்னாந்து. சி. மேத்தா.

ஆக ரூ. 90—0—0

உத்தமபாளையம், தமிழ் இலக்கிய மன்றம், ஸ்ரீ கா. சி. முகம்மது இஸ்மாயில் மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் கா. சி. முகம்மது இஸ்மாயில், மு. ஜமால் முகைதீன்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் நா. க. சை. கருத்தபீரான், தோப்பு. கா. இ. காதர் பீரான், கூ. துரைசாமி பிள்ளை, ஆர். வி. நரசிம்மையர், கே. வெங்கடப்பு செட்டியார்; ரூ. 4—0—0: மேற்படியார் மூலம் இலைவசய நண்பர்கள்; ரூ. 3—0—0: ஸ்ரீ மீ.கா. முகம்மது இஸ்மாயில்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எம். கே. எம். மீரான், கே. கே. மீரான், கே. கான் முகம்மது, என். எம். நைனார் முகம்மது, டி. என். குருசாமி பிள்ளை; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் உ. பி. உசேன்மீர் உபாத்தியாயர், கா. மீரா முகைதீன், வித்துவான், சி. இராமசாமி.

ஆக ரூ. 65—0—0

பழனி, ஸ்ரீ சி. த. சுப்பிரமணியம் மூலம்:

ரூ.5—0—0: ஸ்ரீமான்கள் கரு. வ. அ. சொக்கலிங்கம் செட்டியார், அ. கந்தசுவாமி கவுண்டர், என். எம். கப்பையா, சி. த. சுப்பிரமணியம், அரு. முத்துசாமி பிள்ளை; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் அ. வி. நாகலிங்கம் பிள்ளை, வி. ச. முத்துராமன் செட்டியார்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் டி. சுப்பன் செட்டியார், கே. டி. என். என். கனி அன்டு கோ. டபிள்யூ. பி. பால்பாண்டிய நாடார், என். ராஜரெத்தினம், அ. அமீது பி. பொன்னுதம்பி, கே. நாசீன், என். சம்பாணி, பாலசோராஜா ஸ்டோர், நா. சுப்பிரமணியம், சோ. சவுந்திரராஜன், எம். என். செல்லையா, கே. வி. டி. முத்தையா பிள்ளை & கோ., என். முகம்மத், எம். கணபதி, த. க. செல்லையா பிள்ளை; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கே. ராமசாமி, கே. பாலகிருஷ்ணன், எம். செங்கசாமி, வெ. முத்துக்காமாக்ஷி.

ஆக ரூ. 67—0—0

ஜெம்ஷெட்பூர் ஸ்ரீ கே. என். ராமஸ்வாமி மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் கே.வி. ராஜன், கே. என். இராமசாமி, டி. வி. சுப்பிரத்தினம், என். ஆர். கிருஷ்ணசுவாமி; ரூ. 9—0—0: ஸ்ரீ எம். என். கோபாலன்; ரூ. 5—0—0: மிஸஸ். சரஸ்வதி லக்ஷ்மணராவ், ஸ்ரீமான்கள் என். சாம்பசிவன், என். ஆர். அனந்த அய்யர், ஏ. பி. அய்யர், தத்தாத்ரேயன், வி. கே. இராஜகோபாலன், பி. ஜி. வெங்கட்ராமன், ஆர். கே. அய்யர், ஆர். முத்துசுவாமி, ஜி. என். இராமன்; ரூ. 4—0—0: ஸ்ரீ வி. எம். சுப்ரமணியன்; ரூ. 3—0—0; ஸ்ரீமான்கள் கே. வி. சம்பந்த், மணிக் நிவாஸ், ஏ. என். வெங்கடேஸ்வர அய்யர், என். ஸ்ரீனிவாசன், பி. கிருஷ்ணமூர்த்தி, என். குப்புசாமி அய்யர், கே. வி. நாராயணன், வி. ராஜகோபாலன், கே. என். சந்திரி, எம். என். வெங்கடசுப்ரமணிய அய்யர், என் என். அய்யர், கே. இராமசுவாமி, சி. கே. சுந்தரம், பி. என். சுப்ரமணியம், என். ஆர். பி. சன்வரன், விஸ்வநாத், ஏ. என். கிருஷ்ணசுவாமி, கே. என். வைத்யநாதன், என். சுந்தரம்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் டி. கிருஷ்ணமூர்த்தி, வி. சுந்தரம், என். ஆர். அமிருத், என். நடராஜன், கே. காவேரி அம்மாள், என். கிருஷ்ணசுவாமி, என். பத்மநாபன், வி. ஆர்.வி. சாமி, ஏ. ராமமிருதம் அய்யர், சி. ஏ. சுப்ரமணியன், கே. வி. இராமச்சந்திரன், வி. கோபால் விஸ்வநாதன், வி. ஆர். நரசிம்மன், என். பி. என். மணி, ஆர். நாராயணசாமி, பி. எம். என். சேஷ, என். நாராயணசாமி, டி. என். ஐயப்புநாதன், ஆர். என். அய்யங்கார், ஏ. வெங்கடேஸ்வர

அய்யர், பி. என். அய்யர், ஆர். கே. அய்யர், ஓ. ஆர். சந்திரசேகரன், எளர்ஜி எபரஸமி ஆபீஸ், என். விஸ்வநாதன், எம். கிருஷ்ண மூர்த்தி; ரூ. 1—0—0: 'பேருரையார். ஒரு அன்பர், ஸ்ரீமான்கள் என். சந்தானம், டி. வி. என். ஆர். சர்மா, ஜே. கணபதி, ஜே. நடராஜன், கே. ஆர். ரங்கநாதன், பி. இராமச்சந்திரன், பி.கே. மூர்த்தி, எப். க்ளேவியர், என். சந்திரசேகரன், ஏ. கணபதி, ஜி. கல்யாணராமன், வி. என். துரை, கே.ஏ. வைத்யநாத அய்யர், வி. வி. ராம். டி. ஜி. ராமசாமி, கே. ஆர். வி. சுப்ரமணியம், கே. ஆர். சல்வர், ஜி. ஆர். அய்யங்கார், பி. கிருஷ்ணன், பி. இராமசாமி, ஆர். வி. இராமச்சந்திர அய்யர், என். பி. இராமையா, கே. பி. சல்வர், பன். ஆர். ரங்கநாதன், பி. ஜி. கோபால், கே. சீதாராமன், ஆர். வி. ராமனன், கே. ஆர். கிருஷ்ணன், வி. சிவகாராஜன், ஜி. கே. சர்மா, கே. என். நாராயணசாமி, எம். என். சுப்ரமணியன், டி. என். சேஷன், பி. என். ராமன், ஆர். சீனிவாசன், பி. என். இராம்நாத், டி. ஏ. சாமன், என். வெராமகிருஷ்ண அய்யர், ஆர். வி. சுப்ரமணியன், ஆர். ஜயராமன், ஆர். கே. அய்யர், என். கே. சேம்பாக்கம், கே. என். ஹரி, அப்பாசாமி, வி. ராமசாமி, ஜி. லக்ஷ்மணன், வைத்யநாத். டி. என். வி. ராகவன், பி. பி. சுப்ரமணியன், என். பி. சுப்ரமணிய ஐயர், டி. ஏ. வாரியர், என். என். ராஜகோபாலன், கே. சங்கர், பி. ஜி. ராவ், கே. வி. பி. ராவ், வி. ஜயகர், கே. என். கல்யாணகிருஷ்ணன், அன்னுசாமி: ரூ. 8—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 280—0—0

எட்டயபுரம், நடுவிற்பட்டி, ஸ்ரீ கே. அப்துல் மஜீத் மூலம்:

ரூ. 2—8—0: ஸ்ரீ கே. அப்துல் மஜீத்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எம். ராஜகோபால மணியகாரர், எம். கருப்பசாமி தேவர், பி. முத்து திருவாசிய மணியகாரர், எம். ராமச்சந்திர மணியகாரர், என். சங்கரலிங்க மணியகாரர், ரூ. 1—8—0: ஸ்ரீமான்கள் கே. பெத்தையா மணியகாரர், என். ராமசாமி கோன்றியார், ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் வி. வெங்கடேஸ்வரட்டய்யா, என். முத்து மணியகாரர், எம். சோமு மணியகாரர், என். கோபால் மணியகாரர்: ரூ. 2—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை (தபால் செலவு நீங்கலாக.)

ஆக ரூ. 21—0—0

கல்கத்தா, "கல்வி" ஏஜன்டு சரஸ்வதி ஸ்டோர்ஸ் (பெ. சுப்பையா பிள்ளை மூலம்:)

ரூ. 11—0—0: ஸ்ரீ என். இராமலிங்கம் பிள்ளை; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் என். தங்கவேலு, என். சமரபுங்கவன்; ரூ. 2—0—0: ஏ. வி. மகாதேவன்; ரூ. 1—0—0: டி. என். ஆர். சர்மா, என். சுப்ரமணியம், பி. சீனிவாச ஆச்சாரி, என். என். இராமன், டி. என். சுப்பிரமணியம், பன். பாலகிருஷ்ணன், ஆ. ஆறுமுகசாமி, ஸ்ரீமதி கோமதி சேஷாத்திரிநாத், ஸ்ரீமதி வி. ஜே. ஸ்வானந்தகமணி, என். சுப்பிரமணியம். கே. என். வெங்கிட்டராமன், ச. ருத்ராவலிங்கம் பிள்ளை, ஏ. ஆர். வெங்கிட்டராமன்: ரூ. 1—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 33—0—0

கல்கத்தா கம்பன் கழகம் (பெ. சுப்பையா பிள்ளை மூலம்):

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் டி. சம்பூர்த்திம், வி. கிருஷ்ணசுவாமி, பெ. சுப்பையா பிள்ளை; ரூ. 1—0—0: என். கே. என். மணி, மு. கனகசபாபதி, என். வி. கிருஷ்ணமூர்த்தி, கே. பரசுராமன், ரீகே. என். விஸ்வநாதன், எம். ஆர். ராகவன், ஏ. விஸ்வநாதன், என். இராமச்சந்திரன், என். மணி, ஆர். என். மணி.

ஆக ரூ. 25—0—0

கொழும்பு, 'காந்தி கழகம்,' காரியதரிசி ஸ்ரீ வி. சவரிமுத்து மூலம்:

ரூ. 25—0—0: ஸ்ரீ பா. ராஜா; ரூ. 15—0—0: ஸ்ரீமான்கள் வி. சவரிமுத்து, அ. சொக்கலிங்கம் செட்டியார், ச. சோமசுந்தரம், பி. ஆர். வெங்கடசுப்பிரமணியம், கோ. சொக்கலிங்கம் முதலியார் & கம்பனி; ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் கே. எல். என். சுப்பையா பிள்ளை, அழ. ரூ. ராமசாமி, பெ. காசி விஸ்வநாதன், என். என். முதலியார்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் அ. சோமசுந்தரம், பெ. அழகர்சாமி, வெ. ரா. காதர் மொய்தீன், ரூ. ம. மாணிக்கஞ் செட்டியார், சூரியன் & கம்பெனி, நா. ராஸ் ரெட்டியார், வி. வி. மொய்து, மு. அருள்சாமி, இ. ஆர். வேலாயுதம், வ. சுப்ரமணியன், டி. இராமானுஜம், கே.என். பெருமாள் முதலியார், மு. வெள்ளசாமி, ப. சாத்தையன் ஆசாரி, ஆ. வெற்றிவேலு, வே. கருப்பையா.

ஆக ரூ. 220—0—0

மாசிக்குப்பம், ஸ்ரீ பத்மநாபன் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் அ. ரு. முருகேச முதலியார், எம். சம்பந்த முதலியார், வாணி நிலையம் இலவச வாசகசாலை: ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் கே. செங்கல்வராய செட்டி, ஏ. எம். அந்தோணி, ஒர் அபிமானி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். வி. சுந்தரம், வி. ஜகநாதன், என். நரசிம்மன், டி. ஏ. நாதன், என். ஏ. குருல், பி. டி. பார்த்தசாரதி நாயுடு, ஆர். வி. ராமச்சந்திரன், எம். பாலன், ஆர். சுவாமிநாதன். ஓ. ஆர். சுப்பிரமணியன், என். என். கிருஷ்ணன், என். ஏ. திருவேங்கடத்தான், ஜி. அமிருதநாதன், பி. என். ஐயங்கார், வி. ஆர். பாலம், ஓர் அபிமானி; ரூ. 3—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 40—8—0

பங்களூர் தனலெட்சுமி இளைஞர்கள் மூலம்:

ரூ. 11—0—0: ஸ்ரீமான்கள் வி. மாயாண்டி செட்டியார், பி. என். ஏகப்ப செட்டியார்; ரூ. 5—0—0: ஸ்ரீ என். சேதுராமன்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எம். கண்ணப்பன், ஏ. ஆர். சுப்பிரமணியன், எம். பெரிய தம்பி, ஆர். எம். ஏ. கே. கருப்பன் செட்டியார்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எம். அழகப்ப செட்டியார், கே. ஆர். வீரப்பன், எம். லெட்சுமணன் செட்டியார், வி. லிங்காரம், ஆர். எம். முத்தையா, வி. டி. இராமநாதன்.

ஆக ரூ. 51—0—0

கல்கத்தா, தென்னிந்தியப் பெண்மணிகள், (லேடீஸ் கிளப் காரியதரிசி, ஸ்ரீமதி மீனாக்ஷி நடேசன் மூலம்):—


ரூ. 10—0—0: ஸ்ரீமதி செல்லம்மாள் நடராஜன், மிஸஸ் ராஜம்மாள் கிருஷ்ணசாமி; ரூ. 5—0—0: ஸ்ரீமதிகள் கௌரி சங்கர், மீனாக்ஷி நடேசன், அலமேலு சுந்தரேசன், மிஸஸ் ராஜ ரமணி சாசி; ரூ. 2—0—0: ஸ்ரீமதிகள் அம்மணி சங்கர், விசாலாட்சி சுப்பிரமணியன், ஞானம்பாள் ஸ்ரீனிவாஸன், சந்திரா கிருஷ்ணசாமி, மிஸஸ் ராம அய்யர், அலமேலு ராமபத்திரன்; ரூ. 1—0—0: ஸ்ரீமதிகள் சங்கரி பாபு, பத்மா கணபதி, லலிதா நாராயணன், என். விசாலாட்சி, கமலாபாய் நாயுடு, மாலதி ஸ்ரீநிவாஸன், மிஸஸ் சந்திரசேகரன், கமலாபாய் பரசுராம்.

ஆக ரூ. 80—0—0

(தொடரும்)

திருத்தம்:—சென்ற இதழில் மதராஸ் சேவா செகண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்கள் திரு. டெல்லி (ஸ்ரீ கே. வி. வெங்கடாசலம் மூலம்) என்றிருப்பதை ஸ்ரீ கே. வி. வெங்கடாசலம், திரு. டெல்லி என்று மட்டும் வாசிக்கவும்.





இப்படி நேரும்படி விட்டிருக்க மாட்டீர்கள்.

அநாவசியமானவற்றை நீங்கள் வாங்கும்போதெல்லாம், உண்மை விலையே நேருவதென்ன? அநேகப் பொருட்களின் விலைகள் அளவு கடந்து உயர்வாயிருக்கின்றன. உங்களுக்கு உண்மையிலேயே தேவையில்லாத பொருட்களை வாங்கும் போதெல்லாம் உங்கள் பணத்தை இழக்கிறீர்கள். வாங்கியே தீரவேண்டு மென்னும் அவசியம் நேர்ந்தாலல்லது எதையும் வாங்காதீர்கள். யுத்தகால விலைகளால் பணத்திற்கேற்ற பொருட்கள் கிடைப்பதில்லை.

நகை, நிலம், கட்டடம், பண்டங்கள், செய்பொருட்கள் ஆகிய எதை வாங்கினாலும் உங்கள் பணத்திற்கு நஷ்டம் ஏற்படக் கூடும். அவற்றின் விலைகள் ஏற்றத் தாழ்வுகளுக்கு உள்ளாகும். இப்போது விலை இறங்கிக் கொண்டிருக்கிறதே தவிர உயரவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த முதலீடுகள் பத்திரமானவை, இலாபகரமானவை:-

- இன்ஷ்யூரென்ஸ்.
- கட்டுறவு சங்கங்கள்.
- சேமநிதி.
- தபாலாபீஸ் சேமநிதி.
- அரசாங்கக் கடன் பத்திரங்கள்.
- நேஷனல் சேவிங்ஸ் செர்டிபிகேட்கள்.


உங்களால் இயன்றவரை மிச்சப் படுத்துங்கள்.

பாதுகாப்பான முதலீட்டினால் கிடைக்கக் கூடிய இலாபம் குறைவாயிருக்கலாம். முதல் பத்திரமாயிருக்கிறது: யுத்த காலத்தில் அதுதான் முக்கியம்.

மிச்சப் படுத்தியதை முதலீடு செய்யுங்கள்.

தேசியப் போர்முனையார் விடுக்கும் தேசிய வேண்டுகோள்

A.R.R. 1112 TM



நல்லதாய்ப் போச்சு

மாமியார் (கோபத்துடன்) :— என்டி, அம்மா! குளிக்கப் போனால்தான் என்ன? ஒரே போக்காய்ப் போய்விட்டாயே! உன் குழந்தை போட்ட சத்தத்தில் வீடு இரண்டாய்ப் போய்விட்டதே!

மருமகள் (எரிச்சலுடன்) :—வீடு இரண்டாய் விட்டதா! ரொம்ப நல்லதாய்ப் போச்சு. நீங்கள் ஒரு வீட்டில் குடியிருங்கள். நாங்கள் ஒரு வீட்டில் குடியிருந்து விடுகிறோம். —சு. மு. சொக்கலிங்கம்.

★

வேறு சாமான்!

வாங்க வந்தவர் :—செட்டியாரே! ஒரு அரை வீசை சர்க்கரை கொடுங்கள்.

செட்டியார் :—வெறும் சர்க்கரை மாத்திரம் கொடுக்க மாட்டோம். இன்னும் ஏதாவது சாமான் வாங்கினால்தான் சர்க்கரை அரை வீசை கொடுப்போம்.

வாங்க வந்தவர் :—அப்படியானால் வேறு சாமானுக்குப் பதில் இன்னும் ஒரு வீசை சர்க்கரையே கொடுத்து விடுங்களேன்!

—ரா. ஸ்ரீ.

★

அதிர்ஷ்டசாலி

ஏழை :—சுவாமி! எனக்கு இருக்க வீடு கிடையாது.

பிரபு :—ரொம்ப சௌகரியம். வீட்டு வரி, வாடகை, எலெக்ட்ரிக் பில் ஒன்றும் கொடுக்க வேண்டாம். சுகவாசி நீர்!

ஏழை :—வேலையும் அகப்படவில்லை.

பிரபு :—பேஷ்! வேலை போய்விடுமோ என்று பயமில்லாமல் நிச்சிந்தையாக இருக்கலாம்.

ஏழை :—சுவாமி! இது விளையாட்டல்ல, கையில் காசுகூட இல்லை!

பிரபு (போய்க்கொண்டே) :— உம்மைப் போல் அதிர்ஷ்டசாலி யார் இருக்கிறார்கள்? வெறும் நடியன்களுக்குப் பிச்சை போட வேண்டிய தொந்தரவும் இல்லை உமக்கு!

—ஆர். சிவகாமி.

நல்ல மார்க்கு

முதல் நண்பர் :—டேய்! கணக்குப் பாடம் தானடா கஷ்டம்? கன்னு கனை கனையாக மார்க் வாங்கலாம்!

இரண்டாம் நண்பர் :—போடா போ! அதெல்லாம் கன்னு போட்றவாளுக்குத்தான். எங்களைப்போல் இருக்கிறவாளுக்குப் பழம் பழமாகத்தான் மார்க் வரது!

—ஜி. எ. ராமன்.

★

என்ன வித்தியாசம்?

ஒருவர் (சங்கீத வித்வானை நோக்கி) :— பாகவதரே, எனக்கு ஒரு சந்தேகம். "பியாக்"குக்கும் "பியாகடை"க்கும் என்ன வித்தியாசம்?

சங்கீத வித்வான் :—இது தெரியாதா? சாக்குக்கும் சாக்கடைக்கும் உள்ள வித்தியாசந்தான். —ஜயலக்ஷ்மி.

★

பேசாத காரணம்?

கணவன் :—ஏன்டி! எதிர் வீட்டுக்குப் போன மாதம் குடி வந்தவளோடு ரொம்ப சிநேகிதமாய் இருந்தாயே, இப்போது அவளோடு பேசறது இல்லையா?

மனைவி :—இல்லை!

கணவன் :—ஏன்?

மனைவி :—ஏனு! உங்களுக்கு என்னன்னு தெரியும்? அவள் போட்டுண்டிருக்கும் நகை யெல்லாம் வெறும் பித்தளைன்னு நேத்திக்குத்தான் தெரிஞ்சது. அவளோடே யார் பேசுவா? —எம். ஆர். நரஸிம்மன்.



தானியங்கள் நாடகம்

சாவி

[தானியங்களுக்குப் பிரதானியம் கொடுத்து எழுதப்பட்ட ஓர் இரட்டையர்த்த நாடகம். உளுந்துக்கு சர்ச்சில் என்றும், கோதுமைக்கு ஸ்டாலின் என்றும், அரிசிக்கு ரூஸ்வெல்ட் என்றும், கடுகுக்கு டிகால் என்றும் கள்ள மார்க்கெட் முதலாளிக்கு ஹிட்லர் என்றும் பொருள் கொண்டாலும் பாதகமில்லை!]

இடம் :—சௌகரியமான ஓர் இடம்.

காலம் :—யுத்தம் முடியும் காலம்.

பாத்திரங்கள் :—தோழர் கோதுமை, பிரஸிடெண்ட் அரிசியார், வின்ஸ்டன் உளுந்து, அடால்ப் கள்ள மார்க்கெட் முதலாளி, தளபதி கடுகு.

தோழர் கோதுமை :—வாருங்கள் அரிசியாரே, வாருங்கள் உளுந்தாரே, உட்காருங்கள், இந்தச் சௌம்யப் பகுதிக்கு வர உங்கள் இருவருக்கும் பிடித்திருக்காது.

மிஸ்டர் உளுந்து :—காரியம் ஆக வேண்டுமென்றால் என்ன செய்வது? உங்கள் சர்வதேச ஜனநாயகக் கொள்கை எங்களுக்குக் கொஞ்சம் பிடிக்கவில்லைதான். இருந்தாலும் இந்த யுத்தத்தில் நீங்கள் எடுத்துக் கொண்ட சிரமம் லேசானதா?

பிரஸிடெண்ட் அரிசியார் :—கள்ள மார்க்கெட் முதலாளியை வென்று ஜனங்களுக்கு உணவு சுதந்திரம் அளிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு நாட்டின் பல பாகங்களைத் தாங்களே ஆக்கிரமித்துக் கொண்டு விட்டீர்களே?

தோழர் கோதுமை :—என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? மக்களுக்கு நாலு வகைச் சுதந்திரம் வேண்டுமென்று தாங்கள் தானே அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? நீரும் மிஸ்டர் உளுந்தாரும் கங்கா நதியில் கூடி ஒரு சாஸனம்கூடத் தயாரித்தீர்களே, மறந்து விட்டீர்களோ? கள்ள மார்க்கெட் முதலாளியின் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்களையெல்லாம் விடுவித்து அவற்றுக்குப் பூர்ண உணவுச் சுதந்திரம் அளிக்கப் போவதாகக் கை யெழுத்துக்கூடப் போட்டீர்களே?

அரிசியும் உளுந்தும் :—ஆமாம், ஆமாம்; வாஸ்தவம், அதை இப்போதும் ஊர்ஜிதம் செய்கிறோம்.

கோதுமை :—அப்படியானால் நான் க. மா. முதலாளியை எதிர்த்துப் போராடி அவன் ஆக்கிரமித்த இடங்களைப் பிடித்து மக்களுக்கு உணவுச் சுதந்திரம் அளிப்பதில் பிசகு என்ன?

உளுந்து :—ஒன்றுமில்லை; தாங்களே எல்லா இடங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டால், அரிசியும் உளுந்தும் போகிற கதி என்ன?

கோதுமை :—உங்கள் இருவரால் மட்டும் க. மா. முதலாளியை எதிர்த்து வெற்றி காண முடியவில்லை; எனவே நான்......

உளுந்தும் அரிசியும் :—ரொம்ப சரி; ரொம்ப சரி; தாங்கள் நன்றாய்ப் போராடினீர்கள். திவ்யமாய் வெற்றிக்கொடி நாட்டினீர்கள். ஆனால், க. மா. முதலாளியை அடியோடு வென்று, அவன் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த பிரதேசங்களை நாம் மூவரும் சேர்ந்து பங்கு போட்டுக் கொண்டு சமாதானமாய் ஆட்சியை நடத்தி வரலாம் என்பதற்காகவே உம்மைத் தேடி வந்தோம்.

அரிசியார் (குறுக்கிட்டு) :—க. மா. முதலாளி நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தால் அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கலாமா? அல்லது என்ன தண்டனை கொடுக்கலாம்?

ஜெனரல் கடுகு (இடைமறித்து) :—இந்த யுத்தத்தில் எனக்கும் கொஞ்சம் பங்கு உண்டு என்பது ஞாபகம் இருக்கட்டும். யுத்தத்துக்குப் பின் எனக்கும் ஏதாவது பங்கு உண்டா?

மற்ற மூன்று தானியங்களும் :—நீ விரும்பினால் உனக்கும் கொஞ்சம் இடம் கிடைக்கும்.

அரிசியார் :—நாடகத்தை இத்துடன் முடித்துக் கொண்டு அடுத்த கட்டத்தை வேறு எங்கேனும் வைத்துக் கொள்ளலாம். பசிக்கிறது! எழுந்திருங்கள்!

[திரை]

ஜோஸியர் சோணாசலம்

பி. ஆர். ராஜரத்தினம்

பண்டிதர் சோணாசலத்துக்கு ஜோஸியத்தைப் பற்றி ஏதாவது தெரியுமோ, தெரியாதோ, அது எனக்குத் தெரியாது. அவர் வயிற்றுப் பிழைப்பைக் கழிக்கும் வழியாக மேற்படி தெரியாத தொழிலைக் கடைப்பிடித்தாரென ஊரில் பிரஸ்தாபம். அவரைத் தெரியாதவர் ஒருவருமிலர். எப்பொழுது கடைத்தெருவிற்குப் போனாலும் அங்குள்ள கருவேல மரத்தடியில் அவரைக் காணலாம்.

காலையில் எழுந்திருப்பார். ஈஸ்வரன் கொடுத்திருக்கும் அகோரப் பசியை அரை வயிறு தணித்துக்கொள்வார். அதற்குமேல் அக்கு அன்னம் இருக்காது. காதுகளில் அணிந்திருக்கும் சிவப்புக்கல் கடுக்கன்களை ஒருமுறை துடைத்துக் கொள்வார். புளி யிட்டுத் துலக்கிய பித்தளை மோதிரத்தை விரலில் மாட்டுவார். தம் தலையில் இருக்கும் ஐந்தாறு சடைகளை ஆங்காங்கு, முடிந்து காருக்காய் மறைத்து விடுவார். அது முடிந்தவுடன் நெற்றியில் இடமன்னியில் பூரணமாய் விபூதியைக் குழைத்து அப்பி, நடுவில் அரையணா அளவு சாந்துப்பொட்டு இட்டுக் கொள்வார். உள்ளே கிழிந்த சட்டை, அதற்குமேல் ஒரு பழைய கோட்டு, பித்தானும் இருக்காது; காலில் பழைய செருப்பு; கையில் மூங்கில் கழி; கக்கத்தில் ஒரு பீத்தல் குடை; ஒரேகந்தல் மயமாயிருக்கும் சுருட்டைப் பாய்; மயிரெல்லாம் உதிர்ந்து போன மான்தோல் ஒன்று; தோளில் ஒரு துணிப்பை; அதில் ஒரு பித்தளைக் குடுக்கை; வெற்றிலைப் பெட்டி; தோளைச்சுற்றி அழுக் கடைந்த நீண்ட அங்கவஸ்திரம் தொங்கும். முகத்தில் அதற்கேற்ற வெண்மைதாடி. இத்தியாதி லக்ஷணங்களுடன் வெளியே கிளம்புவார்.



"என்னப்பா, ரெண்டு மாம்பழமும் என்ன விலை?"
"ஆறணாங்க."
"இந்த ஒன்று மட்டும் எவ்வளவு."
"நாலணாங்க."
"அப்படின்னா நான் அதையே எடுத்துக்கிறேன். இந்தா ரெண்டணா."

சோணாசலத்தின் தினசரி வாழ்க்கை இப்படியாக நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் காலை பண்டிதர் யதாப்பிரகாரம் வீட்டை விட்டுக் கிளம்பலானார். ஐந்தே வயதுடைய அவர் பெண் வந்து காலைக் கட்டிக்கொண்டு, "இன்றைக்கு வாங்கி வரயா, அப்பா? தினம் போல் ஏமாத்தக் கூடாது!" என்று தன் மழலைச் சொல்லில் மொழிந்தது. அவர் முகம் துக்கத்தால் மாறியது. ஆனால் அவளது அழகிலும், பேசும் சமர்த்திலும் ஈடுபட்டவராய், அவளை அன்புடன் அணைத்துத் தடவிக்கொடுத்த வாறு, "இல்லே, பாப்பா! இன்று கட்டாயம் வாங்கி வரேன்!" என்றார்.

"அட ஈஸ்வரா! எத்தனை காலைக்கு இப்படி பச்சைக் குழந்தையை ஏமாற்றுவது? ஒரு பொம்மை வாங்கக்கூட சம்பாதிக்க முடியவில்லையே! இதென்ன பிழைப்பு? உம், இன்றைக்குப் பகவான் என்ன படி அளக்கப் போகிறாரோ, பார்க்கலாம்" என்று அவர் வாய் முணுமுணுத்தது.

அன்று சூரியன் மலைவாயில் விழும் சமயம். முகம் தெரிந்தும் தெரியாததுமாய் இருள் கவிந்து வந்துகொண்டிருந்தது. ஜோஸியர் தம் கடையைக் கட்ட ஆரம்பித்தார். அப்பொழுது 'பட பட' வென்று தூற ஆரம்பித்தது. அவர் அமர்ந்திருக்கும் கருவேலமரத்தடியில் மழைக்காக ஒருவன் தன் சைகிள் வண்டியைக் கொணர்ந்து நிறுத்தி, அதனின்றும் இறங்கினான். சைகிள் விளக்கின் வெளிச்சம் சோணாசலத்தின் முகத்தில் அடித்தது. "கண்ணுக் கெதிரில் நிறுத்தாதே ஐயா! கொஞ்சம் தள்ளி வை!" என்றார் ஜோஸியர். வாலிபன் சைகிளைச் சிறிது நகர்த்தி வைத்து விட்டு, ஜோஸியர் அருகில் வந்து உட்கார்ந்தான்.

"என்ன, ஜோஸி யரே! ஒரு விஷயம் எனக்கு முக்கியமாய்த் தெரிந்தாக வேண்டும். சரியாய்ச் சொல்லு வாயா?" என்று கேட்டான் அந்த வாலிபன்.



"அடே, அப்பா! கரு ரைப் பாரு! எல்லாம் காகக்குத் தருந்தாப் போல்தான் இருக்கும். சரியாய்ச் சொன்னால் அள்ளிக் கொடுப்பாயாக் கும்! நான் வீட்டுக்குப் போவணும், ஐயா! இருட் டிப்போவுது."

"அட! இரு, ஐயா! போவலாம். எனக்கு மட் டும் நல்லாப் பார்த்துச் சொல்லு, நீ கேட்டதைத் தாரேன். ஒரு ரூபா வேணுமா? இந்தா வாங்கிக்கோ! என்ன காரியத்தோடே நான் இந்த ஊருக்கு வந்திருக்கேன்? சொல், பார்க்கலாம்!"

"இந்தாப்பா, மருதை! நீ ஊரைவிட்டு ஊரு என்னத்துக்கு வந்திருக்கேன்னு எனக்கா தெரியாது? சரியோ, தப்போ, சொன்னபடி ஒரு ரூபா கொடுத்துடணும். இல்லாட்டி போறேன்" என்று கொஞ்சம் பிகு செய்தார் பண்டிதர்.

வாலிபனாகிய மருதைக்குத் தூக்கிவாரிப் போட்டது. தன் பெயரைக்கூட ஜோஸி யர் தெரிந்து கொண்டு விட்டாரே என்று ஆச்சரியப்பட்டான். தன் மடியிலிருந்து சில சில்லறை நாணயங்களை எடுத்து, அவர் முன்னால் விரித்திருந்த கம்பளியில் போட்டு விட்டு, "மேலே சொல், ஐயா!" என்றான் படபடப்புடன்.

"உங்கள் ஊரில் இரண்டு வருஷத்துக்கு முன்னே, நீயும் உனது கூட் டாளியும் ஒரு பொம்பளை விஷயமா சண்டை பிடிச்சிங்களா?" என்று ஆரம்பித்தார் சோணாசலம்.

"ஆமாம், ஆமாம்! செசந்தான் சொல்லு. அந்தப் பயல் மட்டும் இப்போ அம்பிட்டா......" என்று பல்லைக் கடித் தான் மருதை.

"கத்தியாலே குத்தி, குளத்திலே தூக்கிப் போட்டுப்பிட்டு அவன் ஓடிப்போய் விட்டா னில்லையா?"

"அட! நடந்தது நடந்தாப் போலவே சொல்றயே! அவன் இப்போ எங்கே அம்பிடுவான்? அதானே வேணும் எனக்கு. அவன் மட்டும் அம்பிட் டான்னு, உம்......... அப்படியே......"

"நீ செத்துப் பூட்ட தாக நெனைச்சுக்கிட்டு அவன் ஊரைவிட்டு ஓடி னான். நீ அவனைப் பழி வாங்கணும்னு தேடிக் கிட்டு இங்கே வந்தி ருக்கே. இந்த ஊரி லேயே இன்னும் கொஞ்ச நாள் இருந்தாயானா, நீ நினைச்ச காரியம் கை கூடும். சீக்கிரம் கை கூடும்—எங்கே எனக் குச் சேர வேண்டிய பாக்கி பணம்? போடு, நான் போறேன்!" என்று பரபரப்புடன் கேட்டார் பண்டிதர்.

மடியைத் தடவிப் பார்த்துப் பாக்கி யிருந்த சில்லறையையும் அவரிடம் எடுத்துக் கொடுத்து விட்டு, "ரொம்ப சந்தோஷம். எல்லாம் சரியாச் சொல்லிப்பிட்டே. நாளைக்கு மத்தியானம் இந்த இடத்துக்கு வந்து உனக்கு இன்னொரு ரூபா தரேன்" என்று சொல்லிவிட்டு சைக்கிளில் ஏறிச் சென்றான் மருதை.

சோணாசலப் பண்டிதரும் மறக்காமல் மகனுக்கு ஒரு பொம்மை வாங்கிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார். அன்றிரவு அவருக் கும், அவருடைய மனைவிக்கும் பின் வரும் சம்பாஷணை நடைபெற்றது.

"என்னத்தே சொல்றது, முருவாயி! இந்த ஊரைவிட்டு எங்கனாச்சும் ஓடிப்போக வேண்டியதுதான். நான் இங்கே இருந்தா, என் உசிரு இந்த உடலிலே இருக்காது, நிச் சயம்!" என்றார் சோணாசலம்.

"என்ன சங்கதி? வெசனமா பேசறீங் களே? எங்கேயாச்சும் மருதையைப் பார்த் தீங்களா?" என்று கேட்டாள் முருவாயி.

"ஆமாம், இதோ, இந்தக் காசெல்லாம் அவன் கொடுத்ததுதான். இம்மா நேரம் அவனுக்குத்தான் ஜோஸியம் சொல்லிக் கிட்டு இருந்தேன்!" என்று நடந்த சங்க தியை அவளிடம் கூறினார்.

மறுநாள் மத்தியானம் மருதை மரத் தடிக்கு வந்தான். அங்கே ஜோஸியர் சோணாசலம் இருந்தாரா? ஏன் இருப்பார்?

பத்மாவின் சுயம்வரம்

செல்லம்

அந்தி மயங்கும் நேரம். மேற்கே நாலா புறமும் செக்கர்க் கிரணங்கள் இறைந்து கிடந்தன. தன் சின்னஞ் சிறு கைகளால் அழகே உருவெடுத்து வந்தது போல் தோன்றும் அற்புத மலர்களைக் கொய்து கொண்டிருந்தாள் பத்மா. மாலை மணி ஆறு அடிக்கவும் கை நிறைய மலர்ந்த புஷ்பத்துடன் அரசமரத்தடிப் பிள்ளையாரை நோக்கி வேகமாக ஓடி வந்தாள். வழியில் ஒரு சிறு கல் தடுக்கவே பூக்கள் நாலா புறமும் சிதற, கீழே விழுந்தாள் பத்மா.

செடி மறைவில் மறைந்திருந்த ரகு, இதைப் பார்த்துக் கைதட்டிச் சிரித்தான். பத்மாவுக்கு அவன் சிரிக்கவும் கோபம் கோபமாக வந்தது. அவளைச் சமாதானப்படுத்த எண்ணி, "பத்மா! மாலையை யாருக்குப் போடப் போகிறாய்?" என்றான் ரகு.

"பிள்ளையாருக்கு!"

"எனக்கில்லையா?"

"உன் முகரக்கட்டைக்கு மாலை வேறு வேண்டுமா? நான் விழுந்ததும் ஓடிவந்து தூக்காமல் கைதட்டிச் சிரித்தாயே!"

"சிரிக்காமல் அழுவார்களாக்கும்!"

"சரி; இனிமேல் என்னோடு பேசாதே. நான் போகிறேன்" என்றாள் பத்மா.

"கோபித்துக் கொள்ளாதே, பத்மா! நானே உனக்கு மாலை போடுகிறேன்" என்று அவள் பின்னலைப் பிடித்து இழுத்தான் ரகு.

"இதோ! அப்பாவிடம் போய் சொல்லுகிறேன்!" என்று ஓடினாள் பத்மா.

"பத்மா! அப்பா விஷயம் தெரிந்து கொண்டு நீயும் என்னைப் புறக்கணித்தால் எனக்கு யார்தான் ஆறுதலளிப்பார்கள்?" என்று வருத்தப்பட ஆரம்பித்தான் ரகு.

"நீ அழுதால் நானும் அழுவேன்" என்று அவனைப் பயமுறுத்தினாள் பத்மா.

"அதோ, அப்பாவே வந்து விட்டார்" என்றான் ரகு.

"பத்மா! அவனுடன் உனக்கு என்ன விளையாட்டு? டேய், ரகு! இனிமேல் பத்மாவுடன் சேர்ந்தால் முதுகுத் தோலை உரித்து விடுவேன்!" என்றார் பத்மாவின் அப்பா.

இரண்டு வருடங்களுக்கு முன்னால், "சென்னைக்கு அபாயம்" என்ற செய்தியைக் கேட்டு எல்லோரும் ஓடினார்களல்லவா? அவர்களில், பத்மாவின் அப்பாவான ராமசாமி அய்யரும் ஒருவர். தம் மனைவி குழந்தைகளுடன் ஊருக்குப் புறப்படும் பொழுது பக்கத்து வீட்டுக்காரரான போலீஸ் கமிஷனர் திடீரென்று உள்ளே நுழைந்து, "ஸார்! எனக்கு ஒரு காரியம் உங்களால் ஆக வேண்டும்" என்றார். "என்னவோ?" என்றார் ராமசாமி அய்யர். "ஒன்றுமில்லை; என் பையன் ரகு உங்களிடம் கொஞ்ச நாள் இருக்கட்டுமென்று பார்க்கிறேன். எனக்கோ இப்பொழுது லீவு கொடுக்க மாட்டார்கள். சமையல்காரன் அப்படியே ஓடிப் போய் விட்டான். ரகுவின் அம்மா தவறி நான்கு வருடமாய் விட்டது. பத்மாவைத்தான் நான் என் நாட்டுப் பெண் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆகையினால் உங்கள் மாப்பிள்ளையை நீங்களேதான் பார்த்துக் கொள்ள வேண்டும். செலவுக்கு நான் மாதா மாதம் நூறு ரூபாய் மணியார்டர் செய்து விடுகிறேன்" என்றார்.

ராமசாமி அய்யரும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பெரியகுளம் வந்து சேர்ந்தார். குழந்தைகளும் அன்னியோன்யமாக விளையாடிக் கொண்டிருந்தன.


ரகுவின் அப்பாவிடமிருந்து ஒழுங்காக வந்து கொண்டிருந்த பணம் திடீரென்று நின்றுவிட்டது. விசாரித்ததில் தகவல் ஒன்றும் தெரியவில்லை. ரகு ஒரு பள்ளிக்கூடத்தில் சித்திரம் வரைவதில் முதல் பரிசு பெற்றான். அதைத் தெரிவிப்பதற்காக வீட்டிற்குச் சந்தோஷமாக ஓடிவந்தான். பத்மாவும் ஆசையுடன் அவன் பரிசைப் பார்ப்பதற்கு ஓடி வந்தாள். ராமசாமி அய்யர் பரிசை வாங்கிப் பார்த்து விட்டு, "ரொம்ப கெட்டிக்காரன்! படம் வரைந்து விட்டாயோ இல்லையோ, பிழைத்துக் கொள்ளலாம். உங்கப்பனிடமிருந்து ஆறு மாதமாய்ப் பணம் வரவில்லை. உனக்கு எப்படிச் சோறு போடுகிறது? தண்டச் சோறு போட யாரால் முடியும்?" என்றார்.

ரகு அழுது கொண்டே உள்ளே சென்றான். பத்மாவால் அவன் அழுவதைப்

பார்த்துச் சகிக்க முடியவில்லை. அவனைச் சமாதானப்படுத்தினன்.

★

ஒரு நாள் பத்மாவைப் போல் ஒரு சித்திரம் வரைந்து கொண்டிருந்தான் ரகு. தற்செயலாக அதைப் பார்த்து விட்ட ராமசாமி அய்யர், "என்னடா வரைகிறாய்?" என்று படத்தைக் கையிலெடுத்துக் கிழிக்கப் போனார். அவர் இரு கால்களையும் பிடித்துக் கொண்டு, "மாமா, பத்மாவின் கல்யாணத்திற்குப் பரிசளிப்பதற்காகவே இதை வரைந்து கொண்டிருக்கிறேன். தயவுசெய்து இதைக் கிழித்துப் போட வேண்டாம். சுபகாரியத்திற்காக வரைந்தது" என்றான் ரகு.



"ஒன்று, யாராவது எனக்கு நூறு ரூபாய் கொடுக்கணும்; இல்லாவிட்டால் நான் கேணியில் விழுந்து உயிரை விட்டு விட வேண்டியதுதான். என்ன, நீங்கள் ஏதாவது உதவி செய்ய முடியுமா?"

"அடபாவமே! நான் ஒரு உதவிகூட செய்யமுடியாத நிலையில் இருக்கிறேனே! எங்கள் வீட்டில் கேணி கூடக் கிடையாதே!"

"அவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டாயா? ஓடிப் போ, என் முகத்தில் விழிக்காதே!" என்று இரைந்தார் ராமசாமி அய்யர்.

"மாமா! கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் போய் வருகிறேன். உங்கள் ஆசீர்வாதம் எனக்கு இருக்கட்டும். என் ஞாபகார்த்தமாக இந்தப் படத்தை மட்டும் பத்மாவிடம் கொடுத்து விடுங்கள்" என்று கூறிவிட்டு மறைந்தான் ரகு.

★

இரண்டு வருடம் ஓடி விட்டது. இந்த இரண்டு வருடமும் ராமசாமி அய்யர் வரன் வேட்டையாடுவதிலேயே தம் காலத்தைச் செலவழித்தார். ஒரு இடமாவது அவருக்குப் பிடித்தமில்லை. ரயில் சத்தமும், தேக சிரமமும், அலைச்சலும், ஆயிரம் ரூபாய் செலவும் ஏற்பட்டதே ஒழிய மாப்பிள்ளை கிடைக்கவில்லை. பத்மாவின் மனம் என்னவோ ரகுவை நினைந்து நினைந்து ஏங்கி நின்றது.

ஒரு நாள் தம் மனைவி சீதாவிடம், "என்னால் இனிமேல் வரனுக்காக அலையவே முடியாது. வேண்டுமானால் இவ்வளவு ஜாதகம் இருக்கிறது. எல்லோரையும் வரவழைத்துச் சுயம்வரமே செய்து கொள்ளட்டும், உன் பெண்!" என்றார் ராமசாமி அய்யர்.

"சுயம்வரம்தான் ஏற்கெனவே செய்துகொண்டு விட்டாளே, உங்களுக்குத் தெரியாதா?" என்றாள் சீதா சிரித்துக் கொண்டே.

"யாரை சுயம்வரம் செய்திருக்கிறாள்?"

"அந்த நாளில் நான் உங்களை எப்படி சுயம்வரம் செய்து கொண்டேனோ அது மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்களேன்!"

"நீயும் நானும் அடுத்தடுத்த வீட்டிலிருந்தோம்; பிராப்தமும் இருந்தது; முடிந்தது!"

"கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவாருண்டோ! அழகுக்கு அழகாய் வீட்டிலிருந்த பிள்ளையை விரட்டி விட்டு, ஊர் ஊராக ஜாதகத்தைத் தூக்கிக் கொண்டு அலைவார்களோ?"

"நீயும் அந்தத் துரோகியைத்தான் சொல்லிக் கொண்டிருக்காயாக்கும். ஓடிப்போனான், பிச்சைக்காரப் பயல்! அவனுக்கா என் பெண்ணைக் கொடுப்பேன்?"

"அவன் அப்பா போலீஸ் கமிஷனராக இருந்தபொழுது மாத்திரம் அடிக்கடி என் பெண் அதிர்ஷ்டக்காரி, மாமனார் போலீஸ் கமிஷனர், பிள்ளை டிஸ்டிரிக்ட் சூப்பிரண்டாக வருவான் என்று பெருமையடித்துக் கொள்ளுவீர்களே! அந்த அடுத்த வீட்டுச் சம்பந்தம் மறந்து விட்டதோ, இப்பொழுது!" என்றாள் சீதா.

"போன காரியத்தைப் பற்றிப் பேசாதே! மேலே நடக்கவேண்டியதைச் சொல்லு."

"நீங்கதான் சுயம்வரம் செய்துகொள்ளச் சொல்லி விட்டீர்கள். அப்படியே செய்தால் போகிறது!" என்றாள் சீதா.

★

அன்று வெள்ளிக் கிழமை. பத்மா பூஜை செய்துகொண்டிருந்தாள். "அம்மா! தபால்!" என்ற குரலைக் கேட்டு ஓடி வந்தாள். தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

போலீஸ் கமிஷனர் ரகுவின் அப்பாவிடமிருந்து வந்த கடிதம் அது. அதில், தான் சண்டையால் மேல் நாடுகளுக்குச் சென்றதால் கடிதமே எழுத முடியவில்லையென்றும், தான் திரும்பி வந்து இப்பொழுதுதான் ஒரு மாதம் ஆகிறதென்றும், மாம்பலத்தில் ஒரு பெரிய பங்களா வாங்கி இருப்பதாகவும், அதற்கு, 'பத்மா விலாஸ்' என்று பெயரிட்டிருப்பதாகவும், ரகுவுக்கு வேலூரில் டிஸ்ட்ரிக்ட் சூப்பிரண்டெண்டாக வேலையாகி ஒரு மாத மாகிறதென்றும் எழுதியிருந்தார். இந்தக் கடிதத்தைப் படித்ததும் ராமசாமி அய்யருக்குப் பெருமை நிலைகொள்ளவில்லை. "என்ன வேண்டுமானாலும் சொல்லு, உன் பெண் அதிர்ஷ்டசாலிதான்!" என்றார் அய்யர்.

"நீங்கள் தான் சுயம்வரம் செய்து கொள்ளச் சொல்லி விட்டீர்களே! அவளுடைய அதிர்ஷ்டம்போல் ஆகிறது" என்றாள் சீதா, பத்மாவைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே.

பத்மாவும் ஆனந்தத்தினால் இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டாள்.

பெரியவாள் கதை


பார்ஸி கனவான்

ஸ்ரீ சுத்தானந்த பாரதி

விக்தர் ஹ்யூகோவின், 'லே மிஸரபிள்ஸ்' (தமிழில், 'ஏழை படும் பாடு') உலகிற் சிறந்த நாவல். ஜாங்வல்ஜான் அதன் கதாநாயகன். அவனை ஒற்றர் தொடர்கின்றனர். ஒற்றரை அவனும் தொடர்ந்து ஏமாற்றுகிறான். அப்படி ஒற்றருடன் சாதுரூலைத் தாய்ச்சி விளையாடினவருள் ஐயர் ஒருவர்.

பாரிஸில் ஐயர் மாதாம் காமா என்ற வீராங்கனையுடன் ஆறுமாதம் இருந்து தம்மைத் தயாரித்துக் கொண்டார். அந்த வீட்டு வாசலில் ஒற்றர் பழியாய்க் கிடந்தனர். ஐயர் அடிக்கடி தமது மனைவிக்குக் கடிதம் எழுதினார். "நான் பாரிஸிலேதான் இருப்பேன். வேண்டுமானால் நீயும் வா", "எனக்குப் பாரிஸ் பிடிக்கவில்லை. நான் இன்னும் ஒரு மாதத்தில் கப்பலேறி பிரஜீல் நாடு சென்று கரிபால்டியைப்போல் அங்கே தொழில் செய்து வாழ்வேன். வேண்டுமானால் நீயும் அங்கே வா"—இந்த மாதிரி கடிதங்கள் சும்மா வந்தன. எல்லாக் கடிதங்களையும் ஒற்றர் பார்த்துக்கொண்டு, ஒரு மாதம் வரையில் தூங்கி விழுந்தபிறகு பிரஜீல் செல்லும் கப்பல்களில் குறிவைத்து மும்முரமாகத் தேடினார்கள்.

காமா வீட்டிலிருந்து ஐயர் எட்டிப் பார்க்கவில்லை. வெகு காதலுடன் ஒற்றர் கண்ணுறங்காது பார்த்தும் பயனில்லை. ஐயர் சாவர்க்காரை எதிர்பார்த்திருந்தார். சாவர்க்கார் கப்பலிலிருந்து தப்பிக் கரைக்கு வந்து மார்ஸேல்ஸில் மீண்டும் பிடிபட்டுக் கைதியாய் விட்டார். இன்னும் முப்பது கஜம் வந்திருந்தால் மோட்டார் தயாராயிருந்தது. ஐயர் பிரெஞ்சு சர்க்காருக்கு சாவர்க்காரைப்பற்றி அறிவித்துவிட்டு மறுபடியும் ஒருவாரம் எங்கோ பதுங்கினார். ஒற்றர் அவரைத் தூக்கிச்செல்லப் பார்த்தனர். ஒரு நள்ளிரவில் மாதாம் காமா வீட்டுக் கொல்லைப்புறத்திலிருந்து ஒரு பார்ஸி கனவான் புறப்பட்டான். அவன் சந்து திரும்பியதும் மோட்டார் தயாராயிருந்தது. பாரிசுக்கு அடுத்த வண்டி நிலயத்தில் மோட்டார் நின்றது. கனவான் புகைவண்டியில் ஏறினான். மறுநாள் ரோமாபுரியில் இறங்கி ரோமன் கலையின்பத்தை நுகர்ந்தான். முடிவில் ஒரு கடையில் தாந்தேயின் 'டிவைன் காமெடி' வாங்கிப் புதுச்சேரியில் ஒரு நண்பருக்கு உடனே பதிவுத் தபாலில் அனுப்பினான். நேபிள்ஸில் கப்பலேறினான். அங்கே எப்படியோ நிழல்வாடை வீசியது. ஐயர் சட்டென்று பையிலிருந்து கணக்குப் பேரேட்டை யெடுத்துப் புரட்டத் தொடங்கினார். யாரோ பம்பாய் வர்த்தகன் என்று நிழல் பின்னிட்டுச் சென்றது.





ஒற்றர் பிரஜீலிலே ஐயரை எதிர்பார்த்து அமேஜான் நதிக்கரையில் ஜபம் செய்து கொண்டிருந்தனர். ஐயர் [illegible] நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்.

ஈறுகளில் ரத்தம் கசியக் கூடாது

—முன் ஜாக்கிரதையாக இருங்கள்!



உடனே கவனிக்க வேண்டும் — ரத்தம் கசியும் ஈறுகள் பற்சொத்தைக்கு ஆரம்பம். கிப்ஸ் "எஸ். ஆர்." டூத் பேஸ்ட் ஈறு வியாதிகளையும் பயோரியா ஜிஞ்ஜிவிடிஸ் முதலிய பல வியாதிகளையும் தடுத்து கட்டுப் படுத்துகிறது. இவ் வியாதிகளை பற்களை நாசமாக்குவதுடன் அவைகளை சீறுத்தாவிடில் தேக ஆரோக்யத்தையே பாழாக்கும். அதில் உள்ள சோடியம் ரெஸினோலியேட் ஈறு உபாதைகளுக்கு பல் வைத்தியர்களின் ஔஷதம். பற்களையும் ஈறுகளையும் ஆரோக்யமாக வைத்திருக்க கிப்ஸ் "எஸ். ஆர்." வழக்கமாக உபயோகியுங்கள்.

Gibbs

"S.R." TOOTHPASTE



G.08. 17-33 TM

D & W. GIBBS LTD., LONDON, ENGLAND

கல்கி



KALKI மார்ச் 4, 1945 4 அணா





T.S.R.&Co
Araikeeraividhai
Thailam
PERFUMERS, KUMBAKONAM.

ஸ்ரீ வாசவி சகாயம்.

எமது நன்றி

எனது 50-வது வருஷ பூர்த்தியை
முன்னிட்டு நடைபெற்ற பொன்விழா
வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்
பாக நடத்தித் தந்து கௌரவித்த
நண்பர்களுக்கும், வாழ்த்துத் தந்திகள்
ஆசிச் செய்திகள், வாழ்த்துப் பத்தி
ரங்கள், சன்மானங்கள் முதலியன
அனுப்பிய சகோதர சகோதரிகளுக்
கும், எல்லா சங்கத்தார்களுக்கும்
எனது மனமார்ந்த வந்தனங்களைத்
தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

★

P. A. ராஜு செட்டியார்
ஜவுளி வியாபாரம்,
கோயமுத்தூர்.

Regd. No. M. 4392

Edited, Printed and Published by K. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladen Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.